விலை : 20.00
பக்க்ங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 08 வெள்ளிக்கிழமை (25.10.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 310

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## வட மாகாண சபையின் கன்னி அமர்வு இன்று

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் கன்னியமர்வு இன்று காலை கைதடியில் உள்ள மாகாண சபைக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

இதற்கு முன்னதாக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் மாகாண சபையின் புதிய கட்டடமும் திறந்து வைக்கப்படவுள்ளது.

சுமார் 25வருடங்களிற்கு பிற்பாடு வடக்கு மாகாணம் மாகாண சபைத தேர்தலினை முதன்முறையாக எதிர் கொண்டு தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெருவெற்றியடைந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆடசியமைத்தது.


வடக்கு மக்களினால் தெரிவு செய்யப்பட்ட இந்த தமிழ் அரசிற்கான முதலாவது அமர்வு இன்று இடம்பெறவுள்ளமை தமிழ் மக்களிடையே பலத்த எதிர்பார்ப்பினையும் வரவேற்பினையும் கொண்டுள்ளது. தென்பகுதிஇனவாதிகள் மாகாண சபை

19-ம் பக்கம் பார்க்க

## காணி, பொலிஸ் அதிகாரங்களை

# சட்டப்படி வெல்வோம்!

## முதலமைச்சர் அதிரடி



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் ஊடாக காணி, பொலிஸ் அதிகாரங்களை சட்டப்படி நடைமுறைப்படுத்தவுள்ளோம் என நேற்று அதிரடியாக அறிவித்துள்ளார் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரும் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன். (19ஆம் பக்கம் பார்க்க)

# பொதுநலவாய மாநாட்டை இந்தியாவே புறக்கணி!

## தமிழக சட்டசபையில் தீர்மானம்



(சென்னை)

கொழும்பில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் பொதுநலவாய மாநாட்டினை இந்தியா முற்றிலுமாக புறக்கணிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நேற்று வியாழக்கிழமை தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா முன்மொழிந்த அத் தீர்மானத்தில் தமிழக மக்களின் ஒருமித்த கருத்தற்கும, உணர்வுகளுக்கும் மதிப்பளித்து பொதுநலவாய மாநாட்டில் பெயரளவிற்குக் கூட இந்திய நாட்டின் சார்பாக பிரதிநிதிகள் அந்த மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது, இது குறித்த இந்தியாவின் முடிவை உடனடியாக இலங்கைக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும் மேலும் இலங்கை தமிழர்கள் சுதந்திரமாகவும் சிங்களர்களுக்கு இணையாகவும்வாழ இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும் வரை பொதுநலவாய கூட்டமைப்பில் இருந்து இலங்கையை தறகாலிகமாக நீக்கிவைப் பதற்கான நடவடிக்கையை

19-ம் பக்கம் பார்க்க

## அதிகளவான நிதியுதவி வடக்கிற்கு அவசியம்

### மத்திய அரசிடம் முதல்வர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

போரினால் அதிகளவு பாதிக்கப்பட்ட வடக்கு மாகாண சபைக்கு ஏனைய மாகாண சபைகளைவிட அதிகளவான நிதியுதவிகள் வழங்கபபட வேண்டும் என வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மத்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களுக்கான செயலமர்வு ஒன்று நேற்று யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரி

19-ம் பக்கம் பார்க்க

# எழிலன் வழக்கு முல்லை. நீதிமன்றில்

(கொழும்பு)

அரசாங்கத்தின் உத்தரவாதத்தையடுத்து இராணுவத்தினரிடம் சரணடைந்து, பின்னர் தகவல்கள் ஏதும் தெரியாதுள்ள விடுதலைப் புலிகளின் முன்னாள் திருகோணமலை அரசியல்துறை பொறுப்பாளர் எழிலன் உட்பட 5 பேர் தொடர்பான விசாரணைகள் வரும் டிசம்பர் மாதம் 2 ஆம் 3 ஆம் திகதிகளில் நடைபெறும் என முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை அறிவித்திருக்கின்றது.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் இவர்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டிருந்த ஆட்கொணர்வு மனுக்களைப் பரிசீலனை செய்த மேல் நீதிமன்ற நீதிபதி, அவர்கள் தொடர்பான

19-ம் பக்கம் பார்க்க



ஐ.நாவின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலக இலங்கை பணியகத்தின் புதிய பிரதிநிதி குலோமி அப்பாஸ், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவை பாதுகாப்பு அமைச்சில் சந்தித்தபோது..

# சர்வதேச விசாரணைக்கு ஒத்துழைக்க முடியாது

## இலங்கை அரசு இறுக்கம்

(கொழும்பு)

வன்னியில் விடுதலைப் புலிகளுடனான போரின்போது நடந்துள்ளதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் பற்றிய குற்றச்சாட்டுக்கள் தொடரபான எந்தவொரு சர்வதேச விசாரணைக்கும் ஒத்துழைக்கப் போவதில்லை என இலங்கை அரசாங்கம் கூறியுள்ளது.

பி.பி.சி. ஊடகத்திற்கு பாதுகாப்பு செயலாளர் வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர முடிவுக்கு வந்த உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின்போது பாரதூரமான மனித உரிமை மீறல்கள் நடந்துள்ளதாக குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன.

சுமார் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்

19-ம் பக்கம் பார்க்க

# இலங்கைத் தூதுவர் இந்தியாவுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

பொதுநலவாய மாநாட்டை பிரதமர் மன்மோகன் சிங் புறக்கணித்தால் இந்தியா தனிமைப்படுத்தப்பட்டு விடும் என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் எச்சரித்துள்ளார்.

இலங்கையில் உள்ள தமிழர்கள் சுதந்திரமாக வாழ அரசு நடவடிககை எடுக்கும்வரை அந்த நாட்டை பொதுநலவாய அமைப்பில் இருந்து தற்காலிகமாக நீக்கி வைக்க வேணடும் என்று நேற்று தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பில் கருத்து வெளியிடும்போதே இலங்கைத தூதுவர் பிரசாத் காரியவசம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இந்தியப் பிரதமர் மாநாட்டிற்

19-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

மானிப்பாய் ஆலடிச் சந்தியில்....

MDC Micro System Development Centre

**Micro System** இன்

புதிய காட்சியறை திறப்புவிழாவை

முன்னிட்டு...

intel pentium i3 3.20Ghz
Intel Board G61
DDR III 2Gb
H/D 500Gb
Sumsung LED 19"
UPS, Keyboard, Mouse
1Y, 2Y, 3Year Warranty
60000/=

Huawei Dongle 7.2Mb- 2 999/=

நம்ப முடியாத விலையில்

59 999/=
Dell
intel pentium i3
DDR III 2Gb
H/D 500Gb
DVD R/W

Kingston 4Gb - 899/-
Kingston 8Gb - 1099/-

12 999/=
Sumsung 19"
AOC !9"
HP 19"

Sunshine 650W
Tree Ace 650w
DPC 650W
4499/=

Hp 2000
intel pentium i3
DDR III 2Gb
H/D 500Gb
DVD R/W
61 999/=

7500/= upto
Laptop Battery All Modal

Laptop Display all Size 8500/= upto

25/10/2013 முதல் 3 நாட்கள் வரை மட்டுமே

ஆலடிச்சந்தி யாழ்வீதி, மானிப்பாய்.
021 3218462, 077 2487082

(4351)

# குடும்பஸ்தர் குத்திக்கொலை; சந்தேகத்தில் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடத்தில் குடும்பஸ்தர் ஒருவரினை குத்திக் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதாகிய 3 சந்தேக நபர்களினையும் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10.30 மணியளவில் வண்ணார்பண்ணை ஆறுகால்மடப் பகுதியில் உள்ள ஒழுங்கையொன்றில் மிருசுவிலினைச் சேர்ந்தவரும் ஒரு பிள்ளையின் தந்தையாருமான தங்கராஜா சரத்பாபு (வயது 29) என்பவர் கத்தியால் குத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இக் கொலைச் சம்பவம் தொடர்பில் கொலையுண்டவரின் மனைவியின் தகப்பனாரும் உறவுமுறையுடைய இரு இளைஞர்களும் யாழ்.பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட இவர்களிடமிருந்து கிறீஸ் கத்தியொன்று பொலிஸாரினால் மீட்கப்பட்டதோடு சட்டவைத்திய பரிசோதனையின் பின்னர் யாழ்.நீதிமன்றில் நேற்றைய தினம் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது வழக்கினை விசாரணை செய்த யாழ்.நீதவான் பெ.சிவகுமார் சந்தேக நபர்கள் மூவரினையும் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

மேலும் மூன்றாவது சந்தேக நபரினை எதிர்வரும் 4 ஆம் திகதியன்று அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டார். (செ-4)

# தமிழ் மக்களின் அபிலாசைகளை வடமாகாண சபை நிறைவேற்ற வேண்டும்

## ஆளுநர் சந்திரசிறி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அபிலாஷைகளை மாகாண சபை உறுப்பினர்கள் நிறைவேற்றுவார்கள் என்று தாம் நம்புவதாகவும் நேர்மையான விதத்திலும் கடுமையாகவும் உழைத்து எல்லோரும் ஒன்றிணைந்து இந்த மாகாண சபையை முன்னேற்றி எதிர்காலத்தில் செழித்தோங்கச் செய்ய வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளர்.

வடக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கான செயலமர்வு ஒன்று நேற்று காலை யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபைக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற முன்வருவீர்கள் என்று நம்புகின்றேன். மாகாண சபையைப் பொறுத்தமட்டில் சொல்வது இலகு. ஆனால் நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினமானது. நான் எதிர்பார்க்கின்றேன் நீங்கள் அனைவருமே மாகாண சபையின் முறைமைகளை நன்கு அறிந்து மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவீர்கள் என்று. எதிர்காலத்திலும் இவ்வாறான நிகழ்வுகளைத் தொடர்ந்து செய்வோம். மாகாண சபைக்கு வரும் சவால்களுக்கு நீங்களே முகம் கொடுக்க வேண்டும். மாகாணசபை முறைமையில் பல விடயங்களை நீங்கள் கற்க வேண்டியுள்ளது. சட்ட ஒழுங்குப்படி செயற்பட வேண்டும்.

பாரிய அபிவிருத்திப் பணிகளை குறுகிய காலத்திற்குள் செய்து முடித்துள்ளோம். அத்தோடு வடக்கில் தேர்தலை நடத்தி ஜனநாயக சூழல் உள்ளதை உறுதிப்படுத்தியுள்ளோம். இங்கு சுதந்திரமான நியாயமான தேர்தல் ஒன்று நடத்தப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# மரண அறிவித்தல்



அமரர் சுப்பிரமணியம் தியாகராஜா

பிறப்பு : 28-07-1928 இறப்பு : 23-10-2013

கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், சின்னாலடி, காரைநகரை வசிப்படமாகவும், தற்போது இல. 52A, வஜிர வீதி, கொழும்பு 05ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கம்பஹா பிரபல வர்த்தகர் **சுப்பிரமணியம் தியாகராஜா** 23.10.2013 (புதன் கிழமை) அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற வர்த்தகர் சுப்பிரமணியம் மற்றும் செல்லாச்சிப்பிள்ளை தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற மாணிக்கம் அவர்களின் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு மற்றும் வள்ளியம்மை தம்பதியினரின் மருமகனும். **காலஞ்சென்ற மகேஸ்வரன் (முன்னாள் இந்து கலாசார அமைச்சர்)** மற்றும் பரமேஸ்வரன், விக்கினேஸ்வரன், ஞானேஸ்வரன், துவாரகேஸ்வரன் திருமகள் ஆகியோரின் தந்தையாரும், விஜயகலா, சுதர்சினி, ஜெயசங்கரி, நிறைமதி, சிவமலர், சுரேந்திரன் ஆகியோரின் மாமனாரும். பவதாரணி, பிரணவன், பவித்திரா, நிலுக்ஷன், நீபன், நிதுரன், கோகுலன், நேத்திரா, அனோஜன், அஸ்வின், அரவின், சஜீவன், சரன், சேயோன், சயன், சகி ஆகியோரின் பேரனாரும் சிவசோதி, பாலச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம், சரஸ்வதி, செல்லம்மா, மீனாட்ச்சிப்பிள்ளை, சின்னாட்ச்சிப்பிள்ளை, இராசநாயகம், மாரிமுத்து, சுப்பிரமணியம் மற்றும் யோகம்மா பரமேஸ்வரி அம்பலவாணர் பூரணம் மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் மற்றும் தாட்சாயினி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சதாசிவம், கணபதிப்பிள்ளை குமாரசுவாமி, வைத்திலிங்கம், பரமசிவம் மற்றும் ஏனாதிநாதன் ஆகியோரின் சகலனும் ஆவார். ஆன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 52A, வஜிரா வீதி, கொழும்பு 05 இலுள்ள இல்லத்தில் வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் 27.10.2013 (ஞாயிற்றுக் கிழமை) காலை 7.00 மணிக்கு இல்லத்தில் ஆரம்பமாகி தகனக்கிரியைகள் காலை 9.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

**- தகவல் : பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

தொ.பே. இல.: 0777 306473 (பரமேஸ்வரன்)
: 0777 306304 (சுரேந்திரன்)
: 0777 674119 (துவாரகேஸ்வரன்)

(சி-5278)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## கல்லறையை நோக்கி...

ஒருவருடைய உண்மையான குணம் அவர் இந்த உலகத்தை விட்டுப் போகும் சமயத்தில்தான் தெரியுமாம். ஓஷோ என்ற பெரியவர் இதைப்பற்றி ஒரு கதை சொல்லியிருக்கிறார் பார்ப்போம்.

வசதியான ஆள் ஒருவன் இருந்தான். இருந்தாலும் அவன் அந்த வசதியை அனுபவிக்கத் தெரியாதவனாகவே இருந்தான். ஒரு நாள் அவன் சாகக் கிடந்தான். சொந்தபந்தமெல்லாம் கூடி நின்றார்கள்.

பிள்ளைகளெல்லாம் அப்பா இறந்த பின் அவரை எப்படி கல்லறைக்குக் கொண்டு போவது என்பதைப்பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். மூத்தபிள்ளை ''அப்பா இறந்தபின் அவரைக் கல்லறைக்குள் கொண்டு போவதற்கு வாடகைக்கார் ஒன்றை எடுக்கலாம்'' என்றான்.

அடுத்தபிள்ளை அவர் ஒரு விலையுயர்ந்த காரில் போகவேண்டும் என்று ஆசைப்பட்டுக்கொண்டிருந்தார். ஆனால், வாழ்க்கையில் ஒருநாள் கூட அது நடக்கவில்லை. கடைசியில் கல்லறைக்குப் போகும் சமயத்திலாவது அவர் அதில் போய்ப் பார்க்கட்டும் என்றான்.

இதைக்கேட்ட பெரியவன், ''விபரம் தெரியாமல் பேசாதே... உனக்கு ஒன்றும் தெரியாது. இறந்தபின் எதையும் அனுபவிக்க முடியாது. எந்தக்காராக இருந்தால் என்ன? அது உயர்ந்ததா, மட்டமானதா என்று அவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது? விலையுயர்ந்த கார் வேண்டாம்'' என்றான்.

இதைக்கேட்டதும் இன்னொரு பிள்ளை சொன்னான். ''நீங்கள் இருவரும் பேசுவது கொஞ்சம்கூட அர்த்தமில்லாத விடயம். கல்லறைக்கு உடம்பை எடுத்துக் கொண்டு போவதற்கு கார் எதற்கு?

எனக்கு வேண்டிய ஒருத்தன் சவ வண்டி ஒன்று வைத்திருக்கிறான். அவனைக் கூட்டிக் கொண்டு வருகிறேன். அது சிக்கனமாகவும் வசதியாகவும் இருக்கும் என்றான். இதைக் கேட்ட இன்னொரு மகன், காரும் வண்டியும் எதற்கு? அவர் என்ன கல்யாணமா செய்து கெர்ள்ளப்போகிறார்? இறந்தவுடன் அவரைத் தூக்கிக் கொண்டு போய் நம் வீட்டுக்கு வெளியேயுள்ள குப்பைத் தொட்டியில் போட்டுவிடலாம். மாநகரசபை வண்டி தானாகவே அவரைத் தூக்கிக்கொண்டு போய்விடும். நமக்குச் செலவே இல்லை! என்றான்.

இந்த நேரத்தில் சாகக்கிடந்தவர் மெதுவாகக் கண்ணைத்திறந்து... "எங்கே என் செருப்பு?" என்றான். செருப்பை எடுத்துக் கொடுத்தார்கள். அவர் அதை வாங்கி தட்டுத் தடுமாறி எழுந்து நின்று பிள்ளைகளைப் பார்த்து,

"பிள்ளைகளே... நான் இன்னும் கொஞ்ச நேரம் தான் உயிருடன் இருப்பேன். அதற்குள் கல்லறைக்கு கால் நடையாக நடந்தே போய்விடுகிறேன். உங்களை அங்கே சந்திக்கிறேன். நீங்கள் ஊதாரித்தனமாக செலவு செய்யத்திட்டம் போடுகிறீர்கள்.

நான் காரில் போகவேண்டும் என்று கனவுதான் கண்டேன். ஏனென்றால் கனவு செலவில்லாதது. அதனால் தான் கண்டேன்'' என்று சொல்லிவிட்டு அவன் பாட்டுக்கு நடந்துபோய் கல்லறையில் உட்கார்ந்துவிட்டான். ஒருவன் எப்படிப்பட்டவன் என்பது சாகும் சமயத்தில் தான் தெரியும் என்பதை விளக்குவதற்காக சொல்லப்பட்ட கதை இது.

இந்தக்காலத்து ஆள் ஒருவன் சாகக் கிடந்தான். சுற்றிவர சொந்தபந்தமெல்லாம் உட்கார்ந்திருந்தார்கள். கடைசியாக டாக்டர் வந்து கையைப் பிடித்துப்பார்த்து ''இறந்து விட்டான்'' என்று சொன்னார். அவனை பாடையில் வைத்து தூக்கிக்கொண்டு போனார்கள். பாடையில் இருந்தவன் பாதி வழியில் எழுந்து உட்கார்ந்து கொண்டு "நான் இன்னும் சாகவில்லை. உயிர் இருக்கிறது'' என்று மெதுவாக சொல்கிறான்.

தூக்கிக்கொண்டு போன நான்கு பேரில் ஒருவன், "நீ செத்துப் போய்விட்டதாக டாக்டரே சொல்லிவிட்டார்... அவரை விட நீ என்ன விடயம் தெரிந்தவரா? பேசாமல் படு'' என்று சொல்லிவிட்டு எல்லோரும் இன்னும் வேகமாக நடக்க ஆரம்பித்தார்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழக மீனவர்கள் இலங்கை கடலுக்குள் அத்துமீறி வருவதை தடுக்கவேண்டும்

## இந்தியாவை வலியுறுத்துகிறார் கோத்தா

(சென்னை)

இந்திய மீனவர்கள் எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்து, பாரிய இழுவைக் கப்பல்களை பயன்படுத்தி, எமது மீனவர்களின் வருமானத்தை சூரையாடுகிறார்கள். சிங்கப்பூரில், சிங்கி இறால்கள், நண்டுகள், பெரிய இறால்களை பெருமளவு விலைக்கு விற்கிறார்கள் என இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதனால், எமது கடல் எல்லையில் உள்ள மீன்வளம் காலப்போக்கில் முற்றாக மறைந்துவிடும் எனவும் அவர் கூறினார்.

பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தமிழ்ப் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களை நேற்று முன்தினம் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது,

சிங்கப்பூரிலுள்ள நவீன ஹோட்டல்களில் இலங்கையின்சிங்கி இறால்கள், நண்டுகள், பெரிய இறால்களை பெருமளவு விலைக்கு கோடீஸ்வரர்களுக்கு விற்று வருகிறார்கள்.

இதுபற்றி அறிந்து கொண்டதான், இவை எங்கிருந்து இவ்வளவு பெருமளவில் சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதென்று விசாரித்த போது, அவற்றை தமிழ்நாட்டிலுள்ள மீன் முதலாளிகள் தங்களுக்கு ஏற்றுமதி செய்வதாக ஹோட்டல் நிர்வாகிகள் எனக்கு தெரிவித்தார்கள்.

இவ்விதம் தான் இந்திய மீனவர்கள் எமது கடல் எல்லைக்கு அத்துமீறி பிரவேசித்து எமது மீனவர்களின் வருமானத்தை சூறையாடுகிறார்கள்.

இந்திய மீனவர்கள் எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்து தங்களின் பாரிய இழுவைக் கப்பல்களை பயன்படுத்தி இலங்கையின் கடல் அடிமட்டத்திலுள்ள குஞ்சு மீன்களைக் கூட அழித்துவிடக்கூடிய அளவுக்கு எமது நாட்டின் மீன்வளத்தை சூறையாடுகிறார்கள்.

இதனால், வடபகுதியில் கடந்த 20 ஆண்டுகால யுத்தத்தினால் கடலுக்கு செல்ல முடியாது வறுமையில் வாடிக்கொண்டிருந்த எமது மீனவர்கள் தொடர்ந்தும் தங்கள் வருமானத்தை இழந்து அல்லற்படுகிறார்கள்.

இந்தியாவும், தமிழ்நாடும் இலங்கை மீனவர்களுக்குஉதவிசெய்யவேண்டுமாயின் தமிழ்நாட்டு மீனவர்களின் இந்த அத்துமீறல் பிரவேசங்களை உடனடியாகத் தடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இருநாட்டு கடற்றொழிலாளர்களும் இப்பிரச்சினை குறித்து ஆராய்ந்து தீர்த்துக் கொள்ளலாம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு தடவை யோசனை கூறியிருந்ததை ஞாபகப்படுத்தினார்.

இலங்கை கடற்றொழிலாளர் கடலுக்கு செல்வதற்கு இருந்த தடைகள் அனைத்தும் இப்போது நீக்கப்பட்டுள்ளன. இனிமேல் அவர்கள் கடலுக்கு தங்கு தடையின்றி செல்வதற்கு எமது கடற்படையினர் அனுமதிப்பார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# கூட்டுறவாளர் தின விழாவும் கௌரவிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் 91 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவும் கௌரவிப்பு விழாவும் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் சமாசத் தலைவர் நா.கணேசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர் க.பிரபா, அதன் உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன், கௌரவ விருந்தினர்களாக மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் கே.சுசீந்திரன், யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் இ.இராஜாராம், யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் பொ.மோகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது கடந்த ஆண்டின் சிறந்த அங்கத்தவர், பணியாளர்களுக்கான கௌரவிப்பும், சமாசத்தின் 91ஆவது சர்வதேச கூட்டுறவுதின போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (அ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 140 | 100 - 120 | 130 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 120 |
| தக்காளி | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 50 |
| கோவா | 50 | 60 | 60 |
| கரட் | 40 | 40 | 80 |
| பூசணி | 25 | 30 | 40 |
| புடோல் | 30 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 170 | 160 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 120 |
| பாகற்காய் | 100 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 100 |
| கருணைக் கிழங்கு | 40 | 40 | 60 |
| பயற்றங்காய் | 100 | 100 | 120 |
| லீக்ஸ் | 100 | 80 | 120 |
| பீற்றூட் | 20 | 15 | 50 |
| கறிமிளகாய் | 100 | 60 | 140 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 80 |
| போஞ்சி | 100 | 100 | 140 |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 25 |
| தேசிக்காய் | 350 | 300 | 300 |
| தேங்காய (ஒன்று) | 50 | 50 | 35 - 50 |

# இராசி பலன்

25.10.2013
(ஐப்பசி 08, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
சஷ்டி பிற்பகல் 12.49 மணிவரை
திருவாதிரை பிற்பகல் 1.28 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
இரண்டாம் ஐப்பசி வெள்ளி

**மேடம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், புதிய கூட்டாளிகளைச் சேர்க்கும் எண்ணம் மேலோங்கும், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள்.

**இடபம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், நண்பர்கள் சிலருடன் இணைந்து வெளியிடங்களுக்கு செல்லும் எண்ணம் உருவாகும், கொள்கையை கொஞ்சம் தளர்த்துவீர்கள்.

**கடகம்** பயணத்தால் பலன் கிடைக்கும், அன்றாட பணிகள் நன்றாக நடை பெற இறைவனைப் பிரார்த்திப்பீர்கள், அலைச்சல்களால் மனச் சோர்வு ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**சிங்கம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு.

**கன்னி** வீட்டை சீரமைப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், கௌரவமான நாள்.

**துலாம்** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், எதிர்பாராத சம்பவங்கள் நடைபெறலாம், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** எதையும் யோசித்துச் செய்வது நல்லது, பிரயாண பயமுண்டு, வரவும் செலவும் சமனாகும், வேலைச்சுமைகள் அதிகரிக்கும், போசனசுகமுண்டு

**தனுசு** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆனந்தமான நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**மகரம்** தேவைகள் பூர்த்தியாகும் நாள், தொழில் வளர்ச்சிக்கு தொல்லை தந்தவர்களே தோள் கொடுத்து உதவ முன் வருவர், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாக பேசி சமாளிப்பீர்கள்.

**கும்பம்** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை பெறுவீர்கள், தொழில் சிந்தை மேலோங்கும், வியாபார நலன் கருதி புதிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**மீனம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடி கொள்ளும், உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், போசன சுகமுண்டு, வளர்ச்சிப் பாதைக்கு வித்திடுவீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விளையாட்டு கழகங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளையாட்டுக்கழகங்கள் மற்றும் தேவாலயம் என்பவற்றிற்கு தளபாடங்களும் உபகரணங்களும் நேற்று கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வு குடத்தனை கிறிஸ்து நற்தூது நற்பணியகத்தில் மருதங்கேணி பிரதேச செயலர் என். திருலிங்கநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பொற்பதி சென்.பீற்றர்ஸ் , குடத்தனை சுடர் ஒளி, நாகர் கோவில் தெற்கு வெண்மதி, வத்திராயன் உதயசூரியன், அம்பன் சிவசோதி, ஆளியவளை அருணோதயா, குடத்தனை செல்வா, நகர்கோவில் கிழக்கு நாகதீபம் ஆகிய விளையாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களும் கட்டைக்காடு சென். மேரிஸ் தேவாலயத்திற்கு தளபாடங்களும் வழங்கப்பட்டன.


இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ.சுமந்திரன், மாவை.சேனாதிராஜ, ஜனாதிபதியின் சட்டத்தரணி கனகேஸ்வரன், ரில்ஹோ ஹோட்டல் உரிமையாளர் திலக் , பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளர் பூ.சஞ்சீவன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-9-19)







# விளம்பர பலகைகள் விசமிகளால் சேதம்



(கரணவாய்)

கரவெட்டிப் பிரதேசத்தில் தோட்ட வெளிகளில் நாட்டப்பட்டுள்ள விளம்பரப் பலகைகளை விசமிகள் சேதப்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரவு குஞ்சர் கடைக்கு அண்மையிலுள்ள தோட்ட வெளியிலிருந்த விளம்பரப் பலகைகள் தேசப்படுத்தப்பட்டுள்ளன.

அத்தோடு, கடந்த வாரம் கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு முன்பாகவுள்ள தோட்ட வெளியில் வைக்கப்பட்டிருந்த விளம்பரப் பலகையும் சேதமாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவங்கள் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-6-60)

# யாழ்ப்பாண கல்வி வலயத்தில் அதிபர்கள் பதவி வெற்றிடம்

யாழ்ப்பாண வலயத்தில் வைத்தீஸ்வராக் கல்லூரி (1-ஏ பி), கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி(1-ஏ பி), செங்குந்தா இந்துக் கல்லூரி (1-சி), வண்நாவலர் மகாவித்தி.(வகை2) ஆகிய பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடங்கள் நிலவுகின்றன.

இப்பாடசாலைகளுக்கு அதிபர், ஆசிரியர் தரங்களில் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேலும் 1ஏபி, 1சி பாடசாலைகளுக்குரிய அதிபர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கும் அதிபர்கள் பயிற்றப்பட்ட பட்டாரி அல்லது அதற்கு மேற்பட்ட தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அதிபர் சேவையில் ஒரே நிலையில் உள்ளவர்கள் விண்ணப்பிக்கும் இடத்து அவரது சேவை மூப்பு கஷ்டப்பிரதேச சேவைக்காலம் கருத்திற் கொள்ளப்படும்.

ஆசிரியர் சேவையில் உள்ளவர்கள் வகுப்பு 1 அல்லது 2-I ஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். (இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாதவிடத்து மட்டும் ஆசிரிய சேவையில் உள்ளவர்களது விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்)

அத்துடன் நியமனம் பெறும் அதிபர்கள் ஆகக் குறைந்தது 3 வருடகாலம் அப் பாடசாலையில் சேவையாற்றக் கூடிய வயதெல்லை உடையவராயிருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை நிர்வாகக் கிளையில் பெற்று எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கேட்டுள்ளார். (அ)

# 66ஆவது ஆண்டுவிழாவும் கலை நிகழ்வுகளும்

(மானிப்பாய்)

கைதடி தென்கிழக்கு விநாயகர் சனச்மூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு விழாவும் கலை நிகழ்வுகளும் நாளை சனிக்கிழமை இரவு 8 மணி முதல் இடம்பெறவுள்ளது.

விநாயகர் சனசமூக நிலையத்தின் தலைவர் செ.மயூரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பிணர் மாவை சேனாதிராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலனும் வடமாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன் மற்றும் கே.சயந்தன், சாவகச் சேரி பிரதேச சபை தவிசாளர் சி.துரைராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கைதடி விக்னேஸ்வரா வித்தியாசாலை அதிபர் சிவானந்தன், கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலய அதிபர் ரவீந்திரன், கைதடி கிராம சேவகர் இரவீந்திரன் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். தொடர்ந்து பரிசில் வழங்கலும் இடம் பெறவுள்ளது. (அ-9-23)

# தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின்கீழுள்ள நுணாவில் பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நூலகங்கள் ஊடாக ஆற்றல் மிக்க சமூகத்தை கட்டியெழுப் புவோம் எனும் தலைப்பிலான கருத்தமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நுணாவில் பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சாவகச்சேரி நகராட்சி மன்றத் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

கருத்துரைகளை நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலை அதிபர் திருமதி த.ஜீவகுமார்,சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மருத்துவ மாது திருமதி பி.ராஜரட்ணம், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பி.தளிர்ராஜ் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

சிறுவர் பகுதி நூலக இரவல் வழங்கும் சேவையை சாவகச்சேரி நகராட்சி மன்ற செயலாளர் கா.சண்முகதாசன் ஆரம்பித்து வைக்கவுள்ளதுடன், இலவச நூலக அங்கத்துவ நிகழ்வை நகராட்சி மன்றத்தின் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி க.கணேசலிங்கம் ஆரம்பித்து வைக்கவுள்ளார் என நூலகர் அறிவித்துள்ளார்.

* * *

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட நூலகங்கள் இணைந்து நடத்தும் புத்தகக் கண்காட்சியும் புத்தக விற்பனையும் இன்றும் நாளையும் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை நடைபெறவுள்ளது.

அத்தோடு வெற்றிலையும் வாழ்வியலும் எனும் தலைப்பிலான முப்பரிமாணக் கண்காட்சியும் மேற்குறித்த நாட்களில் இடம் பெறவுள்ளதுடன், விசேட விலைக்கழிவில் புத்தகங்கள் விற்பனை செய்யப்படவுள்ளது.

ஆர்வமுள்ளவர்களை கலந்து பயனடையுமாறு பிரதேச சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (அ-9-23-29)

# யாழ்.ஜெய்ப்பூரில் கைநூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சுகாதார மருத்துவக் கழகத்தின் அனுசரணையுடன் யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தினால் ஜெய்ப்பூர் நிறுவனப் பயனாளிகளின் நன்மைகருதி வெளியிடப்படவுள்ள முழங்காலுக்கு மேலானதும் முழங்காலுக்கு கீழானதுமான துண்டங்களின் பராமரிப்பு எனும் கைநூல் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன் கிழமை காலை 10.30 மணிக்கு ஜெய்ப்பூர் நிறுவன வளாகத்தில் வெளியீடு செய்யப்படவுள்ளது.

ஜெய்ப்பூர் நிறுவனத் தலைவி டாக்டர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெறும் இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை முறிவுநெரிவு வைத்திய நிபுணர் டாக்டர் கே.உமாபதி கலந்துகொள்ளவுள்ளதாக அந்நிறுவனத்தின் நிர்வாக செயலாளர் ஆர்.இரட்ணசிங்கம் அறிவித்துள்ளார். (அ)

# இளைஞர் சேவை மன்ற முக்கிய கூட்டம்

(மானிப்பாய்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் முக்கிய கூட்டமொன்று நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் லக்ஷன் தலைமையில் இடம்பெறவுள்ள கூட்டத்தில் எதிர்கால நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் முக்கிய பல முடிவுகளும் தீர்மானங்களும் எடுக்கப்பட வேண்டியிருப்பதால் அனைத்து மாவட்ட இளைஞர் கழக சம்மேளன உறுப்பினர்களையும் தவறாது சமுகம் தருமாறும் கேட்கப்பட்டுள்ளது என மாவட்ட இளைஞர் கழக சம்மேளன செயலாளர் வினோதினி ஸ்ரீமேனன் அறிவித்துள்ளார். (அ-9-23)


# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலய பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய கலையரங்கில் பாடசாலை அதிபர் இரா. ஸ்ரீநடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய முகாமைத்துப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் அழகேஸ்வரசாமி ஸ்ரீகரன் கலந்துகொள்ளவுள்ளார்.

மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி லோகேஸ்வரி ஸ்ரீகரன் வழங்கி வைப்பார். (அ-5)



யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 160 ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியீடு அண்மையில் நடை பெற்றது. இந்நிகழ்விற்கு விருந்தினர்கள் [illegible] வரவேற்கப்படுவதையும் ஆண்டு நிறைவு நூல் பிரதியை தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் [illegible] வழங்க, கல்லூரியின் பழைய மாணவர் லயன் டாக்டர் வை.தியாகராஜா பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மனித உரிமை மீறல் குறித்து மாநாட்டில் முறையிடப்படும்

## ஐ.தே.கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல் விவகாரங்களை பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களின் கவனத்துக்குக் கொண்டு செல்வதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.**

மஹிந்த அரசு மேற்கொண்டுவரும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளால் அதிருப்தியடைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி, பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளதுடன், இது தொடர்பான கட்சியின் உத்தியோகபூர்வ அறிவிப்பு அடுத்த செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் விடுக்கப்படுமெனவும் அறிவித்துள்ளது.

பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கும் சர்வதேசத் தலைவர்களுக்கு இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் குறித்து தெளிவுபடுத்துவதற்கான ஆவணங்களைத் திரட்டும் நடவடிக்கைகளிலும் கட்சி தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

இதற்கமைய மாத்தறையில் கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர அரசியல் ரீதியாக திட்டமிட்ட வகையில் பழிவாங்கப்பட்ட சம்பவம் குறித்து விசேட கவனத்தைச் செலுத்தவும் ஐ.தே.க. தீர்மானித்துள்ளது.

இதற்கான பேச்சுகள் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மத்தியில் இடம்பெற்று வருகின்ற நிலையில் கட்சியின் அடுத்த செயற்குழு கூட்டத்தில் இது குறித்து விசேடமாக ஆராயத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக உறுதிப்படுத்தினார்.

இதேவேளை, மேற்படி விடயம் தொடர்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து பொது எதிர்க்கட்சிகள் பேச்சுகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# யாழ். சாரணர் துருப்பின் 70 ஆவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியின் 7ஆவது யாழ்ப்பாண சாரணர் துருப்பின் 70 ஆவது ஆண்டு நிறைவுவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் ஜனாதிபதி சாரணன் ச.அமலராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக எச்.எஸ்.பி.சி. வங்கியின் இணைய வடிவமைப்பு அலுவலர் ஜனாதிபதி சாரணன் சதானந்தன் ஆனந்த், சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுமார், கௌரவ விருந்தினர்களாக தொழில் முனைவர் சி.ராஜ்குமார், யாழ்.மாவட்ட சாரண ஆணையாளர் செ.தேவரஞ்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் ஆசியுரையை வே. ஞானகாந்தன் வழங்குவார்.

மேலும் கொக்குவில் இந்துவின் சாரணியன் மலர் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. நூல் ஆய்வுரையை சட்டத்தரணி திருக்குமரன் வழங்குவார்.

மேலும் சாரணிய இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வும் சாரணியர் விருதுகளை பெற்றவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (அ-5-78)

# ஷிராணியின் வழக்கு விசாரணைகளில் பொதுநலவாய உதவி தேவையில்லை

## உச்சநீதிமன்றம் அறிவிப்பு

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்க தொடர்பான வழக்கு விசாரணைகளில் பொதுநலவாய நாடுகள் சட்டத்தரணிகளின் தலையீடு அவசியமில்லை என உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்த வழக்கு விசாரணைகளில் தலையீடு செய்ய அனுமதிக்குமாறு கோரி லண்டன் மற்றும் வேல்சிற்கான சட்டத்தரணிகள் பேரவையின் மனித உரிமைக் குழுவும், பொதுநலவாய நாடுகள் சட்டத்தரணிகள் பேரவையும் வழக்குத் தாக்கல் செய்திருந்தன.

முன்னாள் பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றப் பிரேரணை நிறைவேற்றப்பட்டு பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

இது தொடர்பிலான சட்ட விவகாரங்களில் தலையீடு செய்ய விரும்புவதாக குறித்த இரண்டு அமைப்புக்களும் கோரியிருந்தன.

எனினும், இந்த விடயத்தில் தலையீடு செய்ய அனுமதிக்க முடியாது என இலங்கை உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

உச்ச நீதிமன்ற நீதியரசர்களான சலீம் மர்சூப், சந்திரா ஏக்கநாயக்க, சத்தியா ஹெட்டிகே, ஈவா வனசுந்தர மற்றும் ரோஹினி மாரசிங்க ஆகிய ஐவர் அடங்கிய குழாம் இந்த மனுவை பரிசீலனை செய்தது.

பிரதிவாதிகளின் சார்பில் சட்ட மா அதிபர் பாலித பெர்னாண்டோ ஆஜராகியிருந்தார். மனுதாரர்களின் சார்பில் டாக்டர் சுனில் குரே, எம்.ஏ.சுமந்திரன் மற்றும் ஜெ.சீ. வெலியமுன ஆகியோர் ஆஜராகியிருந்தனர். (அ-2)

# இலங்கையில் தங்கியிருந்த அமெரிக்க கப்பல் அதிகாரி

## கியூ பிரிவு தீவிர விசாரணை

அமெரிக்க கப்பலான "சீமன்கார்டு ஓகியோ" வின் தலைமை பாதுகாவலர் இந்தியாவுக்கு செல்லும் முன்னர் கொழும்பில் தங்கியிருந்தமைக்கான காரணம் தொடர்பில் கியூ பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 12ஆம் திகதி தமிழ் நாட்டின் தூத்துக்குடி கடல் பகுதியில் அமெரிக்காவின் அட்வென் போர்ட் நிறுவனத்திற்கு சொந்தமான "சீமன் கார்டு ஓகியோ" கப்பல் இந்திய கடலோர காவற்படையினரால் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டது.

குறித்த கப்பலில் ஆயுதங்கள் இருந்ததால் தமிழக பொலிஸார் வழக்கு பதிவு செய்து, கப்பலில் இருந்தவர்களிடம் விசாரணை நடத்தினர். அதன் பின்னர் அக்கப்பலில் இருந்த 35 பேரையும் கைது செய்ததுடன், 35 துப்பாக்கிகள், 5ஆயிரத்து 680 தோட்டாக்கள் பறிமுதல் செய் யப்பட்டன.

இந்நிலையில், போல்டேவிட் டெம்ப் டவர், கொச்சியில் நிலை கொண்டிரு ந்த கப்பலுக்கு வரு வதற்கு முன்னர் 10 நாட்கள் கொழும்பில் தங்கியிருந்துள்ளார்.

அதன் பின்னர் இலங்கையில் இரு ந்து ஷார்ஜா நாட்டு கப்பல் மூலம் நடுக் கடலில் வந்து இரு ந்த "சீமன் கார்டு ஓகியோ" கப்பலுக்கு செப்டெம்பர் 30 ஆம் திகதி வந்துள்ளார்.

போல்டேவிட் டெம்ப் டவர் இலங் கையில் இருந்து வரும் போது பாது காவ லர்களை அழைத் துக் கொண்டு, ஆயுதங்களுடன் வந்தாரா அல்லது அவர் மட்டும் தனியே வந்தாரா? ஆயுதங்கள் கப்பலுக்கு எப்படி வந்தது.

இலங்கையிலிருந்து சட்ட விரோதமாக வந்தனரா என்பது குறித்து கியூ பிரிவு பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருவதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

# எம்.பிக்களின் கொலைகள் தொடர்பான விசாரணைகளில் முன்னேற்றமில்லை

## எம்.பிக்களின் மனித உரிமைகள் குழு சுட்டிக்காட்டு

ஜோசப் பரராஜசிங்கம், என்.ரவிராஜ், ரி.மகேஸ்வரன் கொலைகள் குறித்த விசாரணைகளில் முன்னேற்றம் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர்களின் மனித உரிமைக்குழு தெரிவித்துள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், என்.ரவிராஜ், ரி.மகேஸ்வரன் ஆகியோரின் கொலைகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் மனித உரிமைகள் குழு ஆராய்ந்துள்ளது.

குறிப்பாக பரராஜசிங்கம், ரவிராஜ் ஆகியோர் கொலை தொடர்பில் போதிய விசாரணைகளோ முன்னேற்றமோ இல்லை எனவும் இந்தக்குழு விசனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இதே காலப்பகுதியில் கிழக்கிலும் வடக்கிலும் குண்டு வெடிப்புகள் மூலம் கொல்லப்பட்ட சந்திரநேரு, சிவநேசன் ஆகியோரின் கொலைகள் குறித்தும் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என்ற போதிலும் இவர்களின் கொலைகள் குறித்து நாடாளுமன்ற மனித உரிமைகள் குழுவும் கவனம் எடுக்கவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா சிறைத் தண்டனை அனுபவித்த காரணத்தால் அடுத்த நாடாளுமன்ற, ஜனாதிபதி தேர்தல்களில் பங்கேற்க முடியாது தடுக்கப்பட்டிருப்பதையிட்டும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மனித உரிமைகள் குழு விசனம் தெரிவித்துள்ளது.

அரசியலமைப்பின் 89(டி), 91 உறுப்புரைகளுக்கு அமைய சரத் பொன்சேகாவினால் இந்த தேர்தல்களில் 7 வருடங்களுக்கு பங்கேற்க முடியாதென இந்தக் குழு கூறியுள்ளது.

2010 ஆம் ஆண்டு ஜனநாயக தேசிய முன்னணியில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினரான இவர், ஹைகோப் வழக்கில் இராணுவ நீதிமன்றினால் குற்றவாளியாக காணப்பட்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அரசிறை சட்டத்தின் கீழ் 38 நாடுகளுடன் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன

## முதலீடுகள் அதிகரிக்கும் என்கிறார் அமைச்சர் பீரிஸ்

இலங்கை இதுவரை 38 நாடுகளுடன் உள்நாட்டு அரசிறைச் சட்டத்தின் கீழ் ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளதோடு இதனூடாக இலங்கையில் நேரடி முதலீடுகள் அதிகரிப்பதோடு பொருளாதார முன்னேற்றத்திற்கும் பாரிய உந்து சக்தியாக அமையுமென வெளி விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

சீசெல்ஸ், பலஸ்தீன், பெலாரஸ்,லக்ஸம்போர்க் ஆகிய நாடுகளுடனான உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழான ஒப்பந்தங்களுக்கு அனுமதி பெறுவது தொடர்பான விவாதத்தில் நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

ஆபிரிக்க, இலத்தீன் அமமெரிக்க மற்றும் அரபு நாடுகளுடனான இராஜதந்திர உறவுகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்து வருகி றது. மேலும் காலத்திற்கு ஏற்றவாறு எமது வெளிநாட்டுக் கொள்கையை மாற்றியமைக்க வேண்டும் .

இலங்கை நான்கு நாடுகளுடன் உடன்பாடு மேற்கொண்டுள்ளது. பலஸ்தீனம், சீசெல்ஸ், பெலாரஸ், லக்ஸம்போர்க் ஆகிய நாடுகளுடனே இவ்வாறு வருமான வரிகள் தொடர்பில் இரட்டை வரி விதிப்பை தவிர்ப்பதற்காகவும் வரி செலுத்தாது தட்டிக்கழிப்ப தனை தவிர்ப்பதற்காகவும் உள்நாட்டு அரசிறைச் சட்டத்தின் கீழ் ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளன.

இவற்றுக்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறவே இது தொடர்பான தீர்மானம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பெலா ரஸுடனான ஒப்பந்தத்தின் மூலமாக எமது நாட்டு படகுகள் மற்றும் கப்பல்களுக்கு பாரிய கேள்வி ஏற்படும். பல இலட்சம் ரூபா பெறும தியான படகுகளை பெலாரஸ் கொள்வனவு செய்யவுள்ளது. சீசெல்சுக் கும் இலங்கைக்குமிடையில் விரைவில் நேரடி விமானச் சேவைகள் ஆரம்பிக்க இந்த உடன்பாட்டினூடாக நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கிழக்கு ஆபிரிக்க நாடுகளுடனான தொடர்புகள் அதி கரிக்கும் என்றார். (அ-2)


பெருமையுடன் வாழ்த்துகின்றோம்



பழகிட இனியதோர் பண்புடை நெஞ்சம் - உன்
அழகிய புன்னகை அனைத்தையும் வெல்லும்
இளகிய மனமதில் என்றுமே கொஞ்சும்
குழந்தையின் குணமதுன் உள்மனம் சொல்லும்.

பணியிலே இணைகையில் நீ அணிந்திருந்த இளமையதும்
பணிவுடனே நீயுதிர்க்கும் பண்பான வார்த்தைகளும் - நீ
வைரவிழாக் காண்கையிலும் வடிகிறது உன்முகத்தில்.
பெருமையொடுன் பெயருரைத்து நிலைத்திருக்கும் எம் மனத்தில்.

ஆற்றுபணி யாவினிலும் நேர்த்தியினைக் காட்டி
அறுபது அகவைகளைப் பூர்த்தியுற ஓட்டி
அன்புறவே எங்களுடன் கலந்திருந்து ஓய்வுபெறும்
மூத்தபெரும் நாயகனே முருகண்டி! வாழிய நீ நீடூழி!!

(C-5247)

கிளிநொச்சி மாவட்டச் செயலக
அலுவலகப் பணியாளர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய மாநாட்டில் மன்மோகன் சிங் பங்கேற்பார்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நம்பிக்கை

(கொழும்பு)

**பொதுநலவாய மாநாட்டில் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்வார் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. சம்பந்தன் முறையிட்டதாலோ அல்லது தமிழ் கூட்டமைப்பினர் தமது எதிர்ப்புக்களை தெரிவிப்பதாலோ இந்தியா பொதுநலவாய மாநாட்டினை புறக்கணிக்கப் போவதில்லை என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கைக்கு வருவார் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வார் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

சம்பந்தன் முறையிட்டதாலோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது எதிர்ப்புக்களை தெரிவிப்பதாலோ இந்தியா பொதுநலவாய உச்சி மாநாட்டினை புறக்கணிக்கப் போவதில்லை.

இந்தியா கூட்டமைப்பை ஆதரிப்பது போல் ஒரு புறமும் அரசாங்கத்தை ஆதரிப்பது போல் மறுபுறமும் நாடகமாடி தமது காரியங்களை சாதித்துக் கொள்ள முயற்சிக்கின்றது.

இலங்கையின் வளங்களை குறிவைத்தும் சீனாவினை இலங்கையிடம் இருந்து பிரிப்பதையும் தனது இலட்சியமாக வைத்துள்ள இந்தியா இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டினை புறக்கணிப்பதற்கான வாய்ப்பில்லை.

தமிழ் மக்களையும் வடக்கின் சூழலையும் வைத்து கூட்டமைப்பின் சுயநலமான கொள்கைகளை நிறைவேற்றிக் கொள்ளவே முயற்சிக்கின்றனர்.

சம்பந்தன் கூட்டணியினர் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என்பது எமது நோக்கமல்ல. ஆனால் இலங்கையின் நிலைமையினையும் வெளிநாட்டு உறவு முறைமைகளையும் தடுக்கும் வகையில் செயற்படுவதானது வருந்தத்தக்கதாகும்.

தமிழ் மக்களைச் சாட்டி கூட்டமைப்பின் தனிப்பட்ட விருப்பங்களை சர்வதேச நாடுகளிடம் முன்வைக்கின்றனர். சம்பந்தன், விக்கினேஸ்வரனின் செயற்பாடுகள் வருந்தத்தக்க வகையில் அமைந்துள்ளன எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# நூலக கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடமாடும் நூலகக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யா/மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சி யாழ். பொது நூலகத்தின் நடமாடும் நூலக சேவைப் பகுதியினரால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# காகிதாதிகளை பெற்றுக் கொள்க

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சைக்கு கோப்பாய் கோட்டம் தவிர்ந்த யாழ்ப்பாண வலயம், தீவக வலயம், தென்மராட்சி வலயம் ஆகியவற்றில் அமைக்கப்பட்ட பரீட்சை மண்டபங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மேற்பார்வையாளர்கள் தங்களுக்குரிய பரீட்சை காகிதாதிகளை இணைப்பு நிலையங்களில் எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9 மணிக்கு பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ)

# உளவியல் கண்காட்சி இன்றும் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியல் – உளவியல் துறையினால் உலக உளநல நாள் தொடர் நிகழ்ச்சியாக இடம் பெறும் உளவியல் கண்காட்சி பலரது வேண்டுகோளுக்கு இணங்க இன்றும் இடம்பெறும் என துறைத் தலைவர் கலாநிதி க.கஜவிந்தன் அறிவித்துள்ளார். (அ)

# பல்கலை. விரிவுரையாளர்களுக்கு எழுபது வயது வரை சேவை நீடிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் விரிவுரையாளர்களுக்கு 70 வயது வரை ஒப்பந்த அடிப்படையில் சேவையை நீடிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதென உயர் கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் சுனில் ஜயந்த நவரட்ன தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க 65 வயதில் ஓய்வு பெறும் விரிவுரையாளர்கள் மேலதிகமாக 5 வருடங்களுக்கு சேவையாற்ற முடியும். ஓய்வு பெறும் விரிவுரையாளரின் சேவை குறித்த பல்கலைக்கழகத்திற்கு இன்றியமையாதது என கோரும் பட்சத்தில் மாத்திரமே அவர்களுக்குரிய சேவைக் காலம் நீடிக்கப்படும்.

ஒப்பந்தங்கள் 70 வயது வரை வருடந்தோறும் புதுப்பிக்கப்படுமெனவும் அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

இருப்பினும் விரிவுரையாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் காலப் பகுதியில் உபவேந்தர், பீடாதிபதி, பிரிவுத் தலைவர் உள்ளிட்ட எந்தவொரு பதவியையும் வகிக்க முடியாது எனவும் அவர் உறுதியாக தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களுக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கும் இக்கால கட்டத்தில் அமைச்சரவையின் மேற்படி அங்கீகாரம் சாதகமாக அமைந்துள்ளதாக அமைச்சின் செயலாளர், சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் மூலம் சேவையிலிருக்கும் ஏனைய இளம் விரிவுரையாளர்களின் சேவை மற்றும பதவி உயர்வு என்பன பாதிப்படையாத வகையிலேயே அனைத்து செயன்முறைகளும் முன்னெடுக்கப்படுமெனவும் கூறினார்.

விரிவுரையாளரொருவர் தான் ஓய்வு பெறுவதற்கு முன்பாக கடந்த 3 வருடங்களுக்குள் பல்கலைக்கழகம் மற்றும் மாணவர்களுக்காற்றிய சேவை, ஆராய்ச்சி என்பன அடிப்படையிலேயே அவரது சேவைக்காலம் நீடிக்கப்படுவது குறித்து தீர்மானிக்கப்படும்.

மேலும் 70 வயது வரையான சேவைக் கால நீடிப்பின் போது குறித்த விரிவுரையாளர் விரிவுரை மற்றும் ஆராய்ச்சி முன்னெடுத்திருப்பது அவசியமெனவும் அவர் வலியுறுத்தினார்.

சேவைக்கால நீடிப்பின் போது ஆட்தெரிவுக்கான விதிமுறைகளை தயாரித்து ஒப்படைக்குமாறு அமைச்சரவை பணித்திருப்பதாக கூறிய செயலாளர் விதிமுறை தயாரிப்பு தொடர்பில் அனைத்து பல்கலைக்கழகங்களுடனும் கலந்துரையாடி வருவதாகவும் கூறினார். (அ-2)

# கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும்

நல்லூர் லயன்ஸ் கழகத்தினால் இலவச கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும் நாளை மறுதினம் வடமராட்சி கரணவாய் தெற்கு மணியகார தோட்டம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் நீரிழிவு சம்பந்தமான நோய்க்கு முகம் கொடுக்கும் வழிமுறை தொடர்பான ஆரோக்கிய விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெறுவதுடன் நீரிழிவு சம்பந்தமான இலவச கையேடும் வழங்கப்படும் என நல்லூர் லயன்ஸ்கழகதலைவர் அறிவித்துள்ளார். (அ)

# நாட்டில் ஷரியா சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும்


கசினோ, விபச்சாரம் மற்றும் போதைப் பொருள் விற்பனை என்பன நாட்டில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் வர்த்தகங்களாக இருப்பதாகவும் இலங்கையில் ஷரியா சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் மட்டுமே அவற்றை தடுத்து நிறுத்த முடியும் என விவசாய அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு இலங்கையில் கசினோ,விபச்சாரம் மற்றும் போதைப்பொருள் விற்பனை என்பன பெருகியுள்ளன.

இவற்றை 100 வீதம் தடுத்து நிறுத்த வேண்டுமானால் மத்திய கிழக்கு நாடுகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஷரியா சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் அவற்றை முற்றாக தடுத்து நிறுத்த முடியாது.

கசினோ வர்த்தகத்தை இலங்கையில் ஊக்குவிக்க அரசாங்கம் விசேடமாக எதனையும் செய்யவில்லை. ஆங்காங்கே இருக்கும் கசினோ வர்த்தகத்தை ஒரு இடத்திற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளையே அரசாங்கம் எடுத்துள்ளது.

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியே இலங்கைக்கு கசினோ சூதாட்டத்தை அறிமுகப்படுத்தி வைத்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களை தவிர அரசாங்கம் புதிதாக எந்த அனுமதிப்பத்திரங்களையும் வழங்கவில்லை என்றார். (அ)




நல்லூர் றோட்டரிக் கழகமும் கண்டி றோட்டறிக் கழகமும் இணைந்து நடத்திய மாபெரும் கண்சிகிச்சை முகாம் புதுக்குடியிருப்பு அரசரட்ணம் வித்தியாலயத்தில் நடைபெற்றது. கண்டி போதனா வைத்தியசாலையின் கண் வைத்திய நிபுணர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட இம் மருத்துவ முகாமில் சுமார் 250 பேர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பேசும் மக்கள் வாழும் இடங்களில் அதிகாரப் பகிர்தலை அறிமுகப்படுத்துக


## வடக்கு முதலமைச்சர் அரசிடம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்தலை அறிமுகப்படுத்த வேண்டும் என வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**





வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் யாழ். ரில்ஹோ விருந்தினர் விடுதியில் நேற்றுக் காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை இடம்பெற்ற வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கான அறிமுக செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது வடமாகாண சபை அங்கத்தவர்கள் யாவரும் புதிதாகவே மாகாண சபை நடவடிக்கைகளில் ஈடுபடப் போகின்றார்கள். பாராளுமன்ற நடவடிக்கைகளில் எமது சகோதரர்கள் சித்தார்த்தன், சிவாஜிலிங்கம் ஆகியோர் பரீட்சயம் பெற்றவர்கள். சி.வி.கே. சிவஞானம் உள்ளூராட்சி ஆணையாளராக இருந்தவர். அவர்களுக்கு ஓரளவு இப்பேற்பட்ட நடவடிக்கைகள் பற்றி அறிவு இருக்கும் என எண்ணுகின்றேன்.

இந்த இடத்தில் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைக்கும் இடையில் இருக்க வேண்டிய உறவுகள் பற்றி ஒருசில கருத்துக்களை நான் பகிர்ந்துகொள்ள விருப்பப்படுகின்றேன்.

மத்திய அரசாங்கமோ மாகாண சபைகளோ பிரதேச சபைகளோ மக்களுக்காகவும் அவர்கள் நலம் பேணியுமே உருவாக்கப்பட்ட நிர்வாக அலகுகள் ஆவன.

மக்கள் ஆணையை நிறைவேற்றுவதே மேற்படி நிர்வாக அலகுகளின் பணியாகும். குறிப்பிட்ட எல்லைகளுக்குள் செயற்படும் அதிகார மையங்கள் போதியமட்டில் தம்மைத் தாமே ஆளவும் இயக்கவுமே மேற்படி நிறுவனங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

மாகாண சபைகளை எடுத்துப்பார்த்தோமானால் கடந்த 1987 ஆம் ஆண்டில் இலங்கை-இந்திய உடன்பாட்டின் போது தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவே மேற்படி சபைகள் அறிமுகப் படுத்தப்பட்டன.

ஆனால் அன்றைய ஜனாதிபதி தமிழ்ப் பேசும் மக்களுக்கு எந்தவிதமான சலுகைகளையும் தான் கொடுக்கவில்லையென்று சிங்கள மக்களுக்கு எடுத்துக் காட்டும் விதத்தில் மாகாண சபைகளை சகல மாகாணங்களுக்கும் அறிமுகம் செய்தார்.

வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்குச் சேர்த்தே ஒரு மாகாண சபை வகுக்கப்பட்டது. இதிலிருந்தே தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்த இடங்களுக்கு அதிகாரப் பகிர்தலை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திலேயே மாகாண சபைகள் வகுக்கப்பட்டன என்பது தெரிய வருகின்றது.

எங்கள் சிறிய நாட்டில் சிங்கள மக்கள் பெரும்பான்மையினராக வாழும் இடங்களில் அதிகாரங்களைப் பகிரவேண்டிய தேவை மிகக் குறைவாகவே இருக்கக் காணலாம்.

ஏனெனில் மத்திய அரசாங்கத்தின் பெரும்பான்மையினரும் வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களில் வாழும் பெரும்பான்மையான மக்களும் ஒரே மொழி பேசுபவர்கள். ஒரே மதத்தைச் சேர்ந்தவர்கள் அவர்களின் பிரச்சினைகளும் கிட்டத்தட்ட ஒரே விதமானவை.

ஆனால் மலையகம் வாழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு அவசியம் ஆகலாம். வடக்கு கிழக்கு மாகாணங்கள் வேறுபட்டவை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். நாங்கள் வடமாகாணத்தை மட்டும் எடுத்துப் பார்த்தோமானால் நாங்கள் மற்றைய 8 மாகாணங்களிலிருந்தும் வேறுபட்டவர்கள். எங்கள் மொழி வேறு, எமது மதங்கள் வேறு, எமது நிலங்கள் வேறு விதமானவை. எமது கலாசாரம் வேறுபட்டது.

எமது வாழ்க்கை முறை வேறுபட்டது. அவற்றை விட அண்மைக்காலங்களில் நாம் ஏனைய 8 மாகாணங்களிலிருந்தும் மிக முக்கியமான வேறுபாடுகளைக் கொண்டிருப்பதை நீங்கள் அவதானிக்கலாம்.

சில தருணங்களில் அதிகாரப் பரவலின் அடிப்படைகளை மறந்து விட்டு மத்திய அரசாங்கம் தன்னை முதன்மைப்படுத்தி மத்திய அரசாங்கத்திற்கு அனுசரணையாகவே மாகாண சபைகள் இயங்கவேண்டும் என்று கூறுவதை நான் அவதானித்துள்ளேன். இன்று (நேற்று) எமது பேச்சாளர்கள் அவ்வாறான கருத்தை வெளியிடமாட்டார்கள் என்று நம்புகின்றேன்.

அதாவது அதிகாரப் பகிர்வானது மத்திய அரசாங்கத்தைப் பலப்படுத்தவோ அதனை முதன்மைப்படுத்தவோ வகுக்கப்பட்ட ஒரு உபாயமல்ல.

வலிய மத்திய அரசாங்கங்கள் வலிமை குறைந்த மாகாண மக்களை எழுப்பித் தமது கால்களில் அவர்களை நிற்க வைக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே மேற்படி உபாயம் வகுக்கப்பட்டது.

எனவே எமது மாகாண சபைகளுக்கு மத்திய அரசாங்கம் அனுசரணையாக இயங்க வேண்டுமே ஒழிய மத்திய அரசாங்கத்திற்கு முண்டு கொடுக்க மாகாண சபைகள் முன்வரவேண்டும் என்று எதிர்பார்ப்பது அதிகாரப் பரவலின் தாற்பரியத்தை மத்திய அரசாங்கம் அறிய முற்படவில்லை என்ற கருத்தையே வலியுறுத்தும்.

ஈற்றில் ஒரே ஒரு கருத்தை உங்களிடம் முன்வைக்க உங்கள் அனுமதியைக் கோருகின்றேன். நான் முன்னர் கூறியது போல் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அத்தியாவசியமான பல உரித்துக்கள் ஏனைய ஏழு மாகாணங்களுக்கு தேவைப்படாமல் இருக்கலாம்.

காணி சம்பந்தமாகவும் மக்களின் பாதுகாப்பு சம்பந்தமாகவும் மாகாண சபையொன்று எடுக்க வேண்டிய பொறுப்பு அந்தந்த மாகாண சபையின் நிலையை ஒட்டியதே ஒழிய சகலருக்கும் ஒரே நிலை இருப்பதாகக் கொள்வது தவறாகும்.

இந்தக் கருத்தரங்கத்தை எமக்கு உவந்தளித்திருக்கும் ஆளுநர் அவர்களுக்கும் மற்றைய அவரின் அதிகாரிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியை மீண்டும் தெரி வித்துக் கொண்டு அமர்கின்றேன் என அவர் மேலும் தனது உரையில் தெரிவித்தார்.

---

## வடக்கு மாகாண ஆட்சி அமைந்த பின்னரும்

# தவறாக அதிகாரத்தை பயன்படுத்தியோரை நீதிமன்றம் விரைவில் கேள்வி கேட்கும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்ட பின்பு மத்திய அமைச்சர்கள், அலுவலர்கள் அதிகாரத்தை பல வழிகளில் பிரயோகிக்கப் பார்க்கிறார்கள். அவ்வாறான நிகழ்வுகள் பல நடந்தும் உள்ளன. அவர்களின் நடவடிக்கைகள் பல சட்டப்படி கேள்விக்குரியதாகிவிட்டன.

எனவே, அதிகார துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டவர்களிடம் நீதிமன்றங்கள் கேள்வி கேட்கும் காலம் வெகு தொலைவில் இல்லை என வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். நேற்று இடம்பெற்ற செயலமர்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், அலுவலர்கள் பலர் வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டதன் பின்னர் கூட மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பல வழிகளில் பிரயோகிக்கப் பார்க்கிறார்கள்.

மாகாண சபைக்குரிய அதிகாரங்களை தாம் எடுத்து உபயோகிக்கிறார்கள். நான் பதவியேற்று பின்னர் நிகழ்ந்த மத்திய அரசாங்க அலுவலர்களின் அல்லது அமைச்சர்களின் நடவடிக்கைகள் பல, சட்டப்படி கேள்விக்குரியதாகி விட்டுள்ளன. இவர்கள் எத்தகைய அதிகாரங்களை முன்வைத்து அவ்வாறு செய்தார்கள் என்று அவர்களை நீதிமன்றங்கள் கேள்வி கேட்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

இனியும் இத்தகைய பிழையான நடவடிக்கைகளில் அமைச்சர்களோ அலுவலர்களோ ஈடுபடாது இருப்பார்களாக! அதிகாரப் பிரயோகம் என்பது ஒரு இனிப்பான சுவையாகும் என்பதை நான் தெரிந்து வைத்துள்ளேன். அதேநேரம் அதிகாரத் துஷ்பிரயோகம் எவ்வளவு தூரம் சட்டத்திற்கு முரணானது என்பதையும் நான் அறிந்து வைத்துள் ளேன். அமைச்சர்களோ, அலுவலர்களோ சட்டத்தின் கீழ் தமக்குரிய அதிகாரங்கள் வழ ங்கப்பட்டிருந்தாலே ஒழிய தமக்கு அதிகார மில்லாத காரியங்களில் ஈடுபடுவதை இனி யாவது தவிப்பார்கள் என்று நம்புகிறேன். எமது அரசியல் யாப்பு மாகாண சபைகளுக் கென்றே பல அதிகாரங்களைக் கொடுத்துதவியுள்ளன.

அவற்றைப் பிரயோகிக்கும் உரித்து மாகாண சபைகளுக்கேயல்லாது வேறு எவருக்கும் இருக்க முடியாது. அவ்வுரித்துக்களை எவரேனும் துஷ்பிரயோகம் செய்யத் துணிவார்களேயானால் சட்டம் அவர்களைக் கட்டாயம் தண்டிக்கும் என்பதைத் திடமாகக் கூறி வைக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

**தொகுப்பு:-எஸ்.ஆர்.கரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

614

## மகத்தான தீர்ப்பு

நீண்ட நாட்களுக்கு முன் சோழவள நாட்டில் உள்ள ஒரு நகரில் ராமன் என்ற இளைஞன் வசித்து வந்தான். அவன் சிறுவனாக இருந்த காலத்திலிருந்தே மிகுந்த அறிவுக் கூர்மையும், நிறைந்த ஒழுக்கமும் உடையவனாகத் திகழ்ந்தான். அவன் அனைவரிடமும் மிகுந்த அன்புடன் பழகி வந்தான். ஊரில் எந்தப் பிரச்சினை என்றாலும் தனது சமயோசித புத்தியாலும் யுக்தியாலும் நல்ல முறையில் தீர்த்து வைப்பான்.

மக்கள் அனைவருடைய மரியாதைக்கு உரியவனாக இராமன் விளங்கி வந்ததால் மரியாதை ராமன் என்றே அனைவராலும் அழைக்கப் பட்டான்.

அந்த நகரின் கடைக்கோடியில் மூதாட்டி ஒருவர் உணவு விடுதி நடத்தி வந்தார். வெளியூரிலிருந்து வருகிறவர்கள் அங்கு உணவருந்தி, விடுதியில் தங்கிச் செல்வது வழக்கம். பல இடங்களிலும் திருடித் திரியும் நான்கு பேர் அடிக்கடி மூதாட்டியின் கடைக்கு வந்து உணவருந்திச் செல்வது வழக்கம்.

ஒருநாள் அதிகாலை நான்கு பேரும் ஒரு பானையுடன் வந்தனர். அதில் தாங்கள் உழைத்துச் சம்பாதித்த பணம் இருப்பதாகக் கூறினர். ஆனால், அவர்கள் வெகுதூரத்தில் உள்ள ஊரில் கொள்ளையடித்த நகைகளும் பொற்காசுகளும் அதில் இருந்தன. அவர்கள் அந்தப் பானையை மூதாட்டியிடம் கொடுத்து, "பாட்டி! இந்தப் பானையை பத்திரமாக வைத்திருங்கள். நாங்கள் அருகிலுள்ள கேணியில் குளித்துவிட்டு வருகிறோம். நாங்கள் நான்கு பேரும் ஒன்றாகச் சேர்ந்து வந்து கேட்டால் மட்டுமே கொடுங்கள். ஒருவர் குறைந்தாலும் கொடுக்கக்கூடாது" என்று கூறிவிட்டுக் குளிக்கச் சென்றனர்.



அனைவரும் அருகிலிருந்த கேணிக்குச் சென்றனர். படிகள் சரியில்லாததால் இறங்கிக் குளிப்பது சரியில்லை என்று கருதினர். அதனால் பாட்டியிடம் ஒரு பானையும் கயிறும் வாங்கிவந்து இறைத்துக் குளிக்க முடிவு செய்தனர். அதனால் அவற்றை வாங்கிவர அவர்களில் ஒருவனை அனுப்பி வைத்தனர்.

வரும்போதே அவன் நண்பர்களை மோசடி செய்து அனைத்துச் செல்வங்களையும் தானே சுருட்டிக் கொள்ளத் திட்டம் வகுத்தான். உணவு விடுதிக்குச் சென்றதும் பாட்டியிடம் "நாங்கள் கொடுத்து வைத்து விட்டுச் சென்ற பானையை மூவரும் வாங்கிவரச் சொன்னார்கள்" என்று கேட்டான்.

நான்கு பேரும் சேர்ந்து வந்தால்தான் தரவேண்டும் என்று கூறிச் சென்றிருந்ததால் பாட்டி பானையைத் தருவதற்குத் தயங்கினார். உடனே வந்தவன் "பாட்டி உங்களுக்குச் சந்தேகமாக இருந்தால் கூப்பிடு தூரத்தில்தான் அவர்கள் இருக்கிறார்கள். வெளியில் வந்து நீங்களே அவர்களிடம் கேட்டுக்கொள்ளுங்கள்" என்று கூறினான்.

கடைக்கு வெளியே வந்த பாட்டி கேணியருகில் நின்ற மூவரையும் பார்த்து "பானையைக் கொடுத்துவிடவா?" என்று கேட்டார். நீர் இறைக்கக் கேட்ட பானை என்று நினைத்துக் கொண்ட மூவரும் "ஆமாம் பாட்டி, பானையைக் கொடுத்தனுப்புங்கள்" என்று கூறினர். அனைவரும் சம்மதம் தெரிவித்து விட்டதால் நகைகள் உள்ள பானையை எடுத்து வந்தவனிடம் கொடுத்து விட்டாள்.



அதனைப் பெற்றுக் கொண்ட அந்தத் திருடன் அடர்ந்த காட்டுக்குள் நுழைந்து வேகமாக ஓடி மறைந்து விட்டான்.

வெகுநேரமாகியும் பானை வாங்கச் சென்றவன் வராததால் சந்தேகம் அடைந்த மூன்று திருடர்களும் பாட்டியின் கடைக்கு வந்து விசாரித்தனர்.

"நீங்கள் பானைக் கேட்டதாக அவன் வந்து கேட்டான். நான் பானையை அவனிடம் கொடுக்கவா? என்று கேட்டேன்.

நீங்களும் கொடுத்தனுப்புங்கள் என்று சொன்னீர்கள். நானும் கொடுத்து விட்டேன்" என்றாள் பாட்டி.

தங்கள் கூட்டாளி மோசடி செய்துவிட்டான் என்பதை உணர்ந்ததும் அதிர்ச்சியடைந்த மூவரும் "நாங்கள் நான்கு பேரும் சேர்ந்து வந்தால்தானே பானையைக் கொடுக்க வேண்டும். நாங்கள் குளிப்பதற்கான பானையைத் தானே கொடுக்கச்சொன்னோம். நீ அந்தப் பானையைக் கொடுத்தது தவறு. நீதான் எங்களுக்கு உன்னிடம் ஒப்படைத்த பானையைக் கொடுக்க வேண்டும்" என்று வாதிட்டனர். பாட்டி சொன்ன சமாதானம் அவர்களிடம் எடுபடவில்லை, "என் மீது எந்தத் தவறும் இல்லை" என்று அவள் கூறிவிட்டாள். மிகவும் ஏமாற்றமடைந்த மூவரும் அந்த நகரில் உள்ள நீதிபதியிடம் முறையிட்டனர்....



(தொடரும்)




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1147-முதலாம் அஃபொன்சோ தலைமையில் போர்த்துக்கீசர் லிஸ்பன் நகரைப் பிடித்தனர்.
- 1415-அஜின்கோர்ட் நகரில் இடம்பெற்ற போரில் லண்டனின் ஐந்தாம் ஹென்றியின் படைகள் பிரான்சைத் தோற்கடித்தனர்.
- 1616-மூன்றாம் ஜோர்ஜ் பெரிய பிரித்தானியாவின் மன்னனானான்.
- 1900-ஐக்கிய இராச்சியம் தென்னாபிரிக்காவின் டிரான்ஸ்வால் மாநிலத்தை இணைத்துக் கொண்டது.
- 1917-ரஷ்யாவில் ஒக்டோபர் புரட்சி (பழைய ஜூலியன் நாட்காட்டியின்படி) இடம்பெற்றது. போலஷெவிக்குகள் குளிர்கால அரண்மனையைக் கைப்பற்றினர்.
- 1924-இந்தியாவில் சுபாஷ் சந்திரபோஸ் பிரித்தானியரால் சிறைப்பிடிக்கப்பட்டார்.
- 1936-ஹிட்லர் மற்றும் முசோலினி இணைந்து உரோம்-பேர்லின் அச்சு என்ற கூட்டமைப்பை ஏற்படுத்தினர்.
- 1944-இரண்டாம் உலகப்போர்: பிலிப்பீன்சில் ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் வரலாற்றில் பெரும் கடற்சமர் இடம்பெற்றது.
- 1945-இரண்டாம் உலகப்போர்: ஜப்பான் கூட்டு நாடுகளிடம் சரணடைந்ததைத் தொடர்ந்து சீனக் குடியரசு தாய்வானை இணைத்துக் கொண்டது.
- 1971-ஐ.நாவிலிருந்து சீனக் குடியரசு வெளியேற்றப்பட்டு மக்கள் சீனக் குடியரசு ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- 1983- ஐக்கிய அமெரிக்காவும் அதன் கரிபியன் கூட்டு நாடுகளும் கிரெனாடாவை முற்றுகையிட்டு அதனைக் கைப்பற்றின.
- 1991- யூகோஸ்லாவிய இராணுவம் சிலவேனியாவில் இருந்த முற்றாக வெளியேறியது.
- 1995-கொழும்பு கொலன்னாவை எண்ணெய் குதங்களில் இடம்பெற்ற பெரும் தீயில் 21 படையினர் கொல்லப்பட்டனர்.
- 2000-பண்டாரவளை, பிந்துனுவேவா சிறைகள் மீதான தாக்குதலில் தமிழ் அரசியல் கைதிகள் 26 பேர் உயிரிழந்தனர்.
- 2001-விண்டோஸ் எக்ஸ்பி வெளியிட்டப்பட்டது.
- 2001-இந்தியாவில் தடாசட்டத்துக்குப் பதிலாக ஓரிஓ என்ற புதிய பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தது. இந்தச் சட்டத்தின் கீழ் தீவிரவாத அமைப்புகளுக்கு நடுவண் அரசு தடை விதித்தது.
- 2007-சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முதலாவது இரட்டை அடுக்கு விமானம் ஏர்பஸ் ஏ380 தனது முதலாவது சேவையை சிட்னிக்கு ஆரம்பிக்கிறது.

பிறப்புக்கள்

- 1811-எவரிஸ்ட் கால்வா, பிரெஞ்சு கணிதவியலர் (இ.1832)
- 1881-பாப்லோ பிக்காசோ, ஸ்பானிய ஓவியர், சிற்பி (இ.1973)

இறப்பு

- 1400-ஜெஃப்ரி சோசர், ஆங்கில இலக்கிய மேதை. (பி.1340)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்குள் இருக்கிறது உன்னதம்



...சமூகப் பொறுப்புகள் கருதி இரண்டுபேர் ஒட்டுதல் இல்லாமல் ஒன்றாக வாழ்வது பைத்தியக் காரத்தனம். அவர்கள் ஒருவர் வாழ்வை ஒருவர் சிதைத்துக் கொண் டிருக்கிறார்கள் என்றுதான் அர்த் தம்.

ஆண்கள், பெண்கள் இருவருக் குமே இது பொருந்தும். இளமை யில் அவர்கள் உயிரோட்டம் உள்ள வர்களாக இருக்கிறார்கள். திருமணத் திற்குப் பின் கதையே வேறு.

கல்லூரிகளில்கூட பார்த்திருக் கிறேன். இந்தக் காதலர்கள் ஒருவருக் காக ஒருவர் பிறந்ததுபோல் எண்ணு கிறார்கள். பெரும் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் திருமணம் செய்து கொள் ளுகிறார்கள். பெற்றோரை எதிர்த்து சமூகத்தை எதிர்த்து திருமணம் நடந் தேறுகிறது.

உற்சாகமும், உயிரோட்டமுமாய் இருந்த இவர்கள் திருமணமாகி ஐந் தாறு வருடங்களிலேயே துன்பமய மாகிவிடுகிறார்கள். அவர்கள் முகத் தில் சோகம் கவிழ்ந்திருக்கிறது. உயி ரோட்டம் காணாமல் போய் விடு கிறது. இத்கையவர்களைப் பார்ப் பதே துயரமானது.

அந்த உறவை ஒரு கட்டமைப் புக்குள் கொண்டுவந்து, அதை மூலதனமாகப் பார்க்கத் தொடங்கும் போதே வாழ்க்கை அர்த்தமற்றுப் போய்விடுகிறது.

யாரையாவது நீங்கள் நேசித்தால் அதை ஒரு முதலீடாக மாற்ற நினைக் கிறீர்கள் இல்லையா? ஏன்? அதிலி ருந்து அனைத்து விதமான பாது காப்புக்களையும் பெற முடியும். ஆனால், அந்த உறவின் சாரம்



அத்தோடு முடிந்துவிடுகிறது. அந்த நேசத்தைப் பயன்படுத்தி, எதையா வது பெற முயற்சி செய்தீர்களே யானால், அங்கே நேசம் அழிந்து விடும்.

பெற்றுக் கொள்கிற விடயம் மட் டுமே இருக்கும். துரதிஷ்டவசமாக இதைச் செய்ய எல்லோருமே முயற்சிக் கிறார்கள். அதற்கென ஒரு பெரியவிலை கொடுக்க நேர்ந்தாலும் யாரும் அது பற்றிப் புரிந்துகொள்வதில்லை. அப்படி கொடுக்கக் கூடிய பெரியவிலை உங்கள் வருத்தமும் துயரமும்தான்.

இதனால் உங்க ளது நேசத்தை இழக் கிறீர்கள். அதிலிருக் கிற ஆனந்தத்தையே இழக்கிறீர்கள். நேசத் தையே இழந்தபிறகு வேறு என்ன விலை கொடுக்க முடியும். இதைவிட நரகம் உண்டா என்ன? குறைந்தது கல்லூரிக் காலங்களில் ஏற்பட்ட காதல் அனுபவங் களை நினைவு கூர்ந் தால் அது ஆனந்தத் திற்கு ஒரு மூலமாக இருந்திருக்கும் இல்லையா? ஆனால், உங்கள் கனவுகள்

## ஆன்மீகம் 17


நனவானபோது அதை வியாபார மாக்க முயற்சித்தீர்கள். உங்கள் வாழ் விலே ஒரு அற்புதமான மனிதர் என்று நினைத்தவர் மிக மோசமான மனிதராக ஆகிவிட்டால்? இப்படி நிகழ்வது மிகவும் துரதிஷ்டவசமானது. ஆனால், தலைமுறை தலைமுறையாக இது இப்படித்தான் ஆகிக்கொண்டிருக் கிறது.

இதுதான் மாறுவதற்கான நேரம். உங்களை நீங்களே மாற்றிக்கொள்ள உங்களுக்கு இது வேண்டும். அது வேண் டாம் என்பதை நீங்கள் தீர்க்கமாக முடிவு செய்ய இதுதான் உகந்த நேரம்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# இவ்வாண்டுக்கான (2013) நோபல் பரிசுகள்



ஜேம்ஸ் ஈ.ரோத்மன், ரண்டி டயிள்யூ.சேக்மன், தோமஸ் சி.சுதோப்

### மருத்துவத்துக்கான பரிசு

அமெரிக்கர்களான ஜேம்ஸ் ஈ.ரோத் மன், ரண்டி டயிள்யூ.சேக்மன் மற்றும் ஜேர் மனியைச் சேர்ந்த தோமஸ் சி.சுதோப் ஆகிய மருத்துவப் பேராசிரியர்களுக்கு இந்த ஆண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசு வழங்கப் படுகிறது. இவர்கள் அமெரிக்க பல்கலைக் கழகங்களில் பேராசிரியர்களாக பணியா ற்றி வருகிறார்கள்.

இவர்கள் மூவரும் மனித உடலிலுள்ள செல்களுக்கு உள்ளேயும் வெளியேயும் ஹோர்மோன்கள் மற்றும் என்சைம்களின் பரிமாற்றம் குறித்த மூலக்கூறு கொள்கையை (செல் நகர்தல்) கண்டுபிடித்ததற்காக நோபல் பரிசு பெறுகின்றனர். அதாவது நமது உடலி லுள்ள ஒவ்வொரு செல்லும் ஒரு தொழிற் சாலை போன்றது. இதில் இருந்து மூலக் கூறுகள் வெளியாகின்றன. இந்த மூலக் கூறுகள் செல்களுக்கு இடையே ஹோர் மோன்கள் மற்றும் என்சைம்களின் பரிமாற் றத்துக்கு உதவுகின்றன. இதன்மூலம் உட லில் நோய்வாய்ப்பட்ட பகுதிகளுக்கு தேவை யான மருந்துகள் குறித்த நேரத்தில் குறிப் பிட்ட இடத்திற்கு அனுப்பப்படுகிறது.

இதன் அடிப்படையிலேயே நமது உடலில் சுரக்கும் இன்சுலின், ஒரு நரம்பு செல்லில் இருந்து மற்றொரு நரம்பு செல்லுக்கு அனுப் பப்படுகிறது. இதன்மூலம் இரத்தத்தின் சர்க் கரை அளவு கட்டுப்படுத்தப்படுகிறது. மிகவும் சிக்கலான இந்த செல் நகர்வு என்பது மிக கச்சிதமாக நடைபெறுகிறது. நீரிழிவு மற்றும் நரம்புசம்பந்தமானநோய் களுக்கான சிகிச்சையில் பெரும்பங்கு வகிக்கிறது. இந்த செல் நகர்வு எவ் வாறு செயற்படுகிறது என்பதையே இந்த 3 பேராசிரியர்களும் கண்டு பிடித்து இருக்கிறார்கள்.

பரிசுத்தொகையான 1.24 மில்லியன் அமெரி க்க டொலரை மூவரும் பகிர்ந்து கொள்வார்கள். டிசம்பர் 10 ஆம் திகதி ஸ்டாக்ஹோமில் பாரம் பரிய முறைப்படி நடை பெறவிருக்கும் விழாவில் இம்மூவருக்கும் நோபல் பரிசு வழங்கப்படும்.

### அமைதிக்கான பரிசு





இராசயன ஆயுதத் தடுப்பு அமைப்பு

அமைதிக்கான நோபல் பரிசு நோர் வேயின் ஒஸ்லோ நகரில் அறிவிக்கப்பட்டது. இந்த ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு இராசயன ஆயுதத் தடுப்பு அமைப்புக்கு வழங்கப்படுவதாக தேர்வுக்குழு அறிவித்துள் ளது. இராசயன ஆயுதங்களை ஒழிப்பதற்கு தீவிர முயற்சிகள் மேற்கொண்டதற்காக இந்த விருது வழங்கப்படுகிறது. நெதர்லாந்தைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள இந்த இராச யன ஆயுதத் தடுப்பு அமைப்பில் 190 நாடு கள் உறுப்பினர்களாக உள்ளன.

உலகில் இரசாயன ஆயுதங்களின் பரவ லைத் தடுப்பதற்கு 1993, ஜனவரி, 13 இல ஐ.நா, சர்வதேச உடன்படிக்கையை மேற் கொண்டது. இந்த உடன்படிக்கையைச் செயற் படுத்தும் விதமாக 1997 ல் இரசாயன ஆயு தங்கள் கண்காணிப்பு தடுப்பு அமைப்பு ஏற் படுத்தப்பட்டது. இதன் தலைமை அமைவிடம் நெதர்லாந்து நாட்டின் தி ஹேக் நகரில் உள்ளது. கடந்த 16 ஆண்டுகளில் அந்த அமைப்பு உலகம் முழுவதும் 57ஆயிரம் தொன் இரசாயன ஆயுதங்களைக் கண்டு பிடித்து, அவற்றை அழித்துள்ளது.

ஐ.நா.வுடன் இணைந்து பணியா ற்றும் இந்த அமைப் பின் இரசாயன ஆயுத ஒழிப்புக் குழுவினர், தற்போது சிரியாவில் இரசாயன ஆயுத ஒழிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். ரஷ்ய அதிபர் விளா டிமீர் புட்டீன், பாகிஸ் தானைச் சேர்ந்த மாணவி மலாலா உட்பட 259 பேர், 2013 ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசுக்கு போட்டியிட்டனர். அமைதிக்கான நோபல் பரிசை இதுவரை 100 தனிநபர் களும், 24 அமைப்புகளும் பெற்றுள்ளனர்.

அதிகபட்சமாக சர்வதேச செஞ்சிலுவை சங்க குழு 3 முறை இவ்விருதை பெற்றுள் ளது. இதேபோல் அகதிகளுக்கான ஐ.நா. உயர்நிலை ஆணையத்தின் அதிகாரிக்கு 2 முறையும் இவ்விருது கிடைத்துள்ளது.

இதேவேளை, நோபல் பரிசு கிடைக்கா தது குறித்து பாகிஸ்தான் சிறுமி மலாலா கூறுகையில், "நோபல் அமைதிப் பரிசுக் குழு எடுத்துள்ளது மிகச் சரியான முடிவு. காரணம், நான் இன்னும் பல பணிகள் மேற்கொள்ள வேண்டும். அந்த பரிசுக்கு என்னை பரிந் துரைத்ததையே நான் பெருமையாகக் கருது கிறேன்.

இருப்பினும், மக்கள் எனக்கு தங்கள் பரிசை வழங்கியுள்ளனர். என் போராட்டத் துக்கும் விழிப்புணர்வு பிரச்சாரத்துக்கும் நோபல் பரிசு கிடைக்கும் என எதிர்பார்த்தேன். எனினும் இறுதிவரை பெண் கல்விக்காக உழைப்பேன். என் வாழ்நாளில் அந்தப் பரிசைப் பெறுவேன் என்று உறுதிப்படத் தெரிவித்தார்.

### பொருளாதாரத்துக்கான பரிசு

அமெரிக்கர்களான யூஜின் எஃப் ஃபாமா, லார்ஸ் பீட்டர் ஹான்சென் மற்றும் ராபர்ட் ஷில்லர் ஆகியோருக்கு கிடைத்துள்ளது. சொத்து விலைகள் குறித்து அவர்களின் ஆய்வுக்காக அவர்களுக்கு இந்த பரிசு கிடைத் துள்ளது. மருத்துவம், இயற்பியல், வேதியியல், அமைதி, இலக்கியம் ஆகிய துறைகளுக் கான பரிசை ஸ்வீடனைச் சேர்ந்த தொழில் அதிபர் ஆல்பிரட் நோபல் 1895ஆம் ஆண்டு



யூஜின் எஃப் ஃபாமா, லார்ஸ் பீட்டர் ஹான்சென், ராபர்ட் ஷில்லர்

உருவாக்கினார். ஆனால், நோபலை கௌர விக்கும் வகையில் 1968 ஆம் ஆண்டு பொருளாதாரத்துக்கான நோபல் பரிசை ஸ்வீடனைச் சேர்ந்த சென்ட்ரல் வங்கி உரு



தொழில் அதிபர் அல்பிரெட் நோபல்

வாக்கியது. பொருளாதாரத்துக்கான நோபல் பரிசை 3 பேர் கொண்ட குழுவாக பகிர்ந்து கொள்வது இது 6- வது முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

-இணையம்- (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் கல்வி மேம்பாட்டுக்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்கலாம்

## கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி அமைச்சின் செயற்றிட்டத்தின் கீழ், வடமாகாணத்தின் கல்விசார் பிரச்சினைகளையும் அதற்குரிய தீர்வுகளையும் இனங்காணும் படி முறைகளில் ஒன்றாக பொதுமக்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள், பொது அமைப்புக்கள் , பெற்றோர் மற்றும் மாணவர்களிடமிருந்து கல்விசார் பிரச்சினைகளையும் அவற்றின் தீர்வுகளுக்கான முன்மொழிவுகளையும் எதிர்பார்ப்பதாக வடமாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் செ.சு. செபஸ்ரியன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சபையின் கல்வி அமைச்சரின் கருத்துக்கு அமைவாக வடமாகாணத்தின் தற்போதைய கல்வி நிலையை ஆராய்ந்து அவற்றை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டங்களை அமுல்படுத்தும் நோக்கில் வடக்கு மாகாணத்தின் கல்விமான்களை உள்ளடக்கியதாக ஆறு பிரதான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதன்படி கற்றலும் கற்பித்தலும், மாணவர்- ஆசிரியர் ஒழுக்கமும் ஆற்றுப்படுத்துகையும், ஆசிரியர்கள், நிர்வாகிகள் சம்பந்தமானவை, நிதி தொடர்பானது-உத்தியோகத்தர் தேவைகள், மாணவர் தேவைகள், கல்வி நிர்வாக அமைப்புகளும் அதற்கான மாற்றீடுகளும், திட்டமிடல் மற்றும் தரவுகள் மையமான ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் எனும் ஆறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இக் குழுக்கள் மூலமே மேற்படி வடமாகாணத்தின் கல்விசார் பிரச்சினைகளையும் அதற்குரிய தீர்வுகளுக்கான முன்மொழிவுகளும் கோரப்பட்டுள்ளன என தெரிவித்துள்ளார்.

எனவே, வடமாகாண கல்வி நிலையை மேம்படுத்த கருத்துக்களை முன்வைக்க விரும்புவோர் தமது கருத்துக்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னர் கலாநிதி நா. எதிர்வீரசிங்கம்,இணையக் கற்கைநெறி நிறுவனம், 66, கட்டைப்பாலி ஒழுங்கை, ஆனைக் கோட்டை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபால் மூலமோ அல்லது ethirveerasingam@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பிவைக்க முடியும் எனவும் ஆங்கில மூலத்திலும் தமது கருத்துக்களை முன்வைக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-5)

# மலேசியப் பிரதமர் கலந்து கொள்வார்

(கொழும்பு)

கொழும்பில் அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாட்டில் மலேசிய பிரதமர் நஜீப் துன் ரசாக் கலந்து கொள்வது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மலேசிய பிரதமர் பொதுநலவாயு நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வார் என மலேசிய வெளிவிவகார அமைச்சின் தெற்காசியாவுக்கான உதவிச் செயலாளர் மாஷிடா அஹமட் தெரிவித்தார்.

இலங்கை தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் போர்க் குற்றத்தில் ஈடுபட்டது என்ற காரணத்தினால் மலேசிய பிரதமர் நஜீப் கொழும்பில் நடைபெறும் பொது நலவாய மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என அந்த நாட்டை சேர்ந்த பல கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இலங்கை அரசாங்கம் அந்த நாட்டு பிரஜைகளான சிறுபான்மை தமிழ் மக்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளதால் பிரதமர் நஜீப் மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்று மலேசியாவில் உள்ள இந்திய தமிழ் அரசசார்பற்ற அமைப்புகள் சில தினங்களுக்கு முன்னர் கோரிக்கை விடுத்திருந்தன.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள மலேசியாவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். மனோகரன், இலங்கைக்கு எதிராக கடந்த வருடம் ஐ.நா.மனித உரிமை பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் மலேசியா கலந்து கொள்ளவில்லை.

இந்த நிலையில் மாநாட்டில் பிரதமர் கலந்து கொள்வது அவநம்பிக்கையை ஏற்படுத்துவதாக குறிப்பிட்டார். எவ்வாறாயினும் கனடா தவிர கென்யா மாநாட்டை புறக்கணிக்க போவதாக தெரிவித்துள்ளது. உகண்டா,தன்சானியா, ருவாண்டா, நைஜீரியா, தென்னாபிரிக்கா, ஸம்பியா ஆகிய நாடுகளும் கூட்டாக மாநாட்டை புறக்கணிக்க உள்ளதாக கூறியுள்ளன. (எ-11)

# இலங். 1.4 மில்லியன் டொலரை மலேசியா முதலீடு செய்யும்

(கொழும்பு)

இலங்கையின் தொழில்நுட்பத் துறையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு மலேசியாவின் பங்களிப்பு அவசியம் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இரண்டு நாட்கள் பயணமாக மலேசியாவிற்கு சென்றிருந்தார்.

மலேசியாவின் பிரதமர் நஜீப் ரசாக்கை அமைச்சர் பீரிஸ் கோலாலம்பூரில் உள்ள அந்நாட்டு பாராளுமன்றில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இச் சந்திப்பின் போது வர்த்தக பேரவைக் கூட்டம் எவ்விதம் நடத்தப்படும் என்பதை அமைச்சர் பீரிஸ் மலேசியப் பிரதம மந்திரிக்கு விளக்கிக் கூறினார்.

இந்த வர்த்தகப் பேரவையில் 460 வெளிநாட்டு பிரதிநிதிகளும் அதே அளவிலான இலங்கையின் வர்த்தகப் பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளார்கள். அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கலந்து கொள்வார்.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கூட்டத்தில் நடைமுறைப்படுத்தக் கூடிய செயற்பாடுகள் பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்துவது அவசியம் என்றும் தாம் இவ் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள இருப்பதாகவும் நஜீப் தெரிவித்தார்.

இலங்கையில் பொருளாதார அபிவிருத்தியுடன் சமூகத்தின் பங்களிப்பு பாராட்டக் கூடிய விடயம் என்றும் அவர் தெரிவித்தார்.

மலேசிய வர்த்தக துறைமுகங்களுக்கு இலங்கையின் வர்த்தக மற்றும் முதலீடுகளில் ஈடுபடுவதற்கு இலங்கை அரசாங்கம் வழங்கும் பாரிய வசதிகளுக்கும் மலேசியப் பிரதம மந்திரி நன்றி தெரிவித்தார்.

தொழில்நுட்ப துறையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு மலேசியாவின் பங்களிப்பு அவசியம் என்றும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இச் சந்திப்பின் போது கோரிக்கை விடுத்தார்.

இப்போது மலேசியா இலங்கையின் மிகப் பெரிய் முதலீடு செய்யும் ஒரு நாடாக விளங்குகிறது என்றும் மலேசியா தற்போது 1.4 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கையில் முதலீடு செய்து இருப்பது குறித்து தான் மகிழ்ச்சி அடைவதாகவும் மலேசியப் பிரதமர் இச் சந்திப்பின் போது தெரிவித்தார்.

இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை 850 மில்லியன் டொலர்களில் இருந்து அதிகரிப்பது பற்றியும் இருவரும் கலந்துரையாடினர். (அ-2)

# கூடங்குள அணுஉலையால் இலங்கைக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

கூடங்குளம் அணுஆலை இலங்கைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்த கூடுமென அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடன் இலங்கை உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட வேண்டும். ஏற்கனவே விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இந்தியா எவ்வித பதிலையும் அளிக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜப்பானின் புகுசிமாவில் இடம் பெற்ற அணுக்கசிவு போன்றதொரு சம்பவம் இடம்பெறவுள்ளதாகவும் இது இலங்கையில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கூடங்குளம் அணு உலையில் கசிவு ஏற்படுகின்றதா என்பது பற்றி தொடர்ந்தும் ஆராயப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். நாட்டின் மின் சக்தி தேவைக்கு அணு உலைகளைப் பயன்படுத்துவது குறித்து இலங்கை அரசாங்கம் இதுவரையில் கொள்கை அடிப்படையிலான தீர்மானங்கள் எதனையும் எடுக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கூடங்குளம் அணுஉலை மின் உற்பத்திப் பணிகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# சூதாட்ட விவகாரம் சபையின் நிகழ்ச்சி நிரலில் இருந்து நீக்கம்

(கொழும்பு)

கசினோ சூதாட்ட வசதிகளுடன் கூடிய இண்டு ஆடம்பர ஹோட்டல்களை நிர்மாணிக்க அனுமதி வழங்கும் இண்டு வர்த்தமானி அறிவித்தல்கள் நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் இருந்து நீக்கப்படும் என அமைச்சரும் சபை முதல்வருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இந்த இரண்டு வர்த்தமானி அறிவித்தல்கள் தொடர்பில் நாளை விவாதம் நடைபெறவிருந்தது.

எனினும் அவை குறித்த விவாதம் இடம்பெறாது எனவும் அதற்கு பதிலாக வேறு இரண்டு சட்ட மூலங்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

இதற்கமைய விளையாட்டுகளில் கலந்து கொள்ளும் வீரர்கள் ஊக்க மருந்து பயன்படுத்த தடை விதிக்கும் சட்ட மூலம் மற்றும் பௌத்த விகாரைகள் , ஆலயங்கள் திருத்தச்சட்ட மூலம் ஆகியன அன்றைய தினங்களில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என நாடாளு மன்றத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# ஆமை முட்டையிடுவது போன்று அமைச்சர்கள் தொகை அதிகரிப்பு

## ஹரிசன் எம்.பி.கிண்டல்

(கொழும்பு)

இலங்கையில் அமைச்சர்களின் எண்ணிக்கை ஆமை முட்டையிடுவதைப்போல் அதிகாரித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீ.ஹரிசன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமது பரிவாரங்களை போஷிக்கும் அத்தியாவசியமே அரசாங்கத்திற்கு இருக்கின்றது. மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு கிடையாது.

இதன் மூலம் நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு வெளிநாடுகளுக்கு செல்லும். கசினோ வர்த்தகம் காரணமாக இலங்கையில் பாதாள உலகக் குழுக்கள் அரசாளும் நிலைமை உருவாகும்.

கசினோ விளையாட்டை இலங்கை மக்கள் விளையாட தடைவிதிக்க போவதாக கூறி அரசாங்கம் பைலாபாடி வருகிறது.

கொழும்பில் நான்கு இடங்களில் கசினோ நிலையங்களை ஸ்தாபிக்கவுள்ள அரசாங்கம் எதிர்காலத்தில் கண்டி, அநுராதபுரம் போன்ற புண்ணிய வழிபாட்டு நகரங்களிலும் கசினோ நிலையங்களை ஸ்தாபிக்கும். அநுராதபுரம் நகரில் தற்போது அதிகளவான உடல் பிடிப்பு நிலையங்கள் இயங்குகின்றன.


ஐக்கிய தேசியக் கட்சி கசினோ சூதாட்டத்தை முற்றாக எதிர்க்கின்றது. இலங்கையின் கலாசார அமைச்சர் வேடுவத் தலைவரான வன்னிலா எத்தாவுக்கு வெற்றிலை, பாக்கை எடுத்துச் செல்ல இருக்கின்றார். எத்தனோல் மதுசாரத்திற்கு மானியம் வழங்க வேண்டும் என்று ஆளும் கட்சியினர் நாடாளுமன்றத்தில் வாதிட்டனர் என்றார். (அ-2)



புனித பத்திரிசியார் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற இரத்ததான முகாமில் மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட 125 பேர் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்ததானம் வழங்கினர். அந் நிகழ்வை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பயனுள்ள குறிப்புக்கள்



கலாநிதி த.கலாமணி
சட்டத்துறைத் தலைவர்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்.

பரீட்சை பற்றிய பயம் மாணவர்களிடத்திலே காணப்படுவது இயல்பானது. பரீட்சையில் நான் எப்படிச் செய்யப்போகிறேன்? பரீட்சை கடினமாக இருக்குமா? பரீட்சைக்கு போதிய அளவு என்னைத் தயார்படுத்தி உள் ளேனா? இவ்வாறான பல வினாக்கள் மாணவர்களிடத்தில் எழுவது வழமையானது தான். இதனால் பரீட்சை நெருங்கும் சமயத்தில் மெல்ல மெல்லப் பரீட்சை பற்றிய பயமும் உள்ளத்திலே ஒருவித பதகளிப்பும் தோன்றக் கூடும்.

ஆனால், மாணவர்கள் ஒரு விடயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மேற்கூறியவாறான வினாக்களை தம்மிடத்தே எழுப்பி பரீட்சை நெருங்கும் நேரத்திலே மனப்பயங் கொள்வதாலோ பதகளிப்பு அடைவதாலோ எந்தவிதமான நன்மையும் இல்லை. மாணவர்கள் போதிய அளவுக்கு தம்மை தயார் செய்யவில்லையோ என ஐயுறவு கொண்டாலும் கூட பரீட்சைத் தினத்திற்குக் கிட்டிய நாட்களில் தம்மைத் தயார் செய்வதற்கான கால அவகாசமும் அவர்களுக்குக் கிடைக்காது. எனவேதான் பரீட்சை பற்றி எவ்வித பயமும் கொள்ளாது மனப் பதகளிப்பின்றி நிதானமாக மன மகிழ்ச்சியோடு பரீட்சையை எதிர்கொள்வதற்கு தயாராக வேண்டியது அவசியமாகும்.

**பரீட்சை குறித்த பயத்தினாலும் பதகளிப் பினாலும் ஏற்படக் கூடிய விளைவுகள்**

நாம் எமது வாழ்விலே பல்வேறு மனவெழுச்சிகளுக்கு உள்ளாகின்றோம். மகிழ்ச்சி, துக்கம், கோபம், பயம் என பல்வேறு மனவெழுச்சிகள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்படுவது வழமையானது.

இவற்றுள் பயம் என்ற மனவெ ழுச்சி பல்வேறு காரணங்களால் ஏற்படக் கூடியது. நாம் எதிர்பார்க்கும் இலக்கை அடையத் தவறி விடுவோமோ என்ற ஏக்கம் சில சமயங்களில் எமக்கு மனப் பயத்தை ஏற்படுத்தி விடுகின்றது. தாம் பரீட்சையில் சித்தியடைய தவறி விடு வோமோ என்ற ஐயுறவும் ஏக்கமும் மாணவர்களிடையே பரீட்சை பற்றிய மனப் பயத்தை ஏற்படுத்தக் காரணமாகின்றன.

பரீட்சை பற்றிய பயம் எமக்கு ஏற்பட்டதும் அது எம்மிடத்தில் ஒரு பதகளிப்பு நிலையைத் தோற்றுவித்து விடுகின்றது. பொதுவாக நாம் உணரும் அசௌகரிய நிலையை இடர் முன் உணர்தன்மையை அல்லது மன இறுக்க உணர்வை பதகளிப்பு என்போம். எனவே, பரீட்சை பற்றிய பயத்தினால் எமக்கு ஏற்படும் அசௌகரிய நிலையான பதகளிப்பு எமது பரீட்சை வெற்றியில் கணிசமான அளவு தாக்கத்தை ஏற்படுத்தி விடலாம் என்ற எச்சரிக் கையுடன் மனப்பயத்தையும் பதகளிப்பையும் தவிர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகள் பற்றிச் சிந்திப்பது நன்மை தரக்கூடியதாகும்.

பதகளிப்புக்குள்ளாகும் மாணவர்கள் பொதுவாக தாழ்ந்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்வதாக ஆய்வுகள் சில எமக்குத் தெரிவிக்கின்றன. பதகளிப்பு நிலையில் மன ஒருமைப் பாடின்றி , கவனம் திசை திரும்பிய நிலையில் பல தவறுகளை மாணவர்கள் விட்டு விடுகின்றார்கள். பரீட்சையில் சித்தியெய்த தவறி விட்டால் இடம்பெறக்கூடிய எதிர்விளைவுகளைப் பற்றிய சிந்தனையே மாணவர்களிடத்தில் கவலையைத் தோற்றுவித்து விடுகின்றது.

அவ்வாறு எதிர்மறையான விளைவுகளைச் சந்திக்கப் போகின்றவர்களாகத் தம்மை கற்பனை செய்துகொண்டு கவனக்குவிப்பிலும் படித்தவற்றை நினைவுகூர்வதிலும் இவர்கள் இடர்படுகின்றார்கள். இவற்றைவிட உள்ளங்கை வியர்த்தல், வயிற்றுக் குழப்பம், இத யத்துடிப்பு வீதம் அதிகரித்தல் போன்ற உடற் கூற்றியல் விளைவுகளையும் அதன் காரணமாக பயத்துக்கு உள்ளாகும் நிலையையும் இவர்கள் அடைகின்றார்கள்.

**பதகளிப்பு நிலைமையைச் சமாளித்தல்**

பரீட்சை பற்றிய மன அழுத்தங்களோ பதகளிப்பு நிலையோ ஏற்படாவண்ணம் மாணவர்கள் சமநிலையான ஆளுமையை வளர்த்துக் கொள்வதற்கு ஆசிரியர்கள் உதவ வேண்டும். மாணவர்களிடம்



கல்வித் தரிசனம்

ஒழுங்கான படிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திவிட்டால் அது இலகு வாகின்றது.

ஆனால், ஒழுங்கான படிப்புப் பழக்கத்தை கொண்ட மாணவர்களும்கூட பரீட்சை நெருங்கும் காலத்தில் இலகுவாக பதகளிப்பு நிலைக்கு ஆட்படுத்தப்பட்டுவிடும் சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளுமே காணப்படுகின்றன. எனவே, பதகளிப்புத் தொடர்பான நிலை எல்லா மாணவர்களுக்குமே பொதுவானது என்பதால் அந்நிலையை சமாளிப்பதற்கான உபாயங்கள் பற்றி நோக்குவது பொருத்தமானது.

பதகளிப்பு நிலைமைகளை சமாளித்தல் தொடர்பாக மூன்று முக்கியமான உபாயங்கள் முன்வைக்கப்படுகின்றன.

1. பிரச்சினை விடுவித்தல்
2. மனவெழுச்சியைச் சமாளித்தல்
3. குறித்த நிலைமை ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களைத் தவிர்த்தல்

பிரச்சினை விடுவித்தல் உபாயமானது பரீட்சைக்கு முன்பான தயார்நிலை குறித்த ஓர் உபாயமாகும். பரீட்சைக் காலத்துக்கு முன் பதாகவே போதிய கால அவகாசம் எடுத்து பரீட்சையைமையப்படுத்தி படிப்பதற்கான கால அட்டவணை ஒன்றைத் திட்டமிட்டுக் கொள்வதும் அக்கால அட்டவணைப் பிரகாரம் படிப்பை மேற்கொள்வதும் சிறந்த பாடக் குறிப்புக்களைப் பெற்றுக்கொள்வதும் பரீட்சை நெருங்கும் காலத்தில் மீட்டல் செய்வதற்கான சுருக்கக் குறிப்புக்களை தயார்செய்வதும் படிப்பதற்கென பிறரின் குறுக்கீடுகளுக்கு இடமளிக்காத பாதுகாப்பான இடத்தை தேர்ந்தெடுத்துக் கொள்வதும் எனப் பல நடவடிக்கைகளை பிரச்சினை விடுவித்தல் உபாயம் உள்ளடக்கியுள்ளது.

அதாவது பரீட்சையை மையப்படுத்தி பரீட்சைக்கு முன்னரேயே மாண வர்கள் தம்மை நன்கு தயார்படுத்தும் முன்திட்ட நடவடிக்கைகளை உள்ளடக்கியதாக பிரச்சினை விடுவித்தல் உபாயம் காணப்படுகின்றது.

மனவெழுச்சியை சமாளித்தல் என்பது பரீட் சையின்போது அல்லது பரீட்சைக் காலத்தில் பதகளிப்பு உணர்வு நிலையை தணிப்பதற்கான உபாயமாகும். மூச்சுப் பயிற்சிகள், தளர்வுப் பயிற்சிகள் போன்றன மனவெழுச்சியை சமாளிப் பதற்கான நடவடிக்கைகளாகும். சிலவேளைகளில் எம்மைத் திசை திருப்பி விடாமல் நாங்கள் சொல்பவற்றைப் பொறுமையோடு கேட்கக் கூடிய நண்பர் ஒருவரிடம் எமது பதகளிப்பு நிலை குறித்து அந்தர மன உணர்வுகளை விபரிப்பதும்கூட எமக்கு ஆறுதல் தந்து எம்மை பதகளிப்பு நிலையிலிருந்து விடுவிக்கக் கூடும்.

குறித்த பதகளிப்பு நிலை ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களைத் தவிர்த்துக் கொள்ளல் என்பது மாணவர்கள் எல்லோரினதும் கவனத்தைப் பெற வேண்டிய முக்கியமான உபாயமாகும். நாம் பரீட்சைக்கு எவ்வளவு தூரம் எம்மைத் தயார் செய்தாலும் கூட இறுதி நேரத்திலே எங்களின் உறுதி நிலையைக் குலைத்து எம்மை பதகளிப்பு அடையச் செய்கின்ற செய்திகள் எம்மை வந்தடையலாம். உதாரணமாக நாம் குறிப்பிட்ட ஒரு விடயம் முக்கியத்துவம் குறைந்த தெனக் கருதி அதனைத் தவிர்த்திருக்கும் போது பரீட்சைத் தினத்தன்று காலையில் சந்திக்கும் உங்களின் சகமாணவர் அவ்விடயம் பரீட்சை க்கு வரலாம் என்று நம்புவதாகக் கூறி உங்க ளைக் குழப்ப நிலைக்கு இட்டுச் செல்லலாம். எனவே இதை ஒத்த பல சந்தர்ப்பங்களைத் தவிர்த்தல் எங்களுடைய் சமநிலையைப் பேண எமக்கு உதவும்.

**பதகளிப்பு நிலையை தோற்றுவிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள்**

1. பரீட்சை குறித்து போதிய அளவுக்குத் தயார் செய்ய முடியாமற்போனமை குறித்து பரீட்சைக்கு ஓரிரு தினங்களுக்கு முன் அல்லது பரீட்சைத் தினத்தன்று மாணவர்களுடன் உரையாடுதல்

2. ஒரு பாடப் பரீட்சைக்கு முதற் தினத்தில் அப் பாடம் சம்பந்தமான சகல குறிப்புக்களையும் படித்தல்

3. பரீட்சை நடைபெறவுள்ள நாளுக்கு இரண் டொரு தினம் முன்பாக நடைபெறும் நிபுணர்கள் நடத்தும் விசேட வகுப்புக்களுக்கும் கருத்தரங்குகளுக்கும் சமூகமளித்தல்

4. பரீட்சை தினத்துக்கு முதல்நாள் இரவில் சகமாணவர்களுடன் கலந்துரையாடிப் படித்தல்

5. பரீட்சைக்கு முன் சக மாணவர்கள் கூறும் சந்தேகங்களைச் செவிமெடுத்தல்.

6. பரீட்சை மண்டபத்துக்கு பரீட்சை தொடங் கும் நேரத்துக்கு சற்று முன்பாகத் தான் சென்று சுட்டிலக்கத்தைக் காணாது தேடுதல்.

7.பரீட்சை வினாத்தாளை சரியாக வாசிக்காமல் விடை எழுதத் தொடங்குதல்

8. நன்றாகத் தெரிந்த வினாக்களில் அதிக நேரத்தைச் செலவழித்து ஏனைய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு நேரம் போதாமையை உணர்தல்

பரீட்சை எழுதுமுன்னர் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கைகள்

1. பரீட்சைக்கான கால அட்டவணை கிடைத் ததும் நீங்கள் தோற்றவிருக்கும் பாடங்களுக்கான கால அட்டவணையைத் தயாரித்து எத்தினத்தில் , காலையிலா, பிற்பகலிலா எனக் குறித்து வைத்துக் கொள்ளல்.

2.பரீட்சைக்கு முதல் நாளிலேயே பரீட்சைக் குத் தேவையான பேனை, பென்சில், ஏனைய சாதனங்கள் என்பவற்றைத் தயார் செய்து வைத்தல்

3. பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம், தேசிய அடையாள அட்டை போன்றவற்றை தயாராக வைத்திருத்தல்.

4.பரீட்சை மண்டபத்துக்கு பரீட்சை ஆரம்பிக்கும் நேரத்துக்கு குறைந்தது அரை மணித்தியாலம் முன்னதாகவே சென்றடையக் கூடிய தாக வீட்டிலிருந்து நேரத்துக்கு புறப்படல்.

5.சைக்கிளில் செல்பவராயின் ரயர்களில் காற்று உள்ளதா என நேரத்துக்கே பரிசீலித்தல்.

6.பரீட்சை மண்டபத்திலோ அல்லது பரீட்சை மண்டபத்தில் நுழைய முன்னரோ ஒருவருடனும் அதிகம் கதைப்பதை தவிர்த்து, சுட்டிலக்கம் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து உங்களின் இருக்கையில் அமைதியாக பரீட்சை மேற்பார்வையாளரின் அறிவுறுத்தலுக்காக எதிர்பார்த்திருத்தல்.

7. இருக்கும் இடத்தில் போதிய வெளிச்சம்கிடைக்கின்றதாஎனப்பார்த்துக்கொள்ளல்.

8. முதல் நாளில் நடந்து முடிந்த பாடத்தின் வினாத்தாளைப் பற்றி மீட்டுப் பார்க்காதிருத்தல்.

பரீட்சை எழுதும் சமயத்தில் எடுக்க வேண்டிய கவனங்கள்

1.வினாத்தாளைப் பெற்றுக் கொண்டும் வினாத்தாளிலுள்ள அறிவுறுத்தலை மிகவும் கவனமாக வாசித்தல், பின்னர் வினாக்களை மேலோட்டமாக வாசித்து தெரிவு செய்யவுள்ள வினாக்களைத் தீர்மானித்துக் கொள்ளல்.

2.நன்கு தெரிந்த வினாவுக்கான விடையை எழுத ஆரம்பித்தல், அந்த வினாவுக்குரிய இலக்கத்தையே விடைத் தாளிலும் எழுதுதல்.

3.வினாவை ஒருமுறைக்கு இருமுறை வாசித்து வினாவிலுள்ள முதன்மைப் பதங்களை (Keyterms) அடிக்கோடிட்டுக் கொள்ளல்.

4.ஒவ்வொரு வினாவிலும் அதற்கான முதன் மைப் பதத்திலிருந்து விடையைத் தீர்மானித்துக் கொள்ளல்.

(வியாழன் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு -கிழக்கு இணைப்பு பாதையும் பணியும்...!




வடக்கு மாகாணசபைக்கு நடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றதை அடுத்து, வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்புத் தொடர்பான விவகாரம் அரசியல் அரங்கில், மீண்டும் முன்னிலைக்கு வந்துள்ளது.

வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், வடக்கு -கிழக்கு இணைந்த சுயாட்சி நிர்வாக அமைப்பு ஒன்றையே இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக முன்வைத்திருந்தது.

உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான இந்த தீர்வுத் திட்டத்தை, இலங்கை அரசாங்கம் எப்போதோ நிராகரித்துவிட்டது. அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாண சபையைக் கைப்பற்றியதும், வடக்கையும் கிழக்கையும் இணைத்து தனி ஈழத்தை அமைக்கப் போகிறார்கள் என்று சிங்களத் தேசியவாத சக்திகள் குரல் எழுப்பத் தொடங்கிவிட்டன. வடக்கும் கிழக்கும் இணைந்த தீர்வை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தினாலும், வடக்கு -கிழக்கு இணைப்புக்கான எந்த முயற்சிகளும் முன்னெடுக்கப்படாத போதிலும்," சிங்களத் தேசியவாத சக்திகள் இதனை ஒரு பெரிய அச்சுறுத்தலாக வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டனர்.

வடக்கு- கிழக்கு இணைப்பு என்பது, முக்கியமாக கிழக்கு மாகாண மக்களின் விருப்பத்தில் தான் தங்கியுள்ளது. மூன்று இன மக்களும் கிட்டத்தட்ட சம அளவில் வாழுகின்ற கிழக்கு மாகாணத்தில், வடக்குடன் இணைந்து கொள்வதற்கான சம்மதத்தைப் பெற்றுக் கொள்வது ஒன்றும் இலகுவான காரியமல்ல.

ஏனென்றால், கிழக்கில் வாழும் சிங்கள மக்கள் ஒருபோதும் இதற்கு ஆதரவு தெரிவிக்கப்போவதில்லை. இதனால், வடக்கு -கிழக்கு இணைப்பில், முக்கியமான பங்கை வகிக்கப் போகிறவர்கள் முஸ்லிம் மக்களாகவே இருக்கப்போகிறார்கள்.

கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் இன்னும் முழுமையான நல்லுறவு ஏற்பட்டுவிட்டதாக கருத முடியாது. அங்கு பல இடங்களில் இந்த இரு இனங்களுக்கும் இடையில் இனரீதியான சச்சரவுகள் நீடிக்கின்ற நிலையில், வடக்குடன் இணைந்துகொள்வதற்கு முஸ்லிம்கள் அவ்வளவு இலகுவாக சம்மதிக்க வாய்ப்பில்லை.

வடக்கு- கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டால், முஸ்லிம்களுக்கென தனியான நிர்வாக அலகு- அதாவது தென்கிழக்கு மாகாணம், உருவாக்கப்பட வேண்டும் என்பதை அஷ்ரப் காலத்திலேயே சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தியது.

இப்போது, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், முஸ்லிம்களுக்கு தனி அலகு கோரிக்கை எதையும் முன்வைப்பதில்லை. அத்கான எந்த அரசியல் பேரத்திலும் ஈடுபடவும் இல்லை.

வடக்குடன் கிழக்கை இணைப்பதற்கான முயற்சிகள் என்பது இன்னமும் பூச்சிய நிலையில் இருக்கிறது என்பது தான் உண்மை.

வடக்கு- கிழக்கை இணைப்பதற்கு தமிழர் தரப்பு, பேரம் பேசத்தக்க அளவுக்கு பலமான நிலையில் இருந்திருந்தால்-அல்லது 1987ஆம் ஆண்டு நிலைப்பாட்டில் இந்தியா இருந்திருந்தால், அரசியல் ரீதியாக இத்தகைய இணைப்பு முயற்சிகளை முன்னெடுத்திருக்க வாய்ப்புகள் உள்ளன.

ஆனால், தமிழர் தரப்பு இப்போது பேரம் பேசும் பலமான நிலையில் இல்லாததால், இந்தியாவும் வடக்கு-கிழக்கு இணைப்பு விவகாரத்தில் அக்கறை காட்டாததால், இப்போதைக்கு வடக்கு- கிழக்கு இணைப்பு என்பது தமிழர்களின் ஒரு கனவாக மட்டும் இருக்கிறது.

கிழக்கு மாகாணம் வடக்குடன் இணைய விரும்பினால், வடக்கு மாகாணமும் அதற்கு இணங்கினால், வடக்கு- கிழக்கு இணைப்பை அரசாங்கத்தினால் தடுக்க முடியாது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறியிருந்தார்.

ஆனால், அப்படி வடக்கு- கிழக்கை இணைக்க முடியாது என்றும், அரசியலமைப்புக்கு முரணாக எதையும் செய்ய முடியாது என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருந்தார்.

எனினும் வடக்கு- கிழக்கு மாகாணங்கள் இணைய விரும்பினால் அதை தடுக்க முடியாது என்று மீண்டும் பதில் கொடுத்துள்ளார், முதலமைச்சர் விக்னேஸ்வரன்.

இந்த வாதிப்பிரதிவாதங்கள் அதிகார, அரசியல் மட்டங்களில் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால், நடைமுறையில் எந்த செயலாக்க முயற்சிகளும் இன்னும் நடக்கவில்லை.

அதேவேளை, வடக்கு- கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்ட முறை தவறு என்பதால் தான், அவற்றை பிரிக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதே தவிர, வடக்கையும் கிழக்கையும் இணைக்க முடியாது என்று கூறவில்லை.

ஆனால், அத்தகைய இணைப்புகளை சாத்தியமற்றதாக்கும் நோக்கில், அரசியலமைப்பில் இரண்டு திருத்தங்களைச் செய்வதற்கு அண்மையில் அரசாங்கம் எடுத்திருந்த இரண்டு நடவடிக்கைகள் இந்தியாவின் தலையீட்டினால் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சூழலில், வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் அரசியல் ரீதியான, சட்டரீதியான நடைமுறைகள் எதையும் உடனடியாக முன்னெடுக்கும் சாத்தியங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், கிழக்கில் உள்ள முஸ்லிம்கள் இதற்கு சாதகமான தீர்ப்பை அளிக்க முன்வந்தால் மட்டுமே, இந்த இணைப்பு சாத்தியமாகும்.

இரண்டு மாகாணசபைகளும் இணைந்து கொள்வதற்கு இணங்கினாலும், அரசியல் ரீதியாக அந்த முயற்சியை, சட்ட வலுவுள்ளதாக்குவதற்கு கருத்துக்கணிப்பு அவசியம் தேவைப்படும்.

இதனை ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவகாரமாக கருதி, தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, கருத்துக்கணிப்புக்கு உத்தரவிடுவார்.

ஆனால், இப்போதைய நிலையில் அத்தகைய கருத்துக்கணிப்பில் கிழக்கிலுள்ள முஸ்லிம்கள் அதற்கு ஆதரவளிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அதற்கான அரசியல் சூழல் அங்கு கிடையவே கிடையாது. நம்பிக்கைத் தன்மையை விட நம்பிக்கையீனம் தான் அதிகமாகவுள்ளது. ஆனால், வடக்கும் கிழக்கும் இணைந்தால், கூடுதலான அரசியல் உரிமைகளை பெற்றுக் கொள்ளலாம்; அதற்கான வாய்ப்புகள் கிடைக்கும் என்பதை உறுதிப்படுத்தினால் தான், முஸ்லிம்களும் முஸ்லிம் அரசியல் கட்சிகளும் மேற்படி சாதகமான நிலைக்குத் திரும்பும்.

இப்போதைக்கு அரசாங்கத்துடன் அண்டி நடந்துகொள்வதே அனுகூலம் அடைவதற்கான ஒரே வழியாக முஸ்லிம் அரசியல் தலைமைகள் கருதுகின்றன. அதனால் தான், கிழக்கு மாகாணசபையில் முரண்பாடுகளுக்கு மத்தியிலும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட நினைக்கின்றன.

இத்தகைய சூழலில், மாகாண சபையின் செயற்பாட்டில்தான் கிழக்கிலுள்ள முஸ்லிம் தலைமைகளை வடக்கு- கிழக்கு இணைப்புக்கு சார்பான நிலைக்குக் கொண்டுவர முடியும்.

அரசாங்கத்துடன் இணைந்து ஆட்சியமைத்துள்ளதால், கிழக்கு மாகாணசபையின் முக்கியத்துவம் குறைந்து, அந்த நிர்வாக அமைப்பு பெரியதாக- செயல்முறை அற்றதாக மாறியுள்ளது.

வடக்கு மாகாணசபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியிருந்தாலும், அதற்கு அரசாங்கம் முக்கியத்துவம் கொடுப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அதேவேளை, சர்வதேச அளவிலும் வடக்குமாகாண சபைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

இந்த தளத்தைக் கட்டியெழுப்பி, வலுவாக்குவதன் மூலம், கிழக்கிலுள்ள முஸ்லிம் மக்களும், அரசியல் தலைமைகளும் வடக்குடன் இணைவதால், கூடுதல் நன்மைகளை அடைய முடியும் என்ற நம்பிக்கையை உருவாக்கலாம்

அதுமட்டுமன்றி வடக்கிலுள்ள முஸ்லிம்களுடன் நல்லுறவை எற்படுத்தி, அவர்களையும் பங்காளர்களாக்குவதன் மூலமே கிழக்கில் அத்தகைய மாற்றத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. இதுவும் இனப் பிரச்சினைக்கான தீர்வு போன்ற நீண்டகால இலக்காகவே இருக்கும்.

இந்திய- இலங்கை உடன்பாட்டின் மூலம் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்த வடக்கு-கிழக்கு மாகாணங்களை, சிங்களத் தேசியவாதிகள் நன்கு திட்டமிட்டே பிரித்தனர். அப்படியிருக்கும்போது, அவற்றை மீள் இணைக்கும் முயற்சிகளை மேற்கொள்ளும் போது, கூடுதல் கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.


இந்த நீண்டகால இலக்கை அடைவதற்கு மாகாணசபையே கூடுதல் முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியிருக்கும். அந்த செயல்முறையை நோக்கி வடக்கு மாகாண சபையை நகர்த்துவதே இப்போது தமிழ்க்கட்சிகளினது முக்கியமான தேவைப்பாடாக உள்ளது.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

# 18.10.2013-16.11.2013



## கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

**மற்றவர்கள் மனம் புண்படாமல் பேசும் கும்ப இராசிநேயர்களே!**

**வசதி, வாய்ப்புக்கள் பெருகும்!**

உங்களுக்கு இந்த ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதன் சனி வலிமை இழந்து இருக்கிறார். பஞ்சமாதிபதி புதனும் வக்ரம் பெற்றிருக்கிறார். சப்தமாதிபதி சூரியனும் நீச்சம் பெற்று இருக்கிறார். இருந்தாலும் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை அந்த மூன்று கிரகங்கள் மீதும் பதிந்து புனிதப்படுத் துக்கிறது. அதுமட்டுமல்லாமல் அதோடு சேர்ந்திருக்கும் இராகுவையும் குரு பார்க்கிறார். எனவே, வலிமை யிழந்த கிரகங்கள குரு பார்வையால் வலிமை அடைகின்றன. அதன் விளைவாக நல்ல பலன்களை உங்களுக்கு கொடுக்க காரணமாக இருக்கின்றன.

என்ன இருந்தாலும் முதலில் கிரகங்கள் வலிமை இழந்துதான் இருக்கின்றன. எனவே, உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு அச்சுறுத்தல்கள், பிள்ளைகள் வழியில் தொல்லை, உடன்பிறப்புகளால் மனக்கவலை போன்றவைகள் உருவாகி நிவர்த்தியாகலாம். சுக்ரபலம் நன்றாக இருக்கிறது. 4,9 க்கு அதிபதியான சுக்ரன் 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். தொழில் ஸ்தானத்தில் வலிமை இழந்திருக்கும் சுக்ரன் தன் வீட்டைத் தானே பார்ப்பதால் தொழிலில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

இடம், பூமி சம்பந்தப்பட்ட வகையில் லாபம் கிடைக்கும். அங்காரக வழபாடும் ஆஞ்சநேயர் வழிபாடும் அவசியம் உங்களுக்குத் தேவை. பொதுவாக இராசிநாதன் வலிமை இழந்து இருப்பதால் அந்த இராசிநாதனுக்குரிய நாளில் அந்த இராசிகுரிய கோவிலுக்குச் சென்று வழிபட்டு வரவேண்டும். அப்பொழுது தான் நற்பலன்களை நாளும் நீங்கள் பெற இயலும்.

சனிபகவானை வழிபாடு செய்யலாம். அங்காரக பரிகாரம் செய்ய சிவன் ஆலயங்களுக்குச் சென்று அங்கு நவக்கிரகத்தில் உள்ள செவ்வாயையும் சனியையும் வழிபட்டு வரலாம். சனி கவசம் பாடி வழிபடுவதோடு ஜோடி தீபமாக எள் தீபம் ஏற்றுங்கள. விளக்கேற்றி வழிபடுவதன் மூலம் ஒளிமயமான எதிர்காலம் உருவாகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

பஞ்சமாதிபதியாகவும் புதன் அமைவதால் பூர்வீக சொத்துக்களில் பிரச்சினைகள் தலைதூக்கும். அருகில் இருக்கும் பெரியோர்களை கலந்து ஆலோசிப்பது பிரச்சினை தீர வழி வகுக்கும்.

சுக்ர பெயர்ச்சிக்காலம்!

ஒக்டோபர் 31 ஆம் திகதி தனுசு இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். 4,9 க்கு அதிபதியான சுக்ரன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளம் சிறப்பாக இருக்கும். வாகன யோகம் உண்டு. வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

பொன்னான புதனின் பெயர்ச்சி!

நவம்பர் 3 ஆம் திகதி துலாம் இராசிக்கு முறையாக புதன் செல்ல இருக்கிறார். இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். புத- ஆதித்ய யோகம் செயற்படும் இந்த நேரத்தில்

## எதிர்பாராத விதத்தில் நல்ல வாய்ப்புக்கள் இல்லம் தேடி வந்து உங்களை மகிழ்விக்கும்

புதிய பங்குதாரர்கள் வந்து இணைந்து தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரிவர். எதிர்பாராத விதத்தில் நல்ல வாய்ப்புக்கள் இல்லம் தேடிவரலாம். அனுசரித்துச் செல்வதன் மூலமும் அன்பு செலுத்திப் பழகுவதன் மூலமும் உற்றார், உறவினர்க்ள மனதில் இடம் பிடிக்க முடியும்.


மாதத் தொடக்கத்தில் செவ்வாய் உங்கள் இராசியைப் பார்ப்பதால்

வக்ர புதனின் சஞ்சாரம்!

புதன் உங்கள் இராசிக்கு 5,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியாகிறார். ஒக்டோபர் 25 ஆம் திகதி கன்னி இராசியில் வக்ரம் பெற்று சஞ்சரிக்கிறார். இந்த வக்ர இயக்கம் நன்மையை வழங்கும் என்று சொல்ல இயலாது. தீமையை வழங்கும் என்று சொல்லவும் முடியாது. அஷ்டமாதிபதி வக்ரம் பெறுவது நன்மைதான். என்றாலும், அரசியல்வாதிகளால் அனுகூலம் கிடைக்கும்.

குழந்தைகளின் கல்விநலன் கருதியும் கல்யாண வாய்ப்புக் கருதியும் எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இம்மாதம் சனிக்கிழமை தோறும் விநாயகர் வழிபாட்டை முறையாக மேற்கொள்ளுங்கள். வடக்குப் பார்த்த விநாயகரை வழிபட்டால் வளர்ச்சி கூடும்.

## சிவல்புரி சிங்காரம்



## மீனம்

**பூரட்டாதி 4 ஆம் பாதங்கள், உத்திரட்டாதி, ரேவதி**

**இனிமையான பேச்சால் அனைவரையும் கவர்ந்திழுக்கும் மீன இராசி நேயர்களே!**

**திடீர் தன வரவு திகைக்க வைக்கும்!**

ஐப்பசி மாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது மாதத் தொடக்க நாளில் உங்கள இராசியிலேயே சந்திரன் உலா வருகிறார். இராசிநாதன் குரு, சுக ஸ்தானத்தில் அமர்ந்து கொண்டு தொழில் ஸ்தானத்தைப் பார்க்கிறார். அஷ்டமத்துச் சனி கொஞ்சம் வலிமை இழந்து இருக்கும் நேரமிது. எனவே, விரயங்கள் குறையும். தெய்வீகச் சிந்தனை அதிகரிக்கும். குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்கும் யோகம் முதல் கொடிகட்டிப் பறக்கும் யோகம்வரை வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

கிரகங்கள் சாதகமான சூழ்நிலையில் சஞ்சரிக்கும் பொழுது எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். சாதகமற்ற நிலையில் சஞ்சரிக்கும் பொழுது எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதில் எண்ணற்ற தடைகள் ஏற்படும். அஷ்டமத்துச் சனியின் கெடுபிடியால் இதுவரை எவ்வளவோ முயற்சி செய்தும் பல காரியங்கள் தடையாக இருந்திருக்கலாம். அந்த நிலை மாறும். காரணம், 8 இல் அடி எடுத்து வைத்த சனி இப்பொழுது கொஞ்சம் வலிமை இழந்திருக்கின்றது.

12 க்கு அதிபதி வலிமை இழக்கும் பொழுது விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புக் கிட்டும். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். குழந்தைகளுக்குத் தேவையான ஆபரணங்கள் வாங்கும் அளவிற்கு வசதி பெருகும்.

என்ன இருந்தாலும் 2 இல் கேது, 8 இல் இராகு சஞ்சரிப்பதால் ஏற்ற இறக்கத்தின் பிடியில் சிக்கி இருக்கிறீர்கள். ஒருநாள் உற்சாகத்தோடு செயற்படுவீர்கள். அடுத்த நாள் உற்சாகமின்றி உட்கார்ந்திருப்பீர்கள். லாபமும் நஷ்டமும் மாறி, மாறி வரும். இந்த நேரத்தில் இராகு- கேதுக்களுக்கு முறையான பரிகாரமும் சர்ப்ப சாந்தியும் செய்தல் எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

அதுமட்டுமல்லாமல் சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயர் வழிபாடும் வியாழன் தோறும் குரு வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது. இடமாற்றம், வீடு மாற்றம், நாடு மாற்றம் போன்றவைகளை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஒருசிலருக்கு உருவாகும். சனி வலிமை இழந்து இருக்கும் இந்த நேரத்தில் வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ள முன்வருவீர்கள்.

வக்ர புதனின் சஞ்சாரம்!

ஒக்டோபர் 25 இல் கன்னி இராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். இதன் விளைவாக சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் அகலும். பொறாமைக்குணம் மிக்கவர் உங்களை விட்டு விலகுவர். விட்டுப்போன்ற ஒப்பந்தங்கள் மீண்டும் வந்த சேரும். வீடு வாங்க, விற்க எடுத்த முயற்சிகளில் வெற்றி கிட்டும்.

சுக்ரப்பெயர்சசியின் பலன்கள்!

ஒக்டோபர் 31 ஆம் திகதி தனுசு இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன்விளைவாக சகோதரர்கள் உங்களோடு இணைந்து செய்படும் வாய்ப்புக் கிட்டும். தாய் வழி ஆதரவு பெருகும். என்றைக்கோ வாங்கிய நிலம் இப்பொழுது விற்பனைக்கு வந்து நல்ல லாபத்தைக் காண்பீர்கள். பொதுவாகவே அஷ்டமாதிபதி 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கக் கூடாது. ஆனால், உங்கள் இராசியை பொறுத்தவரை 10 இல் சஞ்சரிக்கும் அஷ்டமாதிபதியை குரு பார்க்கிறார். எனவே, விபரீத ராஜ யோக அடிப்படையில் மிதமிஞ்சிய பொருளாதாரம் வந்து சேரப் போகிறது.

துலாம் இராசியில் புதனின் சஞ்சாரம்!

வக்ர நிவர்த்தியான புதன் மீண்டும் துலாம் இராசிக்குள் நவம்பர் 3 ஆம் திகதி வக்ர நிவர்த்தியாக சஞ்சரிக்கப் போகிறார். இது யோகம்தான். இதனால் புத- ஆதித்ய யோகம் உருவாகிறது. இதன்விளைவாக கல்வித்தடை அகலும். காரிய வெற்றியும் உருவாகும். செவ்வாய் பலம் கூடியிருக்கும் நேரமிது. அதன்பார்வை உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்திலும் 12 ஆம் இடத்திலும் பதிவாகிறது. தனாதிபதியின் பார்வை விரய ஸ்தானத்தில் பதிவதால் வாங்கல்- கொடுக்கல்கள் சிறப்பாக இருக்கும். தேங்கிய காரியங்கள் துரிதமாக நடைபெற தெட்சிணாமூர்த்தி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். இம்மாதம் ஆதியந்தபிரபு வழிபாடு ஆனந்தம் தரும்.

(முற்றும்)

## தாய்வழி ஆதரவு பெருகி சகோதரர்கள் உங்களோடு இணைந்து செயற்படுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி பெருநிலப்பரப்பின் இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த கோருகிறார்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி

(குருமன்காடு)

**வன்னிப் பகுதியில் பெருமளவிலான காட்டுமரங்கள், அதிகாரிகள் பாதுகாப்பு பிரிவினரின் துணையுடன் கடத்தப்படுவதாக வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது,

வன்னிப் பெருநிலப்பரப்பின் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள பெறுமதி வாய்ந்த பலவருடங்கள் பழமையான பாலை, முதிரை போன்ற காட்டு மரங்கள் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருகின்றன. அரசாங்க மற்றும் படைத்தரப்பின் செல்வாக்கினைப் பயன்படுத்தி குறிப்பிட்ட சில தனி நபர்கள் தொடர்ச்சியாக பெறுமதி வாய்ந்த இம் மரங்களை வெட்டி விற்பனை செய்து பெரும் இலாபம் ஈட்டுகின்றனர்.

இவ் வருமானத்தின் ஒரு பகுதியை தமக்கு உதவிய அரசாங்க மற்றும் படைத் தரப்பினருக்கும் வழங்கி வருகின்றனர்.

மேலும் படைஉயர் அதிகாரிகள்,அரசின் உயர் மட்டத்தில் உள்ளோரும் இத்தகைய பேரழிவு நடவடிக்கையை நேரடியாகவும் மறைமுகமாவும் தமது இலாப நோக்கிற்காக செய்து வருவதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை, மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் தமது வீட்டு நிர்மாணத்திற்காக வீட்டில் இருக்கின்ற சாதாரண வேப்ப மரங்களையே வெட்டுகின்றபோது அதனை தடுத்து, வெட்டிய மரங்களை பொலிசாரும் வன இலாகாவும் பறிமுதல் செய்கின்றனர். ஆனால் பெருந்தொகையாக அரியவகை மரங்கள் கடத்தப்படுகின்றபோது எந்தவொரு நடவடிக்கையும் உரிய அதிகாரிகளால் எடுக்கப்படவில்லை.

குடியேற்றம் என்ற பெயரில் எமதுநிலம் அபகரிக்கப்படுகின்ற போதும் பெருமளவிலான தேக்கம் காடுகளும், ஏனைய காடுகளும் அழிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பெரியளவில் வருமானத்தை நோக்காக கொண்டு காட்டு மரங்கள் அழிக்கப்படுவதனால், காட்டு வளங்கள் அழிவடைந்து வருவதுடன் சூழல் பாதிப்புக்களும் ஏற்பட்டு, இயற்கைச் சமநிலையும் குழப்பமடைந்து வருகின்றது. சுற்றுச் சூழல் மாசடையாமல் இயற்கையை பாதுகாப்பது என்ற சர்வதேச கோட்பாடுகளையும் மீறி வெறுமனே தமிழர் பிரதேசம் என்பதால் வகைதொகையின்றியும் கேட்பார் இல்லை என்ற போக்கிலும் இதனை அரசு அனுமதிப்பதை கண்டிப்பதோடு உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

அத்துடன், வவுனியா மாவட்டத்தில் 50 க்கு மேற்பட்ட கற்குவாரிகள் அரச செல்வாக்குடன் இயங்கிவருகின்றது.

இவற்றில் பெரும்பாலான பகுதிகளில் நிலமட்டத்தில் காணப்படுகின்ற கற்களை 5 தொடக்கம் 10 அடி ஆழம் வரை உடைத்து எடுத்து வருகின்றனர்.

இதனால் நிலத்தில் பாரிய குழிகள் ஏற்பட்டு நீர் தேங்கி சுகாதார கேடுகளும் ஏற்படுகின்றது.

மேலும், வவுனியாவின் பல பகுதிகளிலும் 20 அடி ஆழம் வரை கிரவல் அகழப்பட்டு வருகின்றது. இவ்வாறு சட்டதிட்டங்களையும் மீறி அனுமதிகளையும் பெறாமல் நிலம் அகழப்படுவதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தாமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, பாலை, முதிரை மரங்களை கொள்ளையிடுதல், தேக்கம் காடுகளை அழித்தல், சட்டத்திற்கு முரணான வகையில் சூழல் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய வகையில் கற்குவாரிகள் இயங்குதல், கிரவல் அகழ்தல் என்பன தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம செலுத்தி எமது வளங்களைப் பாதுகாக்க முன்வரவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

(ம-250)

## 60 ஆயிரம் ரூபா தண்டம்



(முல்லைத்தீவு)

மது போதையில் வாகனத்தை செலுத்திய 6 பேருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மதுபோதையில் வாகனத்தை செலுத்திய 6 நபர்கள் முல்லை மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா 6 பேருக்கும் 60 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் சாரதி அனுமதிப்பத்திரத்தை 2 மாத காலத்திற்கு இடை நிறுத்தி வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிள் மற்றும் ஆட்டோ வாகனங்களை மதுபோதையில் செலுத்தியவர்களுக்கே மேற்படி தண்டனை வழங்கப் பட்டுள்ளது. (ம)

## பாரதி சிறுவர் இல்லத்தில் சிறுமியை ஒப்படைக்குக

### நீதிபதி கணேசராஜா உத்தரவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கள்ளப்பாட்டு பகுதியில் தாயினால் கடுமையாக துன்புறுத்தப்பட்ட 16 வயது சிறுமி ஒருவர் பிற்பகல் ஆறுமணியளவில் வீட்டை விட்டு வெளியேறி முல்லைத் தீவு கள்ளப்பாட்டில் உள்ள பாடசாலை கட்டடத்திற்கு வெளியே விடியும் வரை தங்கியுள்ளார். இச்சிறுமியை முல்லைத்தீவு பொலிசார் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

மேற்படி சிறுமியை பாரதி சிறுவர் இல்லத்தில் சேர்க்குமாறும் சிறுவர் நன்னடத்தை அதிகாரியின் அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். (ம)








வவுனியா சுகாதார திணைக்களத்தினால் வடமாகாண சுகாதார அமைச்சருக்கு நடத்தப்பட்ட வரவேற்பு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்ற போது... (படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)

# வளப்பற்றாக்குறைகளுடன் அன்னை பூபதி முன்பள்ளி

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சுதந்திரபுரம் அன்னை பூபதி முன்பள்ளி அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி இயங்கி வருவதாக மாணவர்களது பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 1996 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இம் முன்பள்ளி 2011 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்துடன் இயங்கி வருகின்றது.

நிரந்தரகட்டடத்தில் இயங்கி வருகின்ற இம் முன்பள்ளியில் பலவளப்பற்றாக்குறைகள் காணப்படுகின்றது. இங்கு குடிநீர் வசதி இன்மையால் மாணவர்கள் குடிநீர் இன்றி அல்லலுறுகின்றனர்.

சிறுவர் விளையாட்டு முற்றம், மின்சார வசதி, கற்றல் உபகரணங்கள், விளையாட்டு பொருட்கள் என்பனவும் இங்கு இல்லை. மாணவர்களுக்குரிய தளபாடவசதியும் இங்கில்லை. சுற்று வேலி அமைக்கப்படாமையால் கால்நடைகள் முன்பள்ளியை அசுத்தம் செய்கின்றன.

எனவே துறை சார்ந்த அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு வளப்பற்றாக் குறைகளை நிவர்த்தி செய்து மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு உதவ வேண்டுமென மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

# சந்தையின் புதிய கடை தொகுதியில் வியாபாரத்தை மேற்கொள்ளுங்கள்

(கண்டாவளை)

கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட தர்மபுரம் பொதுச் சந்தையில் புதிதாக வழங்கப்பட்ட நிலங்களில் பலர் இன்னமும் கடைகள் அமைத்து வியாபாரம் மேற்கொள்ளாமையால் ஏனைய வியாபாரிகள் பெரும் நெருக்கடியை எதிர் நோக்குகின்றனர்.

குறிப்பாக புதிதாக கடை நிலம் பெற்றவர்கள் கடைகளை அமைத்து வியாபாரம் மேற்கொண்டு வருகின்ற போதிலும் தற்காலிக கொட்டகைகளை அமைத்து ஆரம்ப காலத்தில் இருந்து வியாபாரம் மேற்கொள்ளும் வியாபாரிகள் புதிய நிரந்தர கட்டடத் தில் வியாபாரம் மேற்கொள்ளாமையால் அவர்களது வியாபார நிலையங்கள் முற்றாக மறைந்து காணப்படுகின்றமையால் வியாபாரம் மந்தகதியில் இடம் பெறுகிறது.




எனவே உரிய அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு நாளாந்த விற்பனை மூலம் தமது வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் வர்த்தகர்களுக்கு சிறந்த தீர்வை பெற்றுத் தர வேண்டுமென பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்துக் கல்லூரி - சாரணிய இயக்கம்
# 7 ஆவது யாழ்ப்பாண சாரணர் துருப்பு
# 70 ஆவது ஆண்டு நிறைவு விழா

## அருளாசிச்செய்தி



அன்புசார் பெருந்தகையீர்!


கொக்குவில் இந்துக் கல்லூரியில் சாரணர் இயக்கம் தனது 70 ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்திருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. பாடசாலை வாழ்க்கை மனித குலத்தில் மிக இனிமையானதும் பல மகிழ்ச்சிகளைக் கொண்டதுமாகும். பல்துறை சார்ந்த கல்வியைக் கற்பதே கல்வியினுடைய அடையாளம். இவ்வரிசையில் மனிதநேயப் பண்புகளைத் தன்னோடு அணைத்துக்கொள்வது சாரணர் அமைப்பினுடைய தொழிற்பாடு. தன் கடன் அடியேனையும் தாங்குதல் எம் கடன் பணி செய்து கிடப்பதே என்னும் சமய வாக்கிற்கமைய நற்பழக்கங்களாக மற்றவருடைய வாழ்க்கையில் செய்யவேண்டிய உதவிகளைக் காலத்தின் தேவையறிந்து செயற்படுவது போன்ற செயற்பாடுகளைச் செயற்படுத்துவதே சாரணர் இயக்கமாகும்.

பாடசாலைகள் அனைத்திலும் செயல்வடிவம் பெற்றிருப்பது சாரணர் இயக்கம். சீரான உடை அனைத்திலும் சிந்தித்து செயற்படும் மனநிலை குருளைச் சாரணர், சாரணர், சிரேஷ்ட சாரணர், திரி சாரணர் நான்கு வகைப் பதவிகளை வழங்கி சாரணர் அமைப்பினை 70 ஆண்டுகள் செயற்படுத்திய கொக்குவில் இந்துக் கல்லூரி சாரணர் அமைப்பை இன்னும் பல்லாண்டு காலம் தொடர்ந்து நடத்த இறையருளை சிந்திப்போம். இப்பணியில் அர்ப்பணித்து சேவையாற்றும் அனைத்து அன்புள்ளங்களை வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்.**

## வாழ்த்துச் செய்தி



கொக்குவில் இந்துக்கல்லூரியில் சாரணியம் ஆரம்பிக்கப்பட்டு எழுபது ஆண்டுகள் நிறைவாயிருக்கும் இவ்வாண்டினைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் கல்லூரி சாரணியர் அமைப்பினால் வெளியிடப்படும் சாரணியன் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

70 ஆவது ஆண்டு நிறைவுக்கான ஞாபகர்ர்த்தமாக சாரண மாணவர்களினால் பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியத்தின் காணியில் மாடிக்கட்டடம் ஒன்று அமைக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கதொன்றாகும். இப்பணி சிறப்பாக நிறைவு பெறுவதற்கும் இவ்வாண்டில் நடைபெறவிருக்கும் சாரணர் நிகழ்வுகளும் இம்மலர் வெளியீடும் சிறப்புறுவதற்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பொ.கமலநாதன், இளைப்பாறிய அதிபர்,**
**கொக்குவில் இந்துக் கல்லூரி**

## அன்னையின் புகழ் பட்டொளியாப் பறக்கட்டும்



கொக்குவில் இந்து அன்னையின் நிழலில் தவழ்ந்து பின்னர் உலக அரங்கிலே எமது அன்னையினைத் தடம்பதித்தவர்களை நேரிய சிந்தனை ஓட்டத்தின்பால் இணைந்து கொக்குவில் இந்து அன்னையின் சாரணியத்துக்கு உயிர்ப்பும் அர்த்தமும் கொடுக்கப்படுகிறது. அந்த வகையில் ஓர் சுகோன்னத நிகழ்வே இந்து சாரணியத்தின் 70 ஆவது ஆண்டு நிகழ்வு தடம் பதித் துள்ளது.

அந்தவகையில் சார்ணர்களால் சூட்டப்படுகின்ற சாரணிய நிறைவு விழா கட்டமானது இலங்கையில் இரண்டாவதாகவும் வடக்கு மாகாணத்தில் முதலாவதாகவும் அமைக்கப்பட்டு எடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

எமது அன்னையின் புதல்வர்களால் எடுக்கப்படும் விழா சிறக்கவும் சாரணியன் இதழின் கருத்துக்களால் மாணவர்களின் அறிவியல் ரீதியாக வளப்படுத்தவும் சாரணிய சிந்தனைகள் மேலோங்கும் என்பதில் எதுவித ஐய முமில்லை.

**த.பகீரதராஜ்.**
**திட்டமிடல் அதிகாரி,**
**World Vision Lanka, முல்லைத்தீவு**

## Chief Commissioner's Message



I have great pleasure in sending this congratulatory message on the 70th Anniversary celebrations of Scouting in Kokuvil Hindu college.

We must be thankful to all the previous and present scout masters, Akelas and the College principals who Dedicated their time.

I wish you all the best for your endeavours in Scout service

***Prof. Nimal De Silva,***
***Chief Commissioner***

## அரச அதிபரின் வாழ்த்து




யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியில் 1943 இல் தோற்றம் பெற்ற சாரணிய இயக்கத்தின் 70ஆவது ஆண்டு நிறைவு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சாரணியம் கற்றுத் தந்த செவ்விய பண்புகளைக் கொண்ட சேவைகளைத் தொடர்ந்தும் எமது சமூகத்திற்குச் சேவையாய் வழங்கிடவும் இக்குழுவினரின் செயற்பாடுகளை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் வெளியிடப்படவுள்ள இம்மலர் ஏனையோருக்கு எடுத்துக்காட்டாய் அமையவும் எனது மனமுவந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. சுந்தரம் அருமைநாயகம்**
**அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர்,**
**யாழ்.மாவட்டம்.**

## பெருவிருட்சமாக உயரட்டும்



கல்லூரியுடன் இணைந்ததாக கோவிலும் அதன் சூழலும் அமைந்து இந்துக் கல்லூரி என்ற பெருமையுடன் கொக்குவில் விளங்கும் சிறப்பு அளப்பரியது.

சமூகநல மாற்றத்திற்கு வித்திடும் சாரணியத்தின் முயற்சி யைப் பாராட்டுவ தோடு சாரணியத்தில் இணைத்துக் கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து இளம் சமூகத் திடையே நல்மனப்பாங்கை உருவாக்கி பெருவிருட்சமாக வளர் எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செ.உதயகுமார்,**
**வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.**

## ஆசிச்செய்தி



தன்னலமற்ற மனிதநேயப் பணியினை தனது இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட சாரணிய இயக்கம் எமது கல்லூரியில் 70 ஆவது அகவையில் காலடி எடுத்து வைப்பதில் பேருவகை அடை கின்றோம்.

சாரணர் இயக்கம் கல்லூரிச் சமூகத்திற்கு மட்டுமல்லாது எதிர்கால சமுதாயத்திற்கு முன்னோடியாகவும் வழிகாட்டியா கவும் தொடர்ந்து இயங்கவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

**வி.ஞானகாந்தன், அதிபர்,**
**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**

## வாழ்த்துச் செய்தி



யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் சாரணர் இயக்கத்தினால் வெளியிடப்படுகின்ற கொக்குவில் இந்து சாரணியர் எனும் 70 ஆவது நிறைவுவிழா மலருக்கு ஆசியுரைவழங்குவதில்மகிழ்வடைகின்றேன்.

கொக்குவில் இந்து சாரணிய இயக்கம் எதிர்வரும் காலங் களில் மேலும் சிறப்புற செயற்பட்டு, சமுதாய வளர்ச்சிக்குப் பெரும் பங்குவகிக்கவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் இந்நூலினை உருவாக்க தமது பங்களிப்பை வழங்கிய அனைவருக்கும் எமது பாராட்டுக்களும் ஆசிகளும் உரித்தாகுக. இந்நூல் தொடர்ந்து வெளிவர வாழ்த்து கின்றேன்.

**திருமதி என். குணபாலசிங்கம்**
**தலைவர், பழைய மாணவர் சங்கம்.**

## Message from special scout Commissioner for North & East



I am very happy to be associated with the 70 th Anniversary activities of the Kokuvil Hindu College in Jaffna as the Commissioner in Charge of North and East. The School has a proud history of 103 year and 70 years of scouting history. All credit should go to those scout leaders and the Principals of the School for keeping the Scout group active right throughtout, under the guidance of the district Commissioner 70 years for a voluntary movement is a great thing. it is dedication of those involed that has brouht this success story.

I wish the Kokuvil Hindu College many more years of scouting.

Writh best wishes

*M.F.S.Muheed*
*(Former Asst. Chief Commissioner)*

## ஆசியுரை



மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியை வளர்ப்பதற்கு பாடசாலைகளில் பல செயற்பாடுகள் அறிமுகப்படுத்தப் படுகின்றன. அவற்றுள் ஒன்றுதான் சாரணியம்.

எமது கல்லூரியில் சாரணியம் 1943 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இன்று 70 வருடங்களை பூர்த்தி செய்து அவ்விழாவை கொண்டாடும் சாரணியத்திற்கு எனது மனமார்ந்த ஆசிகள் உரித்தாகுக.

**அ.பஞ்சலிங்கம்,**
**இளைப்பாறிய முன்னாள் அதிபர்**


## வாழ்த்துச் செய்தி



சாரணியத்தால் கால் பதித்து 70 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி சாரணியக் குழாமிற்கு எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு இவர்களால் வெளியிடப்படவிருக்கும் மலருக்கும் இறையருள் வேண்டி நிற்பதோடு மென்மேலும் இக்கல்லூரியின் சாரணியம் வளர என் இனிய வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செ.தேவறஞ்சன், மாவட்ட ஆணையாளர்,**
**யாழ். சாரண மாவட்டம்.**

## தலைவரின் உள்ளத்திலிருந்து



ஒரு தேசத்தின் வெற்றியா னது அங்குள்ள மனித வளத்தினை வினைத்திறன் மிக்கதாகவும் விளைதிறன் மிக்கதாகவும் ஒழுங்கு படுத்துவதிலேதான் தங்கியுள்ளது. மனித வள விருத்தியில் பாடசாலை கள் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஒழுங்கமைப்பாகும். அந்த வகையில் எமது கல்லூரியின் சார ணிய இய்க்கம் 70ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றது. இதன் வெளிப்பாடாக நாம் இந்நூலை ஒரு நினைவுப் பொக்கிசமாக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். அதுமட்டு மல்லாமல் எமது சாரணியத்திற்கு வித்திட்டவர்களில் தொடங்கி எமது இயக்கத் திற்குப் பெருமை சேர்த்த சாதன சாரணியர்களையும் அவர்களுக்கு ஊக்கமளித்த சாரணிய ஆசிரியர்களை யும் நாம் இந்த நூல் வெளியீட்டு விழாவூடாக நினைவுகூருவதில் பெருமை அடைகின்றோம். இதேபோல் இன்றைய காலத்தில் உள்ள கொக்குவில் இந்து சாரணிய மைந்தர்களும் சாதனை களைப் புரியவேண்டும். எமது சாரணியத்தை மீண்டும் தலை நிமிர்த்த உதவ வேண்டும் என்று இத்தருணத்தில் கேட்டுக் கொள்கின் றேன்.

**ச.அமலராஜ், ஜனாதிபதி விருதுச் சாரணர்,**
**தலைவர், சாரணர் சங்கம்,**
**கொக்குவில் இந்துக் கல்லூரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# லீஷ்மனியாசிஸ்: ஒரு கண்ணோட்டம்

அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது அதனிலும் அரிது வியாதி இல்லாதிருத்தல். இன்றைய உலகத்தில் வியாதி இல்லாது இருத்தல் என்பது ஒரு கடினமான விடயம் என்பது என் கருத்து. நாளொரு புது வியதொயும் பொழுதொரு வைரஸாக வலம் வரும் காலமிது. பொதுவாக வளரும் அல்லது வளராத நாடுகளையே புது புது வியாதிகள் அதிகமாக தாக்குவது விதியா அல்லது சதியா என்பது ஆராய்ச்சிக்குரிய விடயம். இந்த வகையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பத்திரிகைகளில் வெளிவந்த ஒரு செய்தி தான் புது வகையான ஆட் கொல்லி வியாதியான (வந்த செய்தியின்படி) லீஷ்மனியாசிஸ்.

இந்த கட்டுரைக்குள் செல்வதற்கு முன்னர் இந்த வியாதிக்கும் எனக்குமான அல்லது எங்களுக்குமான (எங்களுக்கு என்பது இந்த ஆய்வில் ஈடுபடும் யாழ் பல்கலைகழக விலங்கியல் துறை சார்ந்தவர்களை குறிக்கும்) தொடர்பு பற்றி சொல்கிறேன். இந்த ஆய்வு நேரடியாக லீஷ்மனியாசிஸ் வியாதியுடன் தொடர்பு படாவிட்டாலும் இவ்வியாதியை காவும் பூச்சி சம்பந்தமானது. இந்த ஆய்வில் நான் 3 வருடங்களுக்கு மேலாக ஈடுபட்டிருக்கிறேன்.

லீஷ்மானியாசிஸ் என்பது ஒன்றும் புது வியாதியல்ல. இலங்கையில் இதன் இருப்பு நூற்றாண்டுகளை கடந்தது. மத்திய கிழக்கு நாடுகளில் வேலை செய்து நாடு திரும்பும் பலரிடமும் இந்த நோய் அறியப்பட்டிருக்கிறது. தவிர 18 ஆம் மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கைக்கு வந்து போன வெளி நாட்டவர்களிடமும் அறியப்பட்டுள்ளது.

ஆயினும் இந்த வியாதியஸ்தர்கள் அநேகமாக வெளி நாடுகளில் இருந்தே இங்கு வருவதாகவே பொதுவாக கருதப்பட்டது. 1989 ஆம் ஆண்டில் உள்நாட்டில் தொற்றுதலுக்கு உள்ளான முதலாவது லீஷ்மனியாசிஸ் நோயாளி கண்டறியப்பட்டார்.

ஆயினும் இதற்கு முன்னதாகவே இந்நோய் இங்கு இருந்திருக்க கூடும் என்பது பலரது வாதம். ஏனெனில் 1990 களிலேயே ஒரு முறையான தோல் வைத்தியரது சேவை இங்கு கிடைத்திருகிறது என்பது ஒரு பொதுவான கருத்து. அதற்கு முன்னதாகவே இவ்வியாதி பலராலும் புறக்கணிக்கப்பட்டதாக இருக்கலாம். ஏனென்றால் லீஷ்மனியாசிஸில் ஒரு வகையான cutaenous லீஷ்மனியாசிஸ் (தோல் சார்ந்தது) ஒரு கட்டி ஆகவே காணப்படும். நாளடைவில் இது மறைந்தும் போய் விடும்.

இலங்கையில் ஆரம்ப காலங்களில் இந்த நோய் காடு சார்ந்த தொழில் செய்பவர்களிடமே (படையினர், சேனை பயிர்செய்கை செய்பவர்கள்..) அதிகமாக காணப்பட்டது. ஆயினும் தற்போது சிறுவர்களிடம் கூட இந்நோய் காணப்படுகிறது.

இந்த நோய் பல வகைப்படும். பொதுவான வகைகளாக cutaneous (தோல் ) வகை, visceral / kala azar (உள்ளுறுப்புகள்) வகை, muco cutaneous (மூக்கு வாய்) வகை, PKDL (kala azar க்கு பிந்திய தோல் சார்ந்தது ), infantile (குழந்தைகளுக்கான) வகைகளை கூறலாம் .

### Cutaneous (தோல் ) வகை (CL)

பொதுவாக இது வெளிப்புறங்களில் ஒரு கட்டி போல காணப்படும். இந்த கட்டி பின்னர் காயமாக மாறும். இந்த வகை அதிகமாக மத்திய கிழக்கு நாடுகளிலேயே பரவலாக காணப்பட்டாலும் இந்தியாவிலும் இலங்கையிலும் மற்றும் ஏனைய ஆசிய நாடுகளிலும் காணப்படுகிறது.



CL ஐ பொறுத்த வரை இது ஒரு ஆட்கொல்லி நோய் அல்ல. ஆனாலும் இந்த கட்டியால் ஏற்படும் காய வடு (scar) ஒரு பிரச்சினை ஆகும். மேலும் இந்நோய் தானாகவே குணமாகி விடும் . ஆனாலும் தகுந்த சிகிச்சை எடுக்காதவிடத்து நோயாளி நோய் கிருமிகளை காவுபவராகவும் அடுத்த ஆளிற்கு நோயை பரப்புவபராகவும் இருக்கிறார். இலங்கையை பொறுத்த வரை இந்த வகை நோயே அதிகம் காணப்படுகிறது. இந்த நோய் பற்றிய போதிய அறிவு இன்மையால் பரவல் மேலும் தீவிரமாகிறது.

இலங்கையில் கடந்த பத்து ஆண்டுகளில் 2000 க்கும் மேற்பட்ட CL நோயாளிகள் அறியப்பட்டுள்ளார்கள். இவ்வெண்ணிக்கை உண்மையில் யதார்த்த நிலையை தெரிவிப்பது இல்லை. ஏனெனில் போதிய விளக்கம் இன்மையால் அநேக நோயாளர் வைத்திய சாலையை சிகிச்சைக்காக நாடுவது இல்லை. ஆகவே உண்மையான எண்ணிக்கை இதனிலும் சிலபல மடங்குகளாக இருக்கலாம்.

### Muco cutaneous (மூக்கு வாய்) வகை

இது பொதுவாக மூக்கு வாய் போன்ற மெல்லிய தோல் உடைய பகுதிகளை தாக்



கும். இலங்கையில் இதன் தாக்கம் குறைவு என்றாலும் சில நோயாளிகள் அறியப்பட்டு உள்ளார்கள். இதுவும் ஆள் கொல்லி வகை அல்ல.

### Visceral / kala azar (உள்ளுறுப்புகள்) வகை (VL)

பொதுவாக இந்நோய் உள்ளுறுப்புகளான ஈரல், மண்ணீரல் என்பவற்றை பாதிக்கும். தகுந்த சிகிச்சை அளிக்காது விடின் இது ஒரு உயிர் கொல்லி நோய் ஆகும். இலங்கையில் இதன் தாக்கம் சமீபத்தில் கண்டறியப்பட்டுள்ளது.

பொதுவாக இந்நோயின் அறிகுறிகளாக பின்வருவன அமையும்

காய்ச்சல்

நிறை குறைதல்

வயிற்றில் நோ்வு மற்றும் வீக்கம்

சோர்வு

வயிற்று சீத மென்சவ்வு புண்

ஆயினும் மேற்கூறிய குணங்குறிகள் வேறு பல உணவுக்கால்வாயுடன் சம்பந்தப்பட்ட நோய்களுக்கும் பொதுவானது என்பதால் ஆய்வுகூட பரிசோதனை மூலம் நோய்க்குரிய காரணியை அறிதல் வேண்டும்.

### PKDL (kala azar க்கு பிந்திய தோல் சார்ந்தது )


இது visecral நோய்க்கு உள்ளானவர்களை பின்னர் நோய்க்கிருமிகள் தோலில் தாக்குவதன் மூலம் கட்டிகளை ஏற்படுத்துகிறது. முறையான, முழுமையான சிகிச்சை இன்மையால் இந்நோய் ஏற்படுகிறது. பொதுவாக இந்த வகை நோயினால் ஏற்படும் கட்டிகள் காயமாக மாறுவதில்லை.

### நோய்க்காரணி

லீஷ்மனியா (Leishmania - Protozoa: Kinetoplastida) வகையை சேர்ந்த தனிக்கல அங்கிகளாலேயே (protozoans ) இந்த நோய் ஏற்படுகிறது. இவை சவுக்கு முளை கொண்ட தனிக்கல அங்கிகள் (mastigotes) .



வாழ்க்கை வட்டம்




✷ காவி (மணல் ஈ) குருதி குடிக்கும் போது promastigote நிலை கிருமிகளை உடலி னுள் செலுத்தும்

✷ இக்கிருமிகள் வெண்குருதி கலங்களினால் உள்ளெடுக்கப்படும்

✷ promastigote நிலையிலிருந்து amastigote (சவுக்கு முளை அற்ற) நிலைக்குமாறும்

✷ கிருமிகள் பெருகும்

✷ மணல் ஈ குருதி குடிக்கும் போது கிருமி களை amastigote நிலையில் உள்ளெடுக் கும்

✷ கிருமிகள் கலங்களில் இருந்து வெளியேறும்

✷ சவுக்கு முளை கொண்ட பருவம் ஈயின் உணவு கால்வாயில் உருவாகும்

✷ பெருக்கமடையும் கிருமிகள் ஈயின் வாய் பகுதியை அடையும்

இந்த வட்டத்தில் மனிதன் மற்றும் காவி (மணல் ஈ) சம்பந்தப்படுகிறது. ஆயினும் இது ஒரு மாதிரி மட்டுமே. இயற்கையில் இந்த வட்டம் வேறு சில இடை நிலை விருந்து வழங்கிகளையும் (intermediate host) மற்றும் கிருமிகளை சேமிக்கும் (reserviour ) அங்கிகளையும் கொண்டது. ஆடு, மாடு, ஊர்வன, நாய், பூனை, மற்றும் சில காட்டு விலங்குகள் இவ்வாறான அங்கிகளாக காணப்படுகின்றன.

ஆயினும் இம்முறை தவிர்த்து தாயிலிருந்து சேயிற்கு மற்றும் குருதி மூலம் போன்ற முறைகளிலும் தோற்றால் அறியப்பட்டுள்ளது. (தொடரும்)

**திரு.கே.கஜபதி**
இணைக்கப்பட்ட
விலங்கியல்துறை
விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 95

எத்தனை வயதுக்குட்பட்ட ஒவ்வொருவரும் சிறுவர், சிறுமியர் ஆகக் கணிக்கப்படுவர்?

**புதிர் 95 இற்கான விடைகளை 04.11.2013 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

**திரு.அ.குகன்**
ஆசிரியர் பிரிவுA
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
ஆசிரிய கல்வியியலாளர்,
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.ஈஸ்வரமோகனிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி
யாழ். பல்கலைக்கழகம்.

**புதிர் 94 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

வெல்லப்படவில்லை

**புதிர் 94 க்கான கேள்வியும் விடையும்:**

**எந்த ஆண்டு முதன்முதலாகக் கட்டப்பட்ட அணு உலை இயக்கப்பட்டது?**

1942ஆம் ஆண்டு டிசம்பர் 2ஆம் திகதி

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 95

சரியான விடை:-..............................
முழுப்பெயர்:-..............................
முகவரி:-..............................
தொ.பே. இல:..............................
கையொப்பம்:..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாகத் திட்டமிட்டால் முதல் முயற்சியிலேயே பாதித் தூரத்தை நிச்சயம் அடைந்து விடலாம்.

*- என்.ஹில்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சந்தனமரத்தைத் தேடிச் சென்ற நாம் மஞ்சவண்ணாவைப் பிடித்து எழுவோம்

வடக்கு மாகாண அரசின் முதலாவது கன்னி அமர்வு இன்று கைதடியில் உள்ள வடக்கு மாகாண சபை மண்டபத்தில் நடைபெறுகின்றது.

வடக்கு மாகாண சபையின் முதலாவது அமர்வு என்பதால் அங்கு ஆற்றப்படும் உரைகள் தொடர்பில் பலரும் கவனம் செலுத்துவர்.

அதேநேரம் வடக்கு மாகாண சபையின் ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியும் இந்த அமர்வில் கலந்து கொள்வார் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

ஆக; வடக்கின் முதலமைச்சர், ஆளுநர், மாகாண அமைச்சர்கள், மாகாண சபையின் ஆளுந்தரப்பு உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்ற வடக்கு மாகாணத்தின் அரச அமைப்பு தனது முதலாவது அமர்வை கூட்டும் போது ஆற்றப்படும் உரை உணர்வுபூர்வமானதாக, தமிழ் மக்களின் விடிவிற்காக தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த அத்தனை தமிழ்ப் பேசும் உறவுகளின் நினைவுகளை மனங்களில் சுமந்த பாரத்தோடு கலந்து கொள்வதாக இருக்கும்.

கூடவே தமிழீழம் என்ற தனிநாட்டுக் கோரிக்கைக்காக, இழந்தவையும் அதற்காக தமிழ் மக்கள் பட்டலைந்த வாழ்க்கைப் பதிவுகளும் எங்களுக்குக் கிடைத்தது இதுதானா? என்ற மனக்குறையும் வடக்கு மாகாண அரசின் இன்றைய கன்னி அமர்வில் எழவே செய்யும்.

என்ன செய்வது! காலம் என்பது இறைவனால் மீட்கப்படும் ராகம் என்றார் கவியரசு கண்ணதாசன்.

இறைவனால் மீட்கப்பட்ட காலம் என்னும் இனிய ராகத்தை நுகர்ந்து கொள்வதில் தமிழர்களாகிய நாங்கள் தவறு இழைத்து விட்டோம். அந்தத் தவறுகளின் அனுபவிப்புகளை வேதனையாகச் சுமக்க முடியுமேயன்றி, தவறுகளுக்காக மீளவும் ஒரு தவறைச் செய்ய முடியாது என்ற ஆழமான அனுபவப் பகிர்வின் தீர்மானமே வடக்கு மாகாண அரசும் அதன் அமர்வும்.

அடர்ந்த காட்டுக்குள் சுகந்தமளிக்கும் சந்தன மரத்தைத் தேடிச் சென்றபோதிலும் சந்தன மரத்தை தொட்டு விடுவதற்கு கருநாகங்களும் காட்டின் கொடிய விலங்குகளும் குறுக்கீடு செய்தன. அதனால் சந்தன மரத்தை அடைய முடியவில்லை. ஆனாலும் சந்தன மரம் எங்கள் கைகளுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு, அந்த அடர்ந்த காட்டிடையே இருக்கக் கூடிய கொடிய விலங்குகளுடன் போரிட்டு சந்தன மரத்திற்காக அந்த நிலத்திற்கு உரமாகிப் போனவர்களின் தியாகத்தை–நம்பிக்கையை–அர்ப்பணிப்பை ஒருகணம் சிந்தித்தால் வடக்கு மாகாண சபை என்பது ஒரு மஞ்சவண்ணா மரம் என்றே சொல்லலாம்.

சந்தன மரத்தை மஞ்சவண்ணா கிட்டவும் நெருங்காது என்பது தெரிந்ததே.

ஆனாலும், ஆறுதலுக்கும் தேறுதலுக்கும் சந்தன மரத்தை எடுத்து வரச் சென்று சந்தனப் பேழையில் மீளாத்துயில் கொண்ட எங்கள் பிள்ளைகளின் நினைவால் ஏற்படும் தள்ளாட்டத்திலும் நாங்கள் பிடித்து எழுவதற்கு மஞ்சவண்ணாவும் உதவும்.

எமதருமை வடக்கு மாகாண ஆட்சியாளர்களே! இதை மறந்து விடாதீர்கள். மஞ்சவண்ணா தான் சந்தன மரம் என்றும் எண்ணி விடாதீர்கள்.

# 15 வயதுக்கு மேற்பட்டோருக்கு தேசிய அடையாள அட்டை

நாட்டிலுள்ள 15 வயதுக்கு மேற்பட்ட அனைத்து பிரஜைகளுக்கும் தேசிய அடையாள அட்டையை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் ஆர்.எம்.எஸ். சரத்குமார் தெரிவித்தார்.

இதற்காக புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய இலத்திரனியல் அடையாள அட்டைகளின் அறிமுகத்தோடு புதிய நடைமுறையும் அமுலுக்கு வரவுள்ளது.

தற்போது இலங்கையில் 16 வயது நிரம்பியவர்களுக்கே தேசிய அடையாள அட்டை விநியோகிக்கப்படுகின்றது.

இதற்கமைய 15 வயது நிரம்பிய அனைத்து பிரஜைகளுக்கும் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான சட்டங்களை வகுத்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# கொள்ளையடித்த நபர் இனங்காணப்பட்டார்

(கரணவாய்)

துன்னாலை கிழக்குப் பிரதேசத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கூரிய ஆயுதங்களைக் காட்டி கொள்ளையடித்த நபரை வீட்டு உரிமையாளர் இனங்காட்டியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, மேற்படி பிரதேசத்திலுள்ள வீடொன்றில் புகுந்த திருடர்கள் கோடரியைக் காட்டி பணம், நகைகள் என்பவற்றைச் சூறையாடிச் சென்றனர்.

இக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், கடந்த 21 ஆம் திகதி திங்கட்கிழமை குறித்த சந்தேக நபர் அடையாளப்படுத்தப்பட்டபோது, வீட்டு உரிமையாளர் சந்தேக நபரை இனங்காட்டி உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன் பின்னர், குறித்த நபர் யாழ். சிறைச்சாலையில் தடுப்பு காவலில் வைத்து மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (அ-9-60)

# ஸ்கந்தாவில் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஒரேற்றர் சுப்பிரமணியம் அரங்கில் நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் இ.ஈஸ்வரதாசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்கந்தவரோதயன் வைத்தியகலாநிதி க.சிவகுமார், சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கியின் யாழ்.மாவட்டத்திற்கான சிரேஷ்ட முகாமையாளர், ஸ்கந்தவரோதயன் தி.குமார் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிறுவுநர் நினைவுப்பேருரையை ஸ்கந்தவரோதயனும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபருமான எஸ். சிவனேஸ்வரன் ஆற்ற, ஆசியுரையை மருதடி விநாயகர் ஆலயக்குருக்கள் பிரம்மஸ்ரீ பி.ஜெயக்குமாரக் குருக்கள் நிகழ்த்துவார். திருமதி ஜெயபவானி சிவகுமார் பரிசில்களை வழங்கி கௌரவிப்பார். (அ)

## தேர்முட்டியில் பெண்ணின் சடலம்; நீதி கோரி நேற்று ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

கொலை செய்யப்பட்ட நிலையில் நாச்சிமார்கோவில் தேர் முட்டிப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்ட பெண்ணிற்கு நீதிவழங்கவேண்டும்எனவும்பெண்ணை படுகொலை செய்த குற்றவாளிகள் விரைவில் கைது செய்யப்படல் வேண்டும் எனக் கோரி பொது அமைப்புக்களினால் மீண்டுமொரு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இவ் ஆர்ப்பாட்டம் படுகொலை செய்யப்பட்ட பெண் அடக்கம் செய்யப்பட்ட இடமான செம்மணி மயானத்திற்கு முன்பு நேற்று நடத்தப்பட்டுள்ளது.

இதில் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் பெண் உரிமை மீறலுக்கு எதிரான வாசகங்களினையும் பதாகைகளினையும் படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் புகைப்படங்களையும் ஏந்தியிருந்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் பாதிரியார்கள், பொது அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை குறித்த பெண் படுகொலை செய்யப்பட்டு ஒரு வாரம் கடந்துள்ள நிலையில் கொலை தொடர்பான விசாரணையில் குற்றவாளிகள் எவரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)




**சிந்தித்து படிப்பினை பெறுவீர்**

**இறைவன் கூறுகின்றான்:**

ஒட்டகங்களைப் பார்க்கவில்லையா? அவை எவ்வாறு படைக்கப்பட்டுள்ளன என்று! மேலும் வானத்தைப் பார்க்கவில்லையா, அது எவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளது என்று! மேலும் மலைகளைப் பார்க்கவில்லையா, அவை எவ்வாறு ஊன்றப்பட்டுள்ளது என்று! மேலும் பூமியைப் பார்க்கவில்லையா, எது எவ்வாறு விரிக்கப்பட்டுள்ளது என்று!

(திருக்குர் ஆன் 88:18-20)




வாழ்க்கை என்பது துன்பம் நிறைந்தது. அதனால் வாழ்வாவது மாயம். அது மண்ணாவது திண்ணம் .எனப் பிதற்றுவோரும் இவ்வுலகிலே பலர் உளர். இன்றைய இளந்தலைமுறையினருக்கு இக்கூற்றுகள் வெறுப்பையே ஊட்டும். வாழ்க்கையை ஒரு சவாலாகக் கொள்வாரும் உளர். அவர்கள் வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கோட்பாட்டைக் கொண்டவர்கள். எனினும் மனிதனாகப் பிறந்தவர் இவ்வுலகிலே வாழ வேண்டியவர். அவர்கள் வாழ்வியல் வகுக்கப்பட்ட ஒரு செல்நெறி என்பதை எல்லோரும் உணரவேண்டும். ஆனால் அச்செல்நெறி துன்பம் நிறைந்ததாக இருப்பின் மனிதவாழ்க்கை துன்பமானது என்ற முடிவையே எல்லோரும் எடுப்பர். எனவே இத்தகைய பிழையான முடிவை அவர்கள் எடுக்காவண்ணம் அவர்களை வழிநடத்த வேண்டியுள்ளது.

துன்பம் நேரும்போது ஒருவர் ஆறுதல் சொல்லவேண்டும். அப்படி ஒருவரும் இல்லையென்றால் என்ன செய்வது? அதற்கு ஒரு நல்ல வழியை நாவுக்கரசர் காட்டியுள்ளார். அவர் இவ்வுலகிலே 81 ஆண்டுகள் வாழ்ந்தவர். பல இழப்புக்களை ஏற்று வாழ்ந்தவர். [illegible] எதிர்கொள்ளும் துன்பங்களை வெல்ல இறைவழிபாடே ஏற்றதெனக் கூறுகிறார். மற்றவர்கள் வழிபடுவதைப் பார்த்திருந்து தான் இறைவனுக்கு அடியன் ஆனேன் எனக்கூறியுள்ளார். அவருடைய வாழ்வில் தமக்கையார் திலகவதியாரின் இறைவழிபாடுதான் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

சூலைநோயால் பீடிக்கப்பட்ட அவர் மிகவும் துன்புற்ற போது திலகவதியார் அப்பரை மீண்டும் சைவ வாழ்வியலில் ஈடுபடுத்தினார். அந்த அனுபவம் அப்பரை இறை வழிபாட்டிலே ஈடுபடுத்தியது மட்டுமன்றித் தேவாரம் பாடவும் வைத்தது. சிவனைப் பாடி யாடும் போது துன்பங்களை மறந்தார். மும்மூர்த்திகளில் சிவனே முதல்வன் என நன்குணர்ந்து கொண்டார். வழிபடுபவர்களுடைய இடர்களையெல்லாம் தீர்க்க வல்ல இறைவனைத் தில்லைக் கோயிலிலே கண்டார்.இடர் என்பது நாம் எதிர்பாராத போது திடீரென நமக்கு ஏற்படும் துன்பமாகும். குடும்ப உற வான தமக்கையாரைத் தனியே விட்டுச் சென்று தன் துன்பந்தீரச் சமண சமயத்தை அப்பர் சேர்ந்தார். அங்கு அவர் வாழ்வு மகிழ் வாக இருக்கின்ற போது திடீரெனச் சூலை நோயால் பீடிக்கப்பட்டார்.இது அவர் எதிர்பாராத போது அவருக்கு ஏற்பட்ட பெரிய இடராகும். சமணர்களின் வைத்திய முறைகளால் அப்பர் உடல் நலம் பெறவில்லை. இரவோடிரவாகச் சமணர் களுக்குத் தெரியாமல் தமக்கையாரிடம் வந்து விடுகிறார். சூலைநோயைத் தீர்க்குமாறு திருவீரட்டானத்திலே வீற்றிருக்கும் இறைவனை வேண்டி இனிய பதிகம் பாடிப் பரவுகிறார். பரவுதல் என்பது உடல் முழுவதையும் மண்ணிலே பரவவிட்டு வணங்குதல். அப்போது அவரைப் பீடித்திருந்த சூலைநோய் நீங்கி விடுகின்றது. ஏத்துவார் இடர்களைத் தீர்க்கின்ற இறையருள் அப்பரது நேரடி அனுபவமாகிறது. அதனைப் பாடலிலே பதிவு செய்து வைத்துள்ளார்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

தில்லைச் சிற்றம்பலத்திலே கூத்தாடும் இறைவனை அவர் வழிபடச் சென்ற போது அவர் பாடிய பாடல் இதனை நன்குணர்த்துகிறது. அப்பர் துன்பத்தைத் தீர்க்கத் திருக்கோயில் வழிபாடு செய்வதே சிறந்த வழியென்கிறார்.

**பார்த்திருந்தடியனே னான் பரவு**
**வன் பாடியாடி**
**மூர்த்தியே யென்பனுன்னை மூவரின்**
**முதல்வனென்பன்**
**ஏத்துவாரிடர் கடீர்ப்பாய் தில்லைச்**
**சிற்றம்பலத்துக்**
**கூத்தாவுன் கூத்துக் காண்பான்கூட**
**நான் வந்தவாறே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சம்பியன்ஸ் லீக் காற்பந்து போட்டியில் ...

பார்சிலோனா, மிலன் அணிகள் மோதிய ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் காற்பந்து தொடரின் லீக் போட்டி சமநிலையானது.

ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிளப் அணிகளுக்கு இடையில் சம்பியன்ஸ் லீக் காற்பந்து தொடர் நடைபெற்றுவருகிறது. இதன் எச் பிரிவில் நடந்த லீக் போட்டியில் பார்சிலோனா, மிலன் அணிகள் மோதின. இதன் முதல்பாதியின் 9ஆவது நிமிடத்தில் மிலன் அணியின் ராபின்கோ ஒரு கோல் அடித்தார்.

இதற்கு, பார்சிலோனா அணியினரால் பதிலடி கொடுக்க முடிய வில்லை. விறு விறுப்பான இரண்டாவது பாதியில் பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் மெஸ்சி (23ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்து கைகொடுத்தார். முடிவில் போட்டி 1-1 என சமநிலையானது.



## சாதனைக்குத் தயாராகும் தோனி

146 ஒருநாள் போட்டிக்கு தலைவராகப் பணிபுரிந்து புதிய சாதனைக்காக தயாராகி வருகின்றார் இந்திய அணித் தலைவர் டோனி . அவுஸ்திரேலியா - இந்திய அணிகளுக் கிடையிலான 4 ஆவது ஒருநாள் போட்டி தோனியின் 146ஆவது போட்டியாகும். இதன்மூலம் இந்திய அணிக்கு தலைவராக 2ஆவது இடத்தில் இருந்த கங்குலியை சமன் செய்தார். டோனி 146 ஆட்டத்தில் 84 வெற்றியை பெற்றுள்ளார். 50 ஆட்டத்தில் தோல்வி ஏற்பட்டது. 3 ஆட்டம் சமநிலையானது. 9 ஆட்டம் முடிவு இல்லை. கங்குலி தலைமையில் 146 போட்டியில் 76 ஆட்டத்தில் வெற்றி கிடைத்தது. 65 ஆட்டத்தில் தோல்வி ஏற்பட்டது. 5 ஆட்டம் முடிவு இல்லை.

அசாருதீன் தான் அதிக ஒருநாள் போட்டிக்கு இந்திய அணியின் தலைவராக பணி புரிந்துள்ளார். அவர் 174 போட்டிக்கு (90 வெற்றி, 76 தோல்வி, 2 சமநிலை, 6 முடிவு இல்லை) தலைவராக இருந்துள்ளார். 1990-1999 வரை அசாருதீன் தலைவராக இருந்தார்.

## சுவிஸ் டெனிஸ் காலிறுதிக்கு முன்னேறினார் பெடரர்



சுவிஸ் திறந்த டெனிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு, சுவிட்சர் லாந்தின் ரோஜர் பெடரர் முன்னேறினார்.

சுவிட்சர்லாந்தில் உள்ள பசல் நகரில், சுவிஸ் ஓபன் டெனிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், உஸ்பெகிஸ்தானின் டெனிஸ் இஸ்டோமினை எதிர்கொண்டார். முதல் செற்றை 4-6 என இழந்த பெடரர், இரண்டாவது செற்றை 6-3 என கைப்பற்றி பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செற்றில் மீண்டும் அசத்திய பெடரர் 6-2 என தன்வசப்படுத்தினார். இறுதியில் பெடரர் 4-6, 6-3, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில், குரோஷியாவின் இவான் தோடிக், ஜப்பானின் கெய் நிஷிகோரியை சந்தித்தார். அபாரமாக ஆடிய தோடிக் 6-1, 6-2 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

**போபண்ணா ஜோடி அபாரம் :**

இரட்டையர் பிரிவு முதல் சுற்றில், இந்தியாவின் ரோகன் போபண்ணா, பிரான்சின் ரோஜர் வாசலின் ஜோடி, போலந்தின் லுகாஸ் குபாட், இத்தாலியின் ஆன்டிரியாஸ் செப்பி ஜோடியை சந்தித்தது. முதல் செற்றை 5-7 என போராடி கோட்டைவிட்ட போபண்ணா ஜோடி, 2ஆவது செற்றில் எழுச்சி கண்டு 6-3 என கைப்பற்றியது.

வெற்றியாளரை நிர்ணயிக்கும் சுப்பர் டை பிரேக்கரில் அசத்திய இந்திய-பிரான்ஸ் ஜோடி 10-7 என வென்றது. இறுதியில் போபண்ணா-ரோஜர் வாசலின் ஜோடி 5-7, 6-3, 10-7 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு முன்னேறியது. காலிறுதியில் போபண்ணா ஜோடி, அவுஸ்திரேலியாவின் ஜூலியன் நோவ்லி, ஆலிவர் மராச் ஜோடியை எதிர்கொள்கிறது.



இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 4 ஆவது ஒருநாள் போட்டி தோனியின் சொந்த இடமான ராஞ்சியில் நடைபெற்றது.
இப்போட்டியை கண்டுகளிப்பதற்காக தனது குடும்பத்தின ருடன் வந்திருந்தார் தோனியின் மனைவியும் மொடல் அழகியுமான சாக்ஷி.

## ஊக்கமருந்து சர்ச்சையில் உசைன்போல்ட்?

குறுந்தூர ஓட்ட சாதனை வீரர் உசைன் போல்ட், ஒலிம்பிக் போன்ற சர்வதேச போட்டிகளில் இருந்து தடைவிதிக்கப்படும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

போதைப் பொருள் மற்றும் ஊக்கச் மருந்து குறித்து சர்ச்சைகளை கையாள்வதில், ஜமேக்கா காட்டுகின்ற பின்னடைவே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

உலக ஊக்கமருந்து தடை நிறுவகனத்தின் தலைவர் ஜோன் பாஹி இதனைத் தெரிவித்துள்ளார்.



## விஸ்டன் அணியில் சச்சினும்

'கிரிக்கெட்டின் பைபிள்' என்று அழைக்கப்படும் விஸ்டன் பத்திரிகை தொடங்கப்பட்டு 150ஆவது ஆண்டுக்கு அடியெடுத்து வைப்பதையொட்டி டெஸ்ட் போட்டியில் சிறந்த 11 வீரர்களை தேர்வு செய்து பட்டியலிட்டுள்ளது. கடந்த 136 ஆண்டுகளில் இதுவரை 2098 சர்வதேச டெஸ்ட் போட்டிகள் நடந்துள்ளன.

ஒட்டுமொத்த அளவில் அலசி ஆராய்ந்து, அதில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பட்டியலில் ஜாம்பவான் சச்சின் தெண்டுல்கருக்கு இடம் வழங்கப்பட்டுள்ளது. 40 வயதான டெண்டுல்கர் 200ஆவது டெஸ்டுடன் ஓய்வுபெறும் நிலையில் அவருக்கு இந்த கௌரவம் கிடைத்துள்ளது.

அதேசமயம் பிரையன் லாரா, ரிக்கி பொண்டிங், கலிஸ், சுனில் கவாஸ்கர், கபில் தேவ் போன்றவர்களுக்கு அணியில் இடமில்லை. விஸ்டன் அறிவித்துள்ள உலக டெஸ்ட லெவன் அணிக்கு டான் பிராட்மேன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**அணி விபரம்:** ஜேக் ஹோப்ஸ் (இங்கிலாந்து), டபிள்யூ.ஜி.கிரேஸ் (இங்கிலாந்து), டான் பிராட்மேன் (அவுஸ்திரேலியா, தலைவர்), சச்சின் டெண்டுல்கர் (இந்தியா), விவியன் ரிச்சர்ட்ஸ் (மேற்கிந்தியத் தீவு), கேரி சோபர்ஸ் (மேற்கிந்தியத் தீவு), ஆலன் கினோட் (இங்கிலாந்து), வசிம் அக்ரம் (பாகிஸ்தான்), ஷேன் வார்னே (அவுஸ்திரேலியா), மால்கம் மார்ஷல் (மேற்கிந்தியத் தீவு), சிட்னி பார்னெஸ் (இங்கிலாந்து).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர சமாதானத்திற்காக உதவுவதற்கு ஐ.நா. தயார்

இலங்கையில் நிரந்தர சமாதானம ஏறபடுத்தப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பு கோரியுள்ளது.

நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் மற்றும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை அமுல படுத்தல் போன்ற முனைப்புக்களுக்கு பூரண ஆதரவளிக்கப்படும் என ஐக கிய நாடுகள் அமைப்பு சுட்டிக்காட்டி யுள்ளது.

சர்வதேச பிரகடனங்களில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளதாக வும் இதன் அடிப்படையில் இலங்கையு டன் இணைந்து செயறபட உள்ள தாகவும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கை வதிவிடப் பணிபபாளர் சுபி னாய் நெண்டி தெரிவித்துள்ளார்.

ஐ.நா. தினத்தை முன்னிட்டு நடை பெற்ற நிகழ்வில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் பின்னரான மீள் குடியேற்ற நடவடிக்கைகளில் பாரி யளவு முன்னேற்றம் ஏற்பட்டுள் ளதாகத் தெரிவித்த நெண்டி,

இலங்கையில் நிரந்தர சமா தானத்தை ஏற்படுத்தி நல்லிணக் கத்தை உருவாக்க பூரண ஒத்து ழைப்பு வழங்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

# மனித உரிமை விவகாரம் குறித்து அனைத்து தரப்பினருடனும் பேச்சு


## ஆங் சான் சூ கீ கோரிக்கை

(லண்டன்)

இலங்கை மனித உரிமை விவ காரம் குறித்து அனைத்து தரப்பின ருடனும் பேச்சுவார்த்தை நடத்தப் பட வேண்டுமென பர்மாவின் எதிர்க கட்சித் தலைவர் ஆங்சான் சூ கீ கோரி யுள்ளார்.

பிரிட்டன் பிரதமர் டேவிட் கம ரூன் பொதுநலவாய நாடுகள் மாநா ட்டில் பங்கேற்று மனித உரிமை நிலைமை குறித்து கேள்வி எழுப்ப வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனுக்கு விஜயம் செய்துள்ள சூ கீ, பிரதமர் கமரூனை சந்தித்த போது இதனைத் தெரிவித்துள்ளார்.



அரசாங்கம் மட்டுமன்றி ஏனைய தரப்பினரின் நிலைப் பாடுகளையும் கேட்டறிந்து கொள்ள வேண்டியது அவசிய மானது என அவர் குறிப்பிட் டுள்ளார்.

இதேவேளை சூ கீயின் கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடி யது என பிரதமர் கமரூன் தெரி வித்துள்ளார்.

தொழிற்கட்சியின் வேண்டு கோளுக்கு ஏற்ப பொதுநல வாய நாடுகள் அரச தலைவர் கள் மாநாட்டை புறக்கணிக் கப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தற்போதைய மனத உரிமை நிலைமைகள் குறித்து திருப்தி அடைய முடியாது என அவர தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு சென்று மனித உரிமை நிலைமைகள் குறித்து கேள்வி எழுப்புவதே சரியான தீர்மானம் எனவும் மாநாட்டை புறக் கணிப்பது பொருத்தமாகாது எனவும அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை விஜயத்தின் போது மாநாட்டில் மட்டுமன்றி வடக்கிற்கும விஜயம் செய்ய உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## இலங்கை...

குப் போகவில்லை என்றால் யாருக்கு பாதிப்பு ஏற்படும் என்பதை யோசிக்க வேண்டும்.

கனடா தவிர ஏனைய உறுப்பு நாடு கள் பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கிறது. அதனால் பங்கேற் காத நாடு தனிமைப்படுத்தப்படும்.

தமிழர்களின் நிலை பற்றி தமிழக சட்டமன்றத்திற்கு தெரிய வில்லை. பிரதமர் மன்மேகன்சிங கின் பயணம் குறித்து இந்திய மத்திய அரசு மட்டுமே முடிவு செய்ய உரிமை உள்ளது என்று அவர் மேலும் தெரி வித்துள்ளார். (செ-11)

## வட மாகா...

யினை கூட்டமைப்பு கைப்பறறி னால் ஈழம் கிடைத்தது போனறாகி விடும் என்ற கூச்சல்களிற்கு மததி யிலும் த.தே.கூ. தேர்தலில் பெரு வெற்றி கொண்டு இன்று தமிழர் களிற்கான அரசொன்றினை வடக் கில் நிறுவியுள்ளது.

ஈழத்தமிழர்களுடைய இவ் வர லாற்று நிகழ்வின் முன்னாயத்த ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகியுள் ளன.

இந் நிகழ்வில் வடக்கின் அரச அதி காரிகள் உட்பட பலரும் கலந்து கொள் பவர்கள் என எதிர்பார்க்கப்படுகின் றது. (செ-4,6)

## அதிகளவான நிதியுத...

வித்தார். அங்கு அவா மேலும் தெரி விக்கையில், நாங்கள் போரின்போது அடிபட்டு, இடிபட்டு அல்லலுற்று வெளி வந்திருக்கும் ஒரு மாகாணம். எம்மை மற்றைய மாகாண மக்களுடன் சரிசமமாக வாழ வைப்பதானால் அதற்கான செலவுகள் மற்றைய மாகாணங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒதுக்கப்படும் நிதித் தொகையிலும் பார்க்க பன்மடங்காக உயர வேண் டும். இதைத்தான் முதலாவது கருத தாக உங்கள் கவனத்திற்குச் சமர்ப் பிககின்றேன். ஒரு தாயக்கு ஒன்பது குழந்தைகள் இருந்து ஒரு குழந்தை சற்று ஊட்டக்குறைவுடன் காணப் பட்டால் தாயானவள் அந்தக் குழந் தையைச் சற்றுக் கூடி சிரத்தையு டன் கவனிப்பாள். எனவே மத்திய அரசாங்கம் போரினால் பாதிக்கப் பட்டு பலவித அல்லல்களுக்கு உள் ளாகி இருக்கும் மக்களைப் பிரதி நிதித்து வப்படுத்தும் எமது வட மாகாண சபைக்கு போதுமான நிதி உதவிகளை ஒதுக்குவது உசிதம் என்று நினைக்கின்றேன்.

எமது வடக்கு மாகாணம் போரின பின்னர் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது அதனைக் கட்டியெழுப்புவது அம் மாகாணம் அமைந்திருக்கும் நாட்டின் தலை யாய கடமையாகும். அதற்கு ஈடு செய்யும் விதத்தில் மத்திய அரசாங கம் நடந்து கொள்ள வேண்டும் என்றும கேட்டுக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

## சர்வதேச விசாரணை...

பட்டதாகவும் பல ஆயிரக் கணக்கான மக்கள் காணாமல்போகச் செய்யப் பட்டுள்ளதாகவும் தகவல்கள் கூறு கின்றன.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரணை நடத்துவதற்கு எதிர் வரும் மார்ச் மாதத்துக்குள் இலங்கை அக்கறை காட்டாவிட்டால், சர்வதேச விசாரணை ஒன்று தேவைப்பட லாம் என்று ஐ.நா. மனித உரிமை கள் உயர் ஆணையர் நவநீதம் பிள்ளை கூறியிருக்கிறார்.

ஆனால் இலங்கை அரசாங் கம் தனது சொந்த விசாரணைகள் சுயாதீனமாக நடப்பதாக கூறிவரு கிறது.

இலங்கை மீதுள்ள மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் பற்றிய விசாரணைகளில் முன்னேற றம் இல்லையென்று சுட்டிக்காட்டி, கொழும்பில் நடக்கவுள்ள பொது நலவாய உச்சி மாநாட்டை அரசு தலை வர்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் சர்வதேச மட்டத் தில் பலமாக ஒலிக்கின்றமை குறிப் பிடத்தக்கது. (செ-11)

## எழிலன் வழக்கு...

சம்பவம் முல்லைத்தீவு மாவட்டத் தில் நடைபெற்றிருப்பதனால் அது குறித்து விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு முல் லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து இந்த வழக்கு நேற்று வியாழக்கிழமை முல் லைத்தீவு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது மனு தார்கள் சார்பில் ஆஜராகியிருந்த மூத்த சட்டத்தரணி கே.எஸ்.ரட்ண வேல், இந்த விசாரணைகள் துரி தமாக நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் கூறி, டிசம் பர் மாதம் 2 ஆம் 3 ஆம் திகதி களில் தொடர்ச்சியாக இந்த விசா ரணைகள் நடத்தப்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அதனை ஏற்றுக்கொண்ட முல் லைத்தீவு நீதவான் எம்.கணேச ராஜா, இந்த விசாரணைகள் டிசம் பர் 2 ஆம் 3 ஆம் திகதிகளில் நடை பெறும் என தெரிவித்துள்ளார்.

இதன்போது நீதிமன்றத்தில் அரச தரப்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி, இந்த விசாரணை களின்போது இராணுவத்தினர் சார்பில் ஆஜராகுவதற்கென சட்ட மா அதிபர் விசேடமாக ஒரு சட்டத் தரணியை அனுப்பி வைக்கவுள் ளார் என தெரிவித்துள்ளார். (செ-11)

## பொதுநலவாய மாநாட்டை...

இந்தியா எடுக்க வேண்டும் என்றும் கோரப்பட்டிருக்கிறது.

முதல்வர் ஜெயலலிதா தனது உரையில் 2009 ஆம் ஆண்டு, இலங்கை உள்நாட்டுப் போர் உச்சக் கட்டத்தில் இருந்த நிலையில் சர்வ தேச சட்டம் மற்றும் ஜெனிவா ஒப்பந் தத்தில் உள்ள போர் விதிமுறைகளை முற்றிலும் மீறி லட்சக்கண்க்கான அப்பாவி ஈழத் தமிழர்கள் கொல லப்பட்டார்கள். இனப்படுகொலை அங்கு நடந்தேறியது எனக் குற்றஞ் சாட்டினார்.

அப்பாவி இலங்கைத் தமிழர்கள் கொல்லப்படக் காரணமாயிருந்த வர்கள் போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப் படுத்த ஐக்கிய நாடுகள் சபையில் இந்திய அரசு வலியுறுத்த வேண்டும், இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவரும் தங்களது சொந்த இடங் களுக்கு திரும்பி சிங்களர்களுக்கு இணையாக கண்ணியமாக வாழ வகை செய்யும் வரையில் அனைத்து குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும் வரையில், மற்ற நாடுகளு டன் இணைந்து இலங்கை அரசின் மீது பொருளாதாரத்தடையை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் 2009 ஆம் ஆண்டு யூன் மாதம் 8 ஆம் திகதி சடடசபையில் கோரப்பட்டதை அவர் நினை வுகூர்ந்தார்.

மீண்டும் இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இலங்கையை நட்பு நாடு என்று செல்வதை இந்திய அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும். போர்க் குற்றங்கள் தொடர்பில் சுதந்திரமான, நியாயமான சர்வதேச புலன் விசா ரணை வேண்டும், தமிழர்கள் மீதான அடக்குமுறையை இலங்கை அரசு நிறுத்தும் வரை இலங்கை மீது பொரு ளாதாரத் தடை விதிக்கவேண்டும். ஈழத் தமிழர்களின் எதிர்கால நல னைக் கருத்தில் கொண்டு தனி ஈழம் குறித்து இலங்கை வாழ் தமிழர்களிட மும், புலம் பெயர்ந்தோர் மத்தியிலும் பொது வாக்கெடுப்பு கோரி ஐக்கிய நாடுகள் அவையின் பாதுகாப்புக் குழுவில் தீர்மானம் கொண்டுவர இந்தியா முன்முயற்சி எடுக்க வேண்டு மென வலியுறுத்தும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆனால் இவைகுறித்து இதுநாள் வரை இந்திய அரசு எவ்வித நட வடிக்கையையும் எடுக்கவில்லை எனக் குறைகூறினார்.

மேலும் இலங்கை அரசு அங்கு வாழும் தமிழர்களுக்குத் தேவை யான மறுவாழ்வுப் பணிகளை சரி வர மேற்கொள்ளவில்லை என்றும் தமிழர்கள் இரண்டாம் தரகுடிமக் களாக கருதப்படுவது தொடர்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இப் பின்னணியில் அடுத்த மாதத்தில் இலங்கை நாட்டில் நடை பெறும் பொதுநலவாய மாநாட் டினை வேறு நாட்டிற்கு மாற்றுவ தற்கான முயற்சிகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும் என்றும் இலங்கையில் நடைபெறும் இந்த மாநாட்டில் இந்தியா கலந்து கொள் ளக் கூடாது என வலியுறுத்தி கடந்த மார்ச் மாதமே பிரதமருக்கு கடிதம் எழுதியதையும் அவர் குறிப்பிட்டார்.

தமிழக மக்களின் உணர்வுகள் உட்பட, அனைத்து காரணிகளையும் பரிசீலித்து, இலங்கையில் நடை பெறும பொதுநலவாய மாநாட்டில் தான் கலந்து கொள்வது குறித்து ஒரு முடிவு எடுக்கப்படும் என்று இந்தியப் பரதமர் தெரிவித்துள்ளதாக ஊடகங் களில் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இந்த பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்று தமிழக மக்கள் வலியுறுத்தி வரும் சூழ்நிலையில், இந்தியப் பிரதமர் தன னுடைய பங்கேற்பு பற்றி மட்டும் கருத்து தெரிவித்துள்ளது தமிழக மக்களுக்கு பெருத்த ஏமாற்றத்தை அளித்துள்ளதாகக் கூறினார் ஜெயலலிதா.

இலங்கை பொதுநலவாய சாச னத்திற்கு முரணாக நடந்துகொள் வதாக சுட்டிக்காட்டி கனடா பிரதமரே நவம்பர் மாநாட்டினை புறக்கணிகக விருக்கிறார். அவருக்குப் பதிலாக வெளியுறவுத்துறை அமைச்சரின் நாடாளுமன்றச் செயலர் பங்கேற் பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர்கள் மிகக் குறைவாக வசிக்கும் கனடா நாடே இப்படி ஒரு முடிவெடுத்திருக்கும் நிலையில் இந்தியா இந்த மாநாட்டில் பெயரள விலும் கலந்து கொள்ளாது என்னும் தீர்க்கமான முடிவை இன்னமும் எடுக்காதது துரதிர்ஷ்டவசமானது. தமிழர்களின் உணர்வுகளுக்கு மத்திய அரசு சிறிதும் மதிப்பளிக்க வில்லை என்று வருந்தினார் ஜெயலலிதா.

காங்கிரஸ் உட்பட அனைத்து கட்சிகளின் ஆதரவுடன், ஒருமனதாக தீர்மானம் நிறைவேறியது. (செ-11)

## சட்டப்படி வெல்வோம்...

இந்த அறிவிப்பை வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி முன்னிலையில் முதலமைச்சர் விடுத்திருந்தார்.

வடக்கு மாகாண சபைக்கு தெரிவான உறுப்பினர்களுக்கான விசேட செயலமர்வு ஒன்று வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் நேற்றுக்காலை இடம்பெற்றது.

இதில் வடக்கு மாகாணத்தின் ஆளுநர், வடக்கு மாகாண சபை யின் பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஷ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாண சபையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கைப் பற்றிய பின்னர் இடம்பெற்ற முதலா வது பொது நிகழ்வில் வடக்கு ஆளு நரும் முதலமைச்சரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தச் செயலமர்வில் உரை யாற்றிய போது முதலமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தின் காணிகள் இன்று சூறையாடப்படுகின்றன. மக்களின் பாதுகாப்பு கேள்விக்கிட மாக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கு முகம் கொடுக்கவே சட்டவாக்கலில் மாகாணசபைக்கு பொலிஸ் அதி காரங்களும் காணி அதிகாரங் களும் கொடுக்கப்பட்டுள்ளன.

எனவே அவற்றை நாம் சட்டப் படி நடைமுறைப்படுத்தவுள்ளோம். எமது மத்திய அரசாங்கம் வடமா காண சபைக்கு இவ்வாறான அதி காரங்களைப் பகிர்ந்தளிக்க வேண் டிய அத்தியாவசியத்தை உணர்ந்து செயற்படுவார்கள் என்று நம்புகின்றேன்.

13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மத்திய அரசாங்கத்திற்குப் போதிய செல்வாக்கை கைவசம் வைத்துக் கொண்டே மேற்படி அதி காரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அவற்றை வழங்குவதில் மத் திய அரசாங்கம் தயக்கம் காட்டக் கூடாது. தயக்கம் காட்டுவதால் சிறு பான்மை மக்கள் தமது வாழ்க்கை யைச் சீரமைத்துச் செல்வதை மத் திய அரசாங்கம் விரும்பவில்லை என்ற ஒரு கருத்தை உலகறியச் செய்து விடும். எனவே அந்தப் பழிககு ஆளாவதைத் தவிர்த்து முன்னோக் கிச் செல்வோமாக என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்காக மடிந்த மறவர்களுக்கு கல்லறை அமைக்க மறவோம்

## ஹத்துருசிங்கவிற்கு கூட்டமைப்பு பதில்

எம் மக்களிற்காக உயிரிழந்தவர்களிற்கு நாம் கல்லறை அமைத்தே தீருவோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாகக் கூறியுள்ளது.

யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மஹிந்த கத்துருசிங்கவிற்கு எமது பிள்ளைகள் பயங்கரவாதியாக தெரியலாம்.

ஆனால் எமது மக்களின் உரிமைக்காகப் போராடியவர்கள் எமக்கு மாவீரர்களே என கூட்டமைப்பு கூறியுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில்,

எமது பிள்ளைகள் எமக்காய் போராடியவர்கள். மக்களிற்காய் தம் உயிரினைத் தியாகம் செய்தவர்கள். அரசிற்கு பயங்கரவாதியாக தெரியலாம். ஆனால் எமக்கு அவர்கள் மாவீரர்களே!

தமது மக்களின் இலட்சியத்திற்காகவும் உரிமைக்காகவும் போராடிய மாவீரர்களிற்கு அவர்கள் சார்ந்த மக்கள் கல்லறை அமைப்பதில் என்ன தவறுண்டு!

நீதி நியாயம் கேட்டு போராடிய எமது பிள்ளைகளிற்கு கல்லறை அமைப்பதனை யாரும் தடுத்துவிட முடியாது.

யாழ் மாவட்ட கட்டளைத் தளபதிக்கு எமது பிள்ளைகள் பயங்கரவாதிகளாகத் தெரியலாம். ஆனால் எமக்கு அவர்கள் இலட்சியவாதிகளாகவும் மாவீரர்களாகவுமே தெரிகின்றனர்.

ஹத்துருசிங்க கூறுவது வேறு நாம் கூறுவது வேறு. ஒரு இனத்திற்காக எவன் ஒருவன் போராடி உயிர் நீக்கிறானோ அவ்வினத்திற்கு அவன் மாவீரனே. அதனை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

தற்போது எமக்கு காலம் கனிந்துள்ளது. வடக்கு மாகாண சபையினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப் பற்றியுள்ளது. இருப்பினும் சில குறைபாடுகள் இம் மாகாணத்தில் உண்டு.

ஆகையினால் சரியானதொரு காலம் எமக்கு அமையட்டும். அதன்போது நிலையான கட்டடம் எமது மாவீரர்களிற்கு அமைப்போம்.

உலகம்முழுவதிலும அமைக்கப்பட்டுள்ள எமது மாவீரர்களின் நினைவிடங்கள் போன்று எமது மண்ணிலும் அமைப்பதற்கு எமக்கு உரிமையுண்டு.

தமிழர்களிற்கு என ஒரு காலம் நிச்சயம் வரும். அக்காலத்தில் எமது மாவீரர்களிற்கு கல்லறை அமைத்தே தீருவோம் என சுரேஸ் பிரேமச்சந்திரன் திடமாகத் தெரிவித்தார்.

(செ-4)


## நந்தினி என்ரபிறைஸ்





சகல றேசர் வகைகள்
லான்ட் மாஸ்ரர் உதிரிப்பாகங்கள்
டிறக்டர் உதிரிப்பாகங்கள் என்பவற்றுடன் சகல விதமான பெல்ற் வகைகளையும் பெற்றுக் கொள்ள

இல. 241, 239, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (ஆஸ்பத்திரி பின் வீதி)

(C-5279)


சுயதொழில்புரிவோருக்கான சம்மேளனம்

## முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம்



## பொதுக்கூட்டம் தொடர்பான அறிவித்தல்

கடந்த 09.10.2013 அன்று பத்திரிகையில் முச்சக்கரவண்டிகள் சங்க பொதுக்கூட்டம் 27.10.2013 அன்று நடைபெறும் என பிரசுரிக்கப்பட்டிருந்தது. அவ்விளம்பரத்திற்கும் கிளிநொச்சி மாவட்ட முச்சக்கரவண்டிகள் சங்கத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதினை தயவன்புடன் அறியத் தருகின்றோம்.

மேலும் கிளிநொச்சி மாவட்ட முச்சக்கரவண்டிகள் சங்க பொதுக் கூட்டம் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி அவர்களின் தலைமையில் எதிர்வரும் 26.10.2013 அன்று பிற்பகல் 2 மணிக்கு கரைச்சிப் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

தலைவர் (4345) செயலாளர்

## 31ம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில்
1964.02.28



ஆண்டவன் அடியில்
2013.09.26

## அமரர் முருகுப்பிள்ளை நிர்மலன்

(நிமோ, செந்தில்)
முள்ளியவளை

கடந்த 26.09.2013 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த அமரர் முருகுப்பிள்ளை நிர்மலன் அவர்களின் சிவபதப்பேறு குறித்த வீட்டுக்கிருத்திய கிரியைகள் 26.10.2013 சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னார் கடந்த 23.09.2013 அன்று எதிர்பாராத விபத்தில் சிக்கிய வேளை அதே இடத்திலிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலை வரை உதவி புரிந்த காவல்துறையினர், வைத்திய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், உறவினர்கள், கட்சித்தலைவர்கள், மற்றும் நண்பர்கள் அத்தோடு இறுதிக் கிரிகை வரை கலந்து கொண்டு இரங்கல் தெரிவித்த பாடசாலைச் சமூகங்கள், விளையாட்டுக்கழகங்கள், சமூக மட்ட அமைப்புக்கள், கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து அன்பு உள்ளங்களிற்கும் அன்னாரின் மரணச் செய்தி கேட்டு எம்முடன் தொலைபேசியூடாகவும், மின்னஞ்சலூடாகவும், குறுந்தகவலூடாகவும், துண்டுப்பிரசுரங்களூடாகவும், பதாதைகளூடாகவும், முகப்புத்தகத்தினூடாகவும் நேரிலும் எமக்கு ஆறுதல் அளித்த எண்ணிலடங்கா அனைத்து அன்பு உள்ளங்களிற்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொன்னகர் வீதி,
01ம் வட்டாரம்
முள்ளியவளை

குடும்பத்தினர்
077 2999669
077 4553505
021 206 1081

(4349)


## சிறந்த வடிவமைப்பாளராக... (Graphic Designer)

நீங்களும் சிறந்த வடிவமைப்பாளராகி மாதம் 25,000/- க்கு மேல் சம்பாதிக்க வேண்டுமா? தற்போது நல்ல தொழில் வாய்ப்புள்ள வடிவமைப்பாளர் துறையில் நீங்களும் ஒரு சிறந்த வடிவமைப்பாளராக, அத்துறையில் 10 வருடத்திற்கும் மேல் அனுபவத்துடன் தற்போதும் அத்துறையில் பணியாற்றி வரும் ஒருவரால் (Photoshop CS6, CorelDraw, Page Maker) தொழில் ரீதியாக குழுக்களாகவோ, தனியாகவோ உங்கள் இடங்களிலேயே பயிற்சிபெற விரும்பினால் **071 90 17 276** எனும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும். (4352)


அமரர் சுவாமிநாதன் சிறிபாஸ்கரன் அவர்களின்

## 14-வது சிரார்த்ததினம் நிகழ்வு

இடம் : அமரர் சு. சிறிபாஸ்கரன் கலாசார மண்டபம்
R.D.S. K.K.S. ROAD, மல்லாகம்.

காலம் : 26.10.2013 சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு

தலைவர் : **சி. விக்னராசா** ஓய்வு நிலை முகாமையாளர்
இலங்கை வங்கி யாழ்ப்பாணம்.

பிரதம விருந்தினர்
**திரு. M. திருநாவுக்கரசு**
விகடகவி யே.பி.யு.எம், சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும்
ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி

சிறப்பு விருந்தினர்
**யஸ்ரின் ஞானப்பிரகாசம்**
குருமுதல்வர் மறைமாவட்டம் யாழ்ப்பாணம்

**சோ. சுகிர்தன்**
தலைவர் - பிரதேசசபை வலிவடக்கு

கௌரவ விருந்தினர்
**பொன் பாலகுமார்**
முகாமையாளர் - இலங்கை வங்கி, சுன்னாகம்

அன்று காலை நிகழ்வாக அமரர் பாஸ்கரன் விளையாட்டரங்கில் அமைந்துள்ள அன்னாரின் நினைவுத்தூபிக்கு அன்னாரின் மனைவி திருமதி பாலாம்பிகை பாஸ்கரன் அவர்கள் மாலைசூட்டி வணக்கம் செலுத்தலும், மல்லாகம் வாழ் முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுப் போட்டியும், துடுப்பாட்ட போட்டியும் நடைபெறும்.

அனைவரையும் வரவேற்கின்றோம்.

(4347) சி. விக்னராசா
விழாத் தலைவர்.


இங்கிலாந்தில் கடமையாற்றும் இருதய சத்திரசிகிச்சை நிபுணர் **Dr.** ரவிப்பிள்ளை **FRCS** அவர்கள் நாளை சனிக்கிழமை (26.10.2013) அன்று காலை 10.00 மணிக்கு ***இருதய சத்திர சிகிச்சைக் கிளினிக் 342, பலாலி வீதி, திருநெல்வேலியில்*** அமைந்துள்ள ***நொதன் சென்றல் வைத்தியசாலை*** யில் நடாத்தவுள்ளார்.

அவருடைய ஆலோசனை மற்றும் சிகிச்சை பெற விரும்புபவர்கள் முன்கூட்டியே பதிவு செய்ய பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தொலைபேசி : 0771819988**

(C-5268)

## YAMAHA தீபாவளி





விசேட விலைக்கழிவு

நீங்கள் விரும்பும் YAMAHA மோட்டார் சைக்கிள் இப்போது புதிய வர்ணங்களிலும், புதிய விலைகளிலும்.

| | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| Ray | - 215,000.00 | - 211,000.00 |
| SZ-X | - 316,000.00 | - 278,000.00 |
| SZ-R | - 326,000.00 | - 298,000.00 |
| FZ-16 | - 375,000.00 | - 335,000.00 |
| FZ-S | - 399,000.00 | - 347,000.00 |
| Fazer | - 436,000.00 | - 393,000.00 |

கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

உங்கள் தெரிவுகளுக்கு இன்றே முந்துங்கள்

A.M.W. (Pvt) Ltd இன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

## டிஜிற்றல் எலக்ரோனிக்ஸ்

62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
0776623824 / 2224040

பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
0779893343.

(C-5277)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.